மங்கையர் மலர்

ஏப்ரல் 85 ரூ. 2.



மங்கையர் மலருக்குப் போட்டிக் கூப்பன்கள் வந்து குவிந்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். வாசகிகளிடமிருந்து எரிவாயுப் போட்டிக்கு அத்தனை வரவேற்பு! 5000–க்கும் மேற்பட்ட கூப்பன்கள் வந்தன. அவற்றில் பத்துக் கேள்விகளுக்கும் சரியான பதிலை எழுதியிருந்தவர்கள் 34 பேர். இந்த முப்பத்தி நான்குக் கூப்பன்களைக் குலுக்கிப் போட்டதில் முதல் பரிசான இரண்டு பர்னர் எரிவாயு ஸ்டவ் பரிசு பெறுபவர்:—

திருமதி நிர்மலா முருகன்,
24, வி. கே. வி. நகர்,
என். ஜி. ஜி. ஓ. காலனி,
கோயம்புத்தூர்—22.

இரண்டாம் பரிசான ஒரு பர்னர் எரிவாயு ஸ்டவ் பரிசினைப் பெறுபவர்:—

திருமதி. கோமதி சுதர்சன்,
24—32/3, விஷ்ணுபுரி காலனி,
ஆர். கே. நகர், மலிகார்ஜ் கிரி,
ஹைதராபாத்—500 047.

ஏப்ரல் மாதம்—

எரிவாயுப் போட்டிக்கான கேள்விகள்

1. எரிவாயு எந்த நிறத்தில் இருக்கும்?
2. எரிவாயு காற்றைவிட லேசானதா, கனமானதா?
3. எரிவாயு விஷத்தன்மை உடையதா?
4. எரிவாயு தானே எரியும் தன்மையுடையதா அல்லது காற்றுடன் கலந்தே எரிகிறதா?
5. நாம் உபயோகிக்கும் எரிவாயு சிலிண்டர், ஸ்டவ்வில் முக்கியமான பாகங்கள் எத்தனை?
6. எரிவாயு சிலிண்டரில் தீர்ந்து விட்டதை எளிதாக எப்படி அறிந்து கொள்ளலாம்?
7. இணைப்பு ரப்பர் குழாய்களின்மேல் உலோகக் குழாய்களைச் சிலர் பொருத்துகிறார்களே, இது சரியா?
8. எரிவாயு தீர்ந்து போன சிலிண்டர்கள் அபாயமற்றதா?
9. எரிவாயு மணமுள்ளதா?
10. சமையல் எரிவாயுவை இந்தியாவில் எந்தெந்தக் கம்பெனிகள் விநியோகிக்கின்றன?

எரிவாயுப் போட்டி

இருபது ரப்பர் இணைப்புக் குழாய்களைப் பரிசாகப் பெறுபவர்கள்:—

1. லலிதா பாஸ்கரன், சென்னை—34.
2. வி. கே. வேணி, பெங்களூர்—25.
3. லக்ஷ்மி பத்மனுபன், திருச்சி—14.
4. ராணி கிருஷ்ணமூர்த்தி, மதுரை—14
5. ஜே. மஹேன்மணி, ஈரோடு—3.
6. ஆர். வசந்தி, சென்னை—5.
7. சசிசங்கர், மயிலாடுதுறை.
8. புவனேஸ்வரி நடராஜ், சென்னை—57.
9. லட்சுமி ராமமூர்த்தி, சென்னை—20.
10. விஜி கண்ணன், ஹோசூர்.
11. கனகா சங்கர், சுசீந்திரம்.
12. ஆர். கிருஷ்ணகுமாரி, சென்னை—40.
13. விஜயா, சென்னை—34.
14. ஜெயலட்சுமி பாலசுப்ரமணியன், புது பம்பாய்.
15. கீதா ஸ்ரீ நிவாஸன், வேலூர்—9.
16. ரக்மா பாலமானு, பம்பாய்—68.
17. டி. சீதாலட்சுமி, பொள்ளாச்சி.
18. பாரதி சம்பத், பெங்களூர்—5.
19. ராஜம் சர்மா, சென்னை—41.
20. வசந்தா சாரி, காகினடா—3.

ஏப்ரல் மாதப் போட்டிக்குக் கடைசி தேதி: 15.4.85.

1. இணைக்கப்பட்டுள்ள கூப்பன்களுடன் மட்டுமே விடைகள் வர வேண்டும்.
2. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
3. எரிவாயுப் போட்டி, மங்கையர்மலர், கிண்டி, சென்னை—32 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

எரிவாயுப் போட்டிக் கூப்பன்

—ஏப்ரல் மாதப் போட்டிக்கு விடைகள் அனுப்பியுள்ளேன். என்னுடைய முகவரி:

. . . .

. . . .

. . . .

கையெழுத்து.

எரிவாயுப் போட்டிக்கு ஸ்டவ்களையும், ரப்பர் குழாய்களையும் பரிசளிப்பவர்கள்:—

Superflame, Padmini, Nutan Balaji, Niky Tasha, Sun flame, Laxmi Deluxe, 'Besant' Brand LPG Tubes.

(போட்டியின் முழு விவரங்களுக்கு மார்ச் '85 மங்கையர் மலர் காண்க.)

இது ஒரு உண்மைக் கதை. பெயர்களைத் தெரிவிக்காமல் சொல்லப்படும் பச்சை உண்மைகள்.இப்படி இன்னும் எத்தனைப் பெண் மணிகள் நம் சமுதாயத்தில் அல்லல்படுகிறார்களோ? ஆனால் இவரைப் போல எத்தனை பேர் தைரியமாக இருப்பார்கள்?

அந்தப் பெண்மணி என்னை வந்து சந்தித்தபோது அவருக்குள் இத்தனை தீரமான கதையொன்று ஒளிந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

சலவை மடிப்புக் கலையாத புடவை, சட்டை; சிரித்த முகம், கலகலப்பான பேச்சு... இவர் வாழ்க்கையில் இத்தனை கொடுமைகளா ...? இவரால் எப்படிச் சிரிக்க முடிகிறது?

கணவர் பெரிய உத்தியோகத்தில் இருப்பவர். இரண்டு பெண்கள், இரண்டு பையன்கள். எல்லோரும் இவரை வீட்டிற்குள்ளேயே ஒதுக்கி வைத்து, எதிரியாகப் பாவித்து அவரே வேலை செய்து வயிற்றைக் கழுவிக் கொள்ளும் நிலைக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

இவர் செய்த தப்பெல்லாம் என்ன?

"நாத்தனார் பையனுக்கு மூல நட்சத்திரமா இருந்தது. 'மாமியாரை மூலையில் தள்ளிடும்'னு சொல்லுவாங்க. அதனாலே என்னோட கணவர் எங்க மூத்த பொண்ணுக்கு நாத்தனார் பையனை நிச்சயித்தப்ப வேண்டாம்னு சொன்னேன். இவ்வளவுதான் நான் செஞ்ச தப்பெல்லாம்..."

"பெண்ணே பெண்ணுக்கு எதிரி" என்பார்கள். அது இவரைப் பொறுத்தவரை மிகச் சரியாகப் போனது. ஏற்கனவே இவரைக் கண்டால் வெறுப்பை வளர்த்துக் கொண்டிருந்த மாமியார், மகனுக்கும், மகளுக்கும் தூபம் போட்டாள். விளைவு, மருமகள் நிஜமாகவே 'மூலைக்குப் போனது' தான்!.

"என்ன மாமி வீடு திறந்து கிடக்கு. இன்னும் நீங்க கிளம்பாம என்ன செய்யறீங்க என்று கேட்டுக் கொண்டே பக்கத்து வீட்டு மாமி உள்ளே நுழைந்தார்.

"எங்கே?" என்றேன் புரியாமல்.

"என்னது இப்படிக் கேட்கறீங்க. திருப்பதில உங்க பொண்ணுக்குக் கல்யாணம் இல்லியோ?" என்றாள்.

என் தலையில் இடியே இறங்கியது போலிருந்தது."

அந்தத் தாய்க்கு எப்படி இருந்திருக்கும்? பெற்று இருபது வருடம் வளர்த்த அந்தத் தாய்க்குத் தெரியாமல் பெண்ணுக்குக் கல்யாணம்! 'இவன் எங்கள் மகனை வேண்டாம்னுதானே சொன்ன? இவனே வேண்டாமல் செய்து விடுகிறோம்' என்று மாமியாரும் நாத்தனாரும், கணவரும் வன்மம் கட்டிச் செய்த வேலை!

"அவர்கள் என்ன மாயம் செய்தார்களோ? நான் பெற்ற குழந்தைகள் கூட' என்னிடம் அப்புறம் ஒட்டவேயில்லை. கல்யாணத்திலிருந்து திரும்பி வந்த குழந்தைகளோ, அவரோ என்கிட்டே பேசவேயில்லை.

அப்புறமா எனக்குச் சமையல் ரூமுக்குப் போகவே பிடிக்கவில்லை. பெண்டாட்டிங்கிற ஸ்தானமோ, அம்மாங்கிற மதிப்போ, அன்போ இல்லாத வீட்டிலே நான் ஏன் இழுத்துப் போட்டுண்டு எல்லாத்தையும் செய்யணும். மனசுக்கு வெறுப்பாயிடுத்து. அதற்கப்புறம் நான் சமைக்கலே. அவங்

இவர் ஒரு முன்னோடி!

"ஒரு நாள் நான் வடாம் உலர்த்தறத்துக்கு மாடிக்குப் போயிட்டேன். ரெண்டு படி மாவையும் பிழிஞ்சுட்டுக் கீழே வரேன், சந்தடியேயில்லை. அதே சமயத்திலே என் ரெண்டாவது பிள்ளை வேகமா வெளியிலிருந்து வந்தான்.

"என்னடா, உங்கப்பால்லாம் எங்கடா" ன்னேன். "இரு வரேன்" என்று சொல்லிவிட்டு ரூமிற்குள் நுழைந்து எதையோ எடுத்துக் கொண்டு பறந்து விட்டான். எனக்கு ஒண்ணும் புரியலே. சமைச்ச சாதம்லாம் அப்படியே இருக்கு. நானும் எல்லாரும் வரட்டும் என உட்கார்ந்திருந்தேன்.

களும் கேட்கலே. நானே ஒரு ரூமில் முடங்கிக் கொண்டேன். எனக்குன்னு தனியா சமைச்சுக்க ஆரம்பித்தேன். அவங்களும் ரொம்ப நல்லதாப் போச்சுன்னு இருந்து விட்டார்கள்.

நான் அப்படி இருக்கும் போதே பிரமோஷன் வந்து அவர் வெளியூர் போனார். பிள்ளைக்கு வெளியூர்ல நல்ல வேலை கிடைச்சுப் போனான். ரெண்டாம் பொண்ணுக்கும் கல்யாணம் நிச்சயமானது!

மஞ்சுளா ரமேஷ்

ஆமாம், இந்தப் பெண்ணின் கல்யாணம் கூட அந்தத் தாயாருக்குத் தெரியாமல் நிச்சயமானதுதான். ஆனால் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் "பெத்த தாயாரும் கன்னிகாதானத்துக்கு இருக்கணும். அப்பத்தான் கல்யாணத்திற்கு ஒத்துப்போம்" என்றார்களாம். இந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட புண்ணியவான்கள்!

கணவனாகப்பட்டவர் இந்த விஷயத்தை யாருக்கோ சொல்வது போலச் சொல்லி விட்டு போனார். பெத்த வயிறாயிற்றே! சுயகௌரவம் பார்க்க முடியவில்லை. "என்னால் பெண் கல்யாணம் நிற்க வேண்டாம்" என்று போனது.

"அங்க நான் பந்தல்லே நிக்கிறேன், எத்தனையோ 'தாயார்கள்' நிற்கிறார்கள்! 'இந்தக் குங்குமம் வை', 'வெத்திலே பாக்கு கொடு' என்று எனக்கு உத்தரவுகள். சொன்னதை 'பொம்மை' போலச் செய்து விட்டு வந்தேன். அப்புறம் இரண்டாம் பிள்ளை ஒருத்தன்தான் இப்ப இருக்கான். நான் ஒரு ரூம்ல. மத்த இடம் அவனது. ஒரு வார்த்தை பேசறதில்லே. தூங்கறது கூட எல்லா ரூமையும் பூட்டிண்டு தூங்கறான்.

நடு நடுவிலே வர்ற புருஷன் கிட்டே நான் என்னோட நிலைமை என்னன்னு கேட்டா கையிலே எது கிடைக்கிறதோ அதை எடுத்து அடிப்பார்."

"கவலைப் படாதீர்கள். சாதாரணமா பிள்ளைகளுக்குப் பாசம் இல்லையென்றால் கூட பெண்களுக்குப் பாசம் போகாது. ஒரு குழந்தைக்குத் தாயாகும்போது தன் பெத்தவளின் பெருமை உணருவார்கள். நிச்சயமா உங்கள் பெண்களுக்குக் குழந்தை பிறக்கும் போது அவர்கள் திருந்தி விடுவார்கள், பாருங்களேன்..." என்றேன் ஆறுதலாக.

அந்தப் பெண்மணி சிரித்தார். "மூத்த பொண்ணுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கு. ரெண்டாவது பொண்ணுக்குச் சீமந்தம் நடந்தாச்சு."

நான் என்ன சொல்ல?

அவர் தொடர்ந்தார்.

"என்னைப் பிடிக்கலேன்னு தனியா விட்டுட்டாக் கூட நான் கவலைப்பட மாட்டேன். என் பொழப்பை நான் பார்த்துப்பேன். அதுக்கும் எவ்வளவு இடைஞ்சல் தர முடியுமோ, அவ்வளவும் தராங்க.

எனக்கு ஹிந்தி, சமஸ்கிருதம் தெரியும். எல்லார் வீட்டுக்கும் போய் 'நான் டியூஷன் சொல்லித் தரேன்; உங்கள் குழந்தைகளை அனுப்புங்கள்' என்றேன். அப்படி வந்தவர்களை கன்னாபின்னாவென்று திட்டி அனுப்பினான் என் பிள்ளை.

அவ்வளவுதானே? இப்பொழுது நானே வீடு வீடாகப் போய்ப் பாடம் சொல்லித் தரேன். தையலோ, பொம்மை செய்தலோ, எது வேணும்னாலும் சொல்லித் தரேன். எப்படியோ என் ஒரு வயிறு கஞ்சிக்குப் போயிண்டு இருக்கு..."

இந்தக் கொடுமையான வாழ்க்கையினைக் காணச் சகிக்கவில்லை ஒரு பெண் வழக்கறிஞருக்கு.

"நான் இவங்களோட ஒன்றரை வருஷமா பழகறேன். அவங்க திட்டற திட்டும், படுத்தற கொடுமையும் சகிக்க முடியலே. என்னையே கூட பலமுறை அவமானப் படுத்தி அனுப்பியிருக்காங்க. ஒரு தட்வை இவங்க புருஷன் இரும்புத் தண்டாலே அடிச்சு மயங்கி விழுந்துட்டாங்க. யாருமே கண்டுக்கலே. நாங்கள்ளாம் சேர்ந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்திட்டுப் போனோம்.



இவங்க கால்வலி தாங்காம துடிக்க நான் வெந்நீர் பாட்டில் ஒத்தடம் கொடுத்தேன். அப்ப அவங்க பொண்ணு குழந்தைங்களோட வந்திருந்தா. இந்தப் பக்கம் எட்டிக் கூடப் பாக்கலே."

இப்படியும் குழந்தைகளா என்று வியப்பாகத்தான் இருக்கிறது.

அந்தப் பெண் வழக்கறிஞரின் தூண்டுதலால் ஜீவனாம்ச வழக்குத் தொடர்ந்தார் அந்தப் பெண்மணி. கணவராகப் பட்டவர், "நீ என்ன வேணும்னாலும் செய்; நான் கோர்ட்டுக்கு வர மாட்டேன்" என்றுத் திட்டித் தீர்த்து விட்டுப் போனார்.

வீட்டிற்கு சமரசம் செய்ய வந்த வழக்கறிஞர் உதவிக் குழுவையும் மதிக்கவில்லை. கோர்ட்டிலிருந்து வந்த அழைப்பையும் ஏற்கவில்லை.

"என் புருஷன் வர்ற மே மாதம் ரிடையர் ஆகப் போகிறார். அப்போ குவார்ட்டர்ஸை காலி பண்ணணும். அதனால நானே அதற்குள்ள வெளியேறி என் வாழ்க்கையை அமைச்சுக்கணும்.

அதுக்கும் முன்னாடி என்னோட வாழ்க்கையை, வெற்றியை எல்லாருக்கும் தெரிவிக்கணும்னு ஒரு வெறி. இப்படிக் கொடுமைகள் செஞ்சா இவ தற்கொலை பண்ணிப்பான்னுப் பார்த்துச் சந்தோஷப்பட காத்திருந்தவனுக்கு எதிரா நான் நல்லா இருக்கேன். தைரியமா இருக்கேன். அழறது இல்லே. நல்ல டிரெஸ் பண்ணிக்கிறேன். இன்னும் நல்லாவே இருப்பேன். இதையெல்லாம் உங்ககிட்டே சொல்லணும்னு தான் வந்தேன்.''

என்று அமைதியாகப் புன்னகையுடன் முடித்த அந்தப் பெண்மணியைப் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது. மண்ணெண்ணெயிலும், காஸிலும் எரிந்து போகும் பெண்மணிகள் இவரைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும்; வாழ்க்கையைத் தைரியமாக நிமிர்ந்து பார்த்தால் எந்த உயரத்திற்கும் போகலாம் என்பதற்கு இவர் ஒரு சான்று.

கொடுமையே நாணி ஓட வேண்டும் நம் பெண்களைப் பார்த்து. புதுமைப் பெண்ணின் உலகம் அங்கே புன்னகைக்கும்.



''அம்மாடி, குழந்தைகளுக்குப் பள்ளிகளில் லீவு விட்டு விடப் போகிறார்கள். இந்த இரண்டு மாசம் இவர்களை வீட்டில் வைத்துக் கொண்டு எப்படித்தான் மேய்க்கப் போகிறேனோ?'' என அங்கலாய்க்கும் அம்மாக்கள் கொஞ்சம் கவனியுங்கள் —

உங்கள் குழந்தைகளுக்கு அழகிய கைவேலைப்பாடுகளைச் சொல்லித் தந்து, அவர்களுடைய நேரத்தை நல்ல விதத்தில் செலவழிக்கச் செய்ய சென்னை முழுவதும் நாற்பத்திரண்டு கைத்தொழில் ஆசிரியர்கள் காத்திருக்கிறார்கள்!


சமீபத்தில் 'பெவிகால்' கம்பெனியினர் கைவேலைப்பாடுகளில் ஆர்வமுள்ள பெண்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்றது. அவர்களில் சென்னையில் வெவ்வேறு பகுதிகளில் வசிப்பவர்களாக உள்ள நாற்பத்திரண்டு பெண்களைத் தேர்ந்தெடுத்து மூன்று மாதம் பயிற்சியளித்தது.

நூலை உபயோகித்து பொம்மை செய்தல், நெட்டி வேலைப்பாடு, அலுமினியத் தகடுகளில் வேலைப்பாடு, வீணாகும் துணிகளைக் கொண்டு பொம்மைகள் செய்தல், பூ, பொம்மைகள் செய்தல்; 'வேஸ்ட்' என வீட்டில் தூக்கி எறியும் பொருட்களை அழகிய காட்சிப் பொருளாகத் தயாரித்தல் எனப் பலவற்றையும் சொல்லித் தந்திருக்கிறார்கள்.


சமீபத்தில் இந்தப் பெண்கள் செய்த கைவினைப் பொருட்களைக் கண் காட்சியாக வைத்திருந்தார்கள். அலுமினியத்தில் செய்த அனுமார் ஓவியம், மண்ணில் செய்யப்பட்ட இயற்கைக் காட்சிகள் போன்றவை மிக அற்புதமாக இருந்தன. இவை யாவும் பெவிகால் கொண்டு ஒட்டிச் செய்யப்பட்டவை.

இந்தப் பெண்கள், உங்கள் குழந்தைகளுக்கும் தாங்கள் கற்றவைகளைச் சொல்லித் தர ஆர்வமாக இருக்கிறார்கள். வீட்டில் லூட்டி அடிக்கும் சிறுவர்களை இவர்களிடம் அனுப்பி வையுங்கள். இந்தப் பெண்களின் முகவரி வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி —

Parekh Marketing Pvt. Ltd.,
244, Lloyds Road, Gopalapuram,
P.B. No. 4913, Madras-86.




உங்கள்
குடும்பத்தின்
திட்டமிட்ட பரிபூரண உணவு
இப்போது
ஃபேமிலி பேக்கிலே
சாக்கலேட் சுவை காம்ப்ளான்
இப்போது 1 கிலோ பேக்கிலே!
இரண்டு 500 கிராம் பேக்குக்குப் பதிலாக இப்போது வாங்குங்கள் புதிய 1 கிலோ காம்ப்ளான் பேக், 4 ரூபாய் மிச்சமாக்கிடுங்கள். அத்துடன், உங்களுக்குக் கிடைக்கிறது கவர்ச்சிகரமான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர்-இலவசமாக!
காம்ப்ளான் ஒன்றுதான் உங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது—கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், தாதுக்கள், மற்றும் மிகச்சிறந்த புரதமான பால்புரதம் (20%)
உங்கள் குடும்பத்தினருக்கு அன்றாடம் அளியுங்கள் இருவேளை காம்ப்ளான்.
இலவசம்!
பெற்றிடுவீர்
கவர்ச்சிகரமான
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் டம்ளர்
1கிலோ
பேக்குடன்
Complan
Glaxo
Complan®
COMPLETE PLANNED FOOD
CHOCOLATE FLAVOUR
Special Offer!
காம்ப்ளான்® - திட்டமிட்ட பரிபூரண உணவு
உடல் நலத்தின்
உறைவிடம்
க்ளாக்ஸோ
GK&E.B86.GLC.11.Tm-R



விபரங்களுக்கு:
அருகில் உள்ள சுகாதாரத்
துணை நிலையத்தை அல்லது
ஊட்டச் சத்து மையத்தை அணுகுங்கள்

தொடர்புப்பிரிவு :
தமிழ்நாடு ஒருங்கிணைந்த
ஊட்டச் சத்துத்திட்டம்
சென்னை-600 018.

DIPR-1021/85 EFFICIENT

இவர்கள் உதவுகிறார்கள்

ஒரு பக்கம் —

பண வசதியால் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு அரசாங்கம் உதவுகிறது. பணக்காரர்களுக்குப் பணம் புரளுகிறது. நடுவே பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர வர்க்கத்தினர் தான். அவர்களால் யாரையும் போய்க் கேட்கவும் முடியாது. அதற்காகக் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்கவும் முடியாது...

இன்னொரு பக்கம் —

வியாபாரநிறுவனங்களுக்கு, பொதுப் பிரச்னைகளுக்கு வங்கிகளோ, சமூக நிறுவனங்களோ உதவி செய்கின்றன. ஆனால் அன்றாட வாழ்க்கைப் பிரச்னையில் சிக்கித் தவிக்கும் தனிப்பட்ட இல்லங்களுக்கு யார் உதவுவார்கள்?

'நாங்கள் உதவுகிறோம்' என்று முன் வந்திருக்கிறது 'ரெடி மணி'. இவர்கள் குடும்பப் பிரச்னைகளுக்கென பல்வேறு உதவித் திட்டங்களை வைத்து 'உதவும் குடும்ப அங்கத்தினராகச் செயல்படுவது ஆச்சரியமாக இருக்கிறது. மீதி கலந்துரையாடலில்.

உரையாடலில் கலந்து கொண்டவர்கள்:
எழுத்தாளர் லக்ஷ்மி
பாகீரதி நடராஜன்
இலகவதி மோஹன்
சந்திரா கிருஷ்ணமூர்த்தி
சாரதா வெங்கட்ராமன்
ரெடிமணி சார்பாக திரு. மோகன்,

டைரக்டர், தி ரிலையபிள் ஹையர் பர்சேஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

திரு மோகன்: ரெடிமணியின் முக்கிய நோக்கமே நடுத்தர வர்க்கத்தினருக்கு உதவ வேண்டும் என்பதுதான். தங்கள் வருமானத்திற்குத் தகுந்து செலவைக் கட்டுப் படுத்த முடியாமல் தத்தளிக்கும் பொழுது, ஒரு பாலமாக அமைந்து உதவி செய்கிறோம். கல்யாணம், வீடு கட்டுதல், குழந்தைகளின் படிப்பு, மருத்துவ உதவி — போன்ற இன்றியமையாத நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி செய்யும் திட்டத்தை எங்கள் உறுப்பினர்களுக்காக உருவாக்கியுள்ளோம். மிகச் சிறந்த வசதிகளையும், சிகிச்சை முறைகளையும், மருத்துவ சாதனங்களையும் உடையது என்பதால், "அப்பொல்லோ" மருத்துவ மனையுடன் மருத்துவ வசதிக்காக இணைந்திருக்கிறோம்.

உங்களிடம் நிதியுதவி பெற என்னென்ன நிபந்தனைகள் வைத்திருக்கிறீர்கள்?

மோ.: பிடித்தம் போக கைக்கு வரும் மாத வருமானத்தைக் கணக்கில் கொள்கிறோம். "ஹாப்பி ஹோம்" என்ற திட்டத்தின் கீழ் கணவன் — மனைவி, இவர்களின் திருமணமாகாத மகன், மகள் இவர்களின் 6 மாத வருமானம் கணக்கில் கொள்ளப் படும். அப்படி கணக்கிடப்பட்டு வரும் தொகையை அவர்களுடைய 'லிமிட்'டாக நிர்ணயிக்கிறோம். முதலில் 550 ரூபாய் கட்டி மெம்பராக வேண்டும். அப்படி மெம்பரானவர்களுக்கு ஒரு கார்டு தருகிறோம்.

லக்ஷ்மி: இதற்கு வட்டி என்ன விகிதத்தில் வாங்குகிறீர்கள்?

மோ: 14%. இதுவே குறைந்த வட்டி விகிதம்தான். எங்களைப் போன்று இந்த அளவிற்குக் குடும்பப் பிரச்னைகளுக்கு உதவி





செய்ய வேறு எந்தப் பொது நிறுவனமும் இல்லையென்றே நினைக்கிறேன்.

ல: மெம்பர் ஆவதற்கு எவ்வளவு கட்ட வேண்டும்?

மோ: இதற்கு முதலில் ரூ 550 கட்டி மெம்பராக வேண்டும். 3 வருடத்திற்கு ஒரு முறை மெம்பர்ஷிப்பைப் புதுப்பிக்கிறோம்.

ல: இந்தக் கம்பெனியை யார் யார் நடத்துகிறீர்கள்?

மோ: இந்தக் கம்பெனியின் முக்கியஸ்தர்கள் எல்லோரும் புரஃபஷனிலிஸ்ட்தான். சி. ஏ., எம். பி. ஏ., அட்வகேட்ஸ் போன்றோர்தான் இதை நடத்துகிறோம். ஸ்பென்சர் கம்பெனி நூறு வருஷமாக இருக்கிறது. எல்லோருக்கும் தெரிந்த, நம்பிக்கையான கம்பெனி. ஸ்பென்சர் என்றாலே, ரொம்பப் பேர் விலை ஜாஸ்தியாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். "ஸ்பென்சர் ரேட்" என்றே சொல்லுவார்கள். அதை இப்பொழுது மாற்றியிருக்கிறோம். வெளியில் என்ன விலையோ, அந்த விலைக்குத் தான் எங்கள் அங்கத்தினர்களுக்குப் பொருட்கள் கொடுக்கப்படுகின்றன. சில திட்டங்களின் கீழ் வெளியில் வாங்கும் விலைக்கும் குறைவாகவே பொருட்களை அளித்தோம்.

திலகவதி: குறிப்பிட்ட கடைகளில்தான் வாங்கணும் என்று வைத்திருக்கிறீர்களா?

மோ: நடுத்தர வர்க்கத்தினருக்குத் தேவைப்பட்டதை வாங்கும் இடமாக ஸ்பென்சரை மாற்றிவிட்டோம். கிடைக்காத பொருட்களை வெளியிலும் வாங்கித் தருவோம்.

தி: எல்லா கடைகளிலும் உங்கள் 'கார்டை'க் காண்பித்து வாங்கலாமா? வசதி உண்டா?

மோ: நாங்கள் அச்சிட்டுக் கொடுத்திருக்கும் கடைகளில் எங்கள் கார்டைக் காண்பித்து வாங்கலாம். நாங்களும், பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினர் தேர்ந்தெடுக்கும் தங்க மாளிகை, குமரன் சில்க்ஸ் போன்றவற்றையே இணைத்திருக்கிறோம்.

வெளியூர் உறுப்பினர்களுக்கு இது பொருந்தாதே. ஸ்பென்சரின் கிளை அவர்கள் ஊரில் இருந்தால் வாங்கலாம். மற்ற கடையாளுலும் வாங்கிய 'பில்'லை அனுப்பிவிட்டால் நாங்கள் கடைக்கு 'செக்' அனுப்பி விடுவோம்.

ல: நல்ல திட்டம். கடன் கொடுத்து விட்டு அதிகம் கட்டுப்பாடு விதிக்காமல் இருப்பதே பெரிய சேவைதான்.

மோ: உங்களுக்கெல்லாம் சந்தோஷம் தரும் இன்னொரு திட்டம் கூட இருக்கிறது. குழந்தைகள் மேல் படிப்பு, திருமணம், வெளிநாட்டில் சென்று படிப்பது போன்றவற்றிற்கும் உதவுகிறோம். இது தவிர, மருத்துவ வசதி, கல்யாணம் வரை உதவுகிறோம். எப்படி என்று விளக்குகிறேன்.

எங்கள் முதல் திட்டத்தில் சேர்ந்திருக்கும் ஒருவரின் மகளிற்கு 16 வயது என்று வைத்துக் கொள்வோம். 21 வயதில் கல்யாணம் செய்ய இப்பொழுதிலிருந்தே பணம் சேர்க்கிறார். எங்களிடம் ரூ 10,000 கொடுத்தால், உடனே 5,000 ரூபாய் பெருமானமுள்ள நகைகளை வாங்கிக் கொள்ளலாம். அதாவது வட்டியை நாங்கள் முதலிலேயே கொடுத்து விடுகிறோம். ஆனால், எங்களிடமுள்ள உங்களது மீதிப் பணமான 5000 ரூபாய்க்கு நாங்கள் 26% வட்டி தருகிறோம். அதாவது ஐந்தாம் வருடம் முடிவில் 11,500 ரூபாயை திரும்பப் பெறுவீர்கள். இதைப் பரவலாக வங்கிகளும், நிதி உதவி ஸ்தாபனங்களும் ஒப்புக் கொண்டுள்ளன. அமோக லாபமுள்ளதால் மிக அதிக எண்ணிக்கையில் இத்திட்டத்தின் கீழ் உறுப்பினராகச் சேர்ந்திருக்கிறார்கள்.

ல: இந்த மருத்துவ வசதி பற்றிச் சொன்னீர்களே, அதுதான் என்னை ரொம்பக் கவர்ந்தது. உங்கள் ரெடிமணி உறுப்பினர் கார்டை ஒருவர் வைத்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் வீட்டிலே ஒருவருக்கு உடம்பு சரியில்லை என்றால் அப்பொல்லோ மருத்துவமனைக்கு நேராகச் சென்று சிகிச்சை பெற முடியுமா?

மோ: முடியும். எந்த விதக் கட்டுப்பாடுமில்லை. பணத்தைப் பற்றிக் கவலைப் படவேண்டாம்.

பாகீரதி: அட்மிட் ஆனால் உங்களுக்குச் சொல்லணுமா?

மோ: இல்லை. இது ஒரு வகை இன்ஷியூரன்ஸ் போல. சில சமயங்களில் சிகிச்சை முடிந்த பிறகு, எங்களுக்கு பில் வரும் போது தான் இன்னார் சிகிச்சை பெற்றிருக்கிறார் என்பதையே அறிந்துக் கொள்கிறோம்.

சந்திரா: பில் வரும் பொழுது எப்படி







அமிர்தாஞ்சன் அறியும் உடல்வலி மற்றும் சுளுக்கின் கடுமையை

எளிதாகப் பூசிட ஏற்ற மிருதுவான அடிப்படைபொருள் கொண்டது.

புத்தம் புதிய, கார்க்கில்லாத உள் அமைப்பு மருந்தின் சக்தியைப் பாதுகாக்கிறது.





1984 ஒலிம்பிக் போட்டி இந்திய விளையாட்டு வீரர்களுக்கு பெய்ன்-பாம் சப்ளை செய்ய அங்கீகாரம் பெற்றவர்கள்

அமிர்தாஞ்சன்

துரித நிவாரணம் உறுதியுடன் அளிப்பது.

தீய பின்விளைவுகள் இல்லாதது.

OBM 8777 TM

பணத்தைத்திரும்பப்பெறுகிறீர்கள்? 20,000 ரூபாய் என்றால் என்ன செய்வீங்க?

மோ: சமீபத்தில் ஒருவருக்கு பை—பாஸ் அறுவை சிகிச்சை நடைபெற்றது. 25,000 ரூபாய் செலவாயிற்று. அவர் அப்போல்லோவில் இல்லாமல் வேறிடத்தில் சிகிச்சை பெற்றார். அதற்குரிய தொகையைக் கடன் வாங்கிக் கட்டியும் விட்டார். அவரை அழைத்து எத்தனை மாசத்தில் திரும்பத் தர முடியும் என்று பேச்சு வார்த்தை நடத்திக் கடனை அடைத்தோம்.

ல: யார் உள்ளே போனாலும் 10,000 ரூபாய்க்குக் குறையாமல் கட்ட வேண்டியிருக்கு. இன்வெஸ்டிகேஷன், ஸ்கானிங் — என்று பல இருப்பதால். ஆனால் நல்ல சிகிச்சை கிடைக்கிறது. நடுத்தர வர்க்கத்தினைச் சேர்ந்த நோயாளிகளைத் தினமும் நான் சந்திக்கிறேன். அவர்கள் திடீரென்று உடம்பு சரியில்லாமல் படுத்து விட்டால் சிகிச்சைக்குப் பணம் கொடுக்க முடியாமல் திண்டாடுவதைப் பார்க்கிறேன். அவர்களுக்கு உதவ யாராவது, ஏதாவது திட்டம் கொண்டு வர மாட்டார்களா என்று பல நாள் ஏங்கியிருக்கிறேன். உங்களுடைய இந்த மருத்துவ வசதி திட்டம் மிகச் சிறந்தது.

மோ: அதுவும் சம்பாதிக்கும் குடும்பத் தலைவன் படுத்து விட்டால், மனைவி படும் பாடு சொல்ல முடியாது. இவற்றையெல்லாம் பார்த்துத்தான் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தோம்.

சாரதா: அங்கத்தினரை எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்கிறீர்கள்?

மோ: சம்பள அடிப்படையில் தான். நோயாளிகளை அனுமதிப்பதில்லை. அங்கத்தினராகும்பொழுது அவருடைய மனைவி, திருமணமாகாத குழந்தைகளின் நலன்களுக்கும் உதவுகிறோம்.

ல: மருத்துவப் பரிசோதனை உண்டா?

மோ: மாஸ்டர் செக்—அப் செய்கிறோம். ரூ 550 செலவில் அப்போல்லோவிலேயே மருத்துவ சோதனை செய்கிறார்கள். ஏதாவது டிரபிள் இருந்தால் இதில் தெரிந்து விடும்.

ல: எப்படிப்பட்ட நோயாளியை அங்கத்தினராக ஏற்க மாட்டீர்கள்? கான்சர் போன்ற வியாதிக்கு ஆளானவரா?

மோ: ஆமாம். ஹார்ட் அட்டாக்கினால் மருத்துவ மனையில் சிகிச்சை பெறுபவர் அப்போல்லோவில் சிகிச்சை பெற வேண்டும் என்பதற்காக எங்களிடம் உறுப்பினராக முடியாது. எங்களிடம் உறுப்பினராகச் சேர்ந்த பிறகு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் பொறுப்பேற்று உதவுகிறோம்.

ல: பொதுவாக நாற்பது வயதுக்கு மேல் பலருக்கு ஹைபர் டென்ஷன், டையபடிஸ் இருக்கு. அவ்வளவு ஸ்டிரிக்டாக, இன்ஷுரன்ஸ் போல எப்படித் தேர்வு செய்கிறீர்கள்?

மோ: இது ஒன்றும்பெரியவிஷயமில்லை. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சாதாரணமாக மெம்பர்களாகவும் சேர்வதில்லை. மேலும் என் அனுபவத்தைக் கொண்டு நடுத்தர வர்க்கத்தினரின் உணவு, வாழ்க்கை முறையால், அவர்கள் இது போன்ற நோய்களுக்கு ஆளாவதில்லை என்றே கூறுவேன்.

ல: ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் பணம் கட்டணுமா?

மோ: இல்லை, கணவன் — மனைவி, மணமாகாத குழந்தைகள் என்று 3 கார்டு தருகிறோம். மேலும் ஒருவரைச் சேர்த்தால் கூடுதல் கார்டு ஒன்று தருகிறோம். இதற்கு ரூ 100 தர வேண்டும்.

சா: எப்படி உங்களிடம் மெம்பராக சேர்வது?

மோ: ஒவ்வொரு ஸ்பென்ஸர்ஸ் கிளையிலும் எங்கள் கவுண்டர் ஒன்று உண்டு. அங்கு பாரத்தை பூர்த்தி செய்து, 2 கியாரெண்டிகளின் பெயர், விலாசம், கையெழுத்து போட்டால் மெம்பராக முடியும். மெம்பரான தருணத்திலிருந்து பேமிலி கார்டு கிடைக்கும். கியாரெண்டர்கள் மிகவும் அவசியம். நகை போன்ற விஷயங்களில் உதவும் போது எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆனால், 99% நேர்மையாக எங்களுடன் ஒத்துழைக்கிறார்கள். இதுதான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி பல திட்டங்களை வகுக்க வைக்கிறது. 23,000 அங்கத்தினர்கள் எங்களுடன் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

சா: ரெடிமணிக்கு பிரான்சஸ் இருக்கா?

மோ: மதுரை, பெங்களூர், மங்களூர், கொச்சின், மெர்காரா, திருவனந்தபுரம்,



கோயமுத்தூர், ஹைதராபாத், காலிகட், விஜயவாடா போன்ற இடங்களிலும் இருக்கிறது. எங்கள் புதிய திட்டத்தின் கீழ் திருச்சி, சேலம் போன்ற ஊர்களில் எங்கள் கிளைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளோம்.

லக்ஷ்மி: உங்கள் திட்டங்களிலேயே என்னை மிகவும் கவர்ந்தது, இந்த மருத்துவ உதவித் திட்டம்தான். உங்கள் முயற்சிக்கு என் பாராட்டுக்கள், ஆசிகள்.

மோ: தாங்க்யூ, டாக்டர் என்ற முறையில் நீங்கள் இதை வரவேற்பது போல, திருமணம், படிப்பு, போன்றவற்றிற்கு உதவும் எங்கள் திட்டங்களைப் பிற பெண்மணிகள் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். ஹாப்பி ஹோம் பிளானிற்கு ரூ. 550 கட்டி மெம்பராவதைப் போலத் தவணைமுறைத் திட்டத்திற்கு ரூ. 350 கட்ட வேண்டும். புதுப்பிக்கும் முறை இதற்குக் கிடையாது. ஆயுள் அங்கத்தினர் ஆகிறார். இதற்குக் கையில் வரும் இரண்டு மாத வருமானம் கணக்கில் கொள்ளப்படும்.

இந்தத் தொகைக்கு நாங்கள் குறிப்பிட்டுள்ள கடைகளில் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். பனிரெண்டு தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கட்ட வேண்டும்.

சந்திரா: வீட்டிற்கு ஃபர்னிஷிங்கிற்கு உதவும் பொழுது வீட்டையே செக்யூரிட்டி ஆக்க வேண்டுமா? என்ன திட்டத்தின் கீழ் உதவுகிறீர்கள்?

மோ: தொகை அதிகமாக இருந்தால் ஆறு மாத வருமானத்தைக் கணக்கில் வைக்காமல் தேவைக்கேற்ப உதவுகிறோம். இரண்டு லட்சம் பெறுமான வீட்டையே செக்யூரிட்டியாகக் கொடுக்கும் பட்சத்தில் ஒரு லட்சம் வரை உதவுகிறோம். ஆனால் செக்யூரிட்டியே இல்லாமல் கொடுக்க வேண்டுமென்ற சூழ்நிலையில் தான் ஆறு மாத வருமானத்தை வலியுறுத்துகிறோம். வேலை, தகுதி, படிப்பு இவற்றைத்தான் முக்கியமாகப் பார்க்கிறோம்.

சாரதா: மாவு மிஷின், தையல் மிஷின் வைத்து நடத்தும் பெண்களுக்கு உதவுவீர்களா?

மோ: நான்தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே, எங்கள் நோக்கமெல்லாம் குடும்பத்தைப் பற்றித்தான் என்று. இங்கே நீங்கள் குறிப்பிடும் தொழில்களுக்கு வங்கிகள் போன்ற நிறுவனங்கள் உள்ளன.

லக்ஷ்மி: உங்கள் திட்டம், பணத்திற்கு எங்கே போவது என்ற மலைப்பை நிச்சயம் நீக்கும். உடல் கவலையைவிட பணத்திற்கு எங்கே போவது என்ற மனக்கவலைக்கு உங்கள் திட்டம் ஒரு மாமருந்து.

மோ: சீமந்தம் போன்ற வீட்டு விசேஷங்களுக்கு மளிகைச் சாமான்களை கூட வாங்கி, தவணை முறையில் பணத்தைத் திருப்பிக் கொடுக்கலாம். ஸ்பென்சரில் உங்கள் வீட்டிற்குத் தேவையான அனைத்தும் நியாயவிலையில் கிடைக்கிறது. புதிதாகத் திருமணத் தம்பதிகளுக்கு ஹனிமூன் செல்ல பண உதவி செய்கிறோம். திடீரென்று விமானத்தில் போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால்கூட, அதற்கும் உதவுகிறோம்.

பாகீரதி: ஒழுங்காகப் பணம் திரும்பி வந்திருக்கிறதா?

மோ: 99% திரும்பக் கிடைத்திருக்கிறது. கையில் வரும் இரண்டு மாத வருமானத்தை உதவியாகப் பெற்று பன்னிரண்டு மாதங்களில் திருப்பித் தரும்" திட்டம் எல்லோருக்கும் மிகச் சுலபமான ஒன்று. உதவி கேட்கும் பொழுதே முடியும், முடியாது என்பதைக் கணக்கிட்டுச் சொல்லி விடுகிறோம். அநாவசியமாக அலைய வைப்பதில்லை. இதனால் உறவு முறையும் சுமுகமாக இருக்கிறது.

பாகீரதி: டாக்டர், வக்கீல் போன்றவர்கள் கிளினிக் நடத்த, ஆஃபீஸ் செட்அப் பண்ண உதவி செய்வீர்களா?

மோ: தாராளமாக. ஒரு பெண் எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு வந்து எங்களை அணுகினார். அவருக்கு நாங்கள் கிளினிக் அமைத்துக் கொடுத்தோம். இதைப்போல சார்ட்டர்ட் அகௌண்டண்டுகளுக்குப் புத்தகங்கள் வாங்குவது, ஆபீஸ் ஃபர்னிஷ் பண்ணுவது, வக்கீல் போன்றவர்களுக்கும் உதவுகிறோம். தகுதியானவராகவும், டிஸர்விங்காகவும் இருந்தால், விதிமுறைகளைத் தளர்த்தி அவர்கள் முன்னேற்றத்தையே எண்ணி உதவுகிறோம். அதேபோல் வருடாவருடம் ஜூன் மாதங்களில் இல்லத்தரசிகள், குழந்தைகளுக்கு ஸ்கூல் ஃபீஸ், யூனிபாரம் என ஆகும் செலவிற்குத் தவித்துப் போய் விடுவார்கள். அவர்களுக்கும் உதவுகிறோம்.

திலகவதி: நீங்கள் குறிப்பிட்டிருக்கும்

சென்ற இதழில் வெளியான —
பெண்கள் தொழில் முனைவோர் சங்கம், 'சகோதரி' ஆலோசனை வழங்கும் சங்கம்
ஆகிய இரண்டு கட்டுரைகளின் தொடர்பாக ஏராளமான வாசகிகள் முகவரி கேட்டு எழுதியிருந்தார்கள். அவர்கள் வசதிக்காக —

1. பெண்கள் தொழில் முனைவோர் சங்கம்.
37, வேளச்சேரி ரோடு,
சென்னை—42.

2. 'சகோதரி'
மே/பா. வொய். டபிள்யு. சி. ஏ.,
சென்னை—84.
(திங்கள், புதன், வியாழன், சனி நாட்களில்)
ஆந்திர மகிளசபா, சென்னை—20
(செவ்வாய், வெள்ளி நாட்களில்)

கடைகளில் தான் வாங்க வேண்டுமா? சில பள்ளிகளில் யூனிஃபார்ம், புத்தகங்கள் கூட அவர்களே சொல்கிறார்கள். அப்பொழுது என்ன செய்வீர்கள்?

மோ: நாங்கள் குறிப்பிட்டிருக்கும் கடைகளிலும் வாங்கலாம். பள்ளிகளிலோ வேறு கடைகளிலோ வாங்கினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பேரில் டிராப்டைத் தருகிறோம்.

லக்ஷ்மி: பென்ஷனர்களுக்கு உதவுகிறீர்களா? என்னிடம் வரும் பேஷண்டுகளில் சிலர் வயதானவர்களாக இருக்கிறார்கள். தங்களுக்குக் கடைசி காலத்தில் யார் உதவுவார்கள் என்ற பயம்தான் அவர்களுக்கு இருக்கிறது.

மோ: உங்களைப் போன்ற புகழ்பெற்றவர் சொல்லும் வார்த்தைக்கு மதிப்பு வைத்து அதையே கியாரண்டியாக வைத்துத் திரும்பக்கொடுக்கும்திறன் இருந்தால் வயது வரம்பைக் கூடத் தளர்த்தி அவரை அங்கத்தினராக்கி ஒரு மகன் ஸ்தானத்திலிருந்து உதவவே நினைக்கிறோம்.

சாரதா: வெளியூரிலிருந்து கூட உங்களிடம் மெம்பர் ஆகலாமா?

மோ: ஆகலாம். அவர்கள் அங்கேயுள்ள கடைகளிலேயே பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். எந்த ஊரிலிருந்தாலும் மெம்பராகலாம்.

தனிப்பட்ட குடும்பத் தேவைகளுக்கு உதவுவதுதான் எங்கள் நோக்கம். எங்கள் சின்னமான சிரித்த முகமே எங்கள் அங்கத்தினர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள், இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறது.

தொகுப்பு: லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

அப்பல்லோ மருத்துவமனையின் டைரக்டர் திரு. பிரதாப் சி. ரெட்டி 'ரெடிமணி'யின் மருத்துவ உதவி பற்றிச் சிலாகித்தார்.

"ஒரு டி.வி. வாங்க வேண்டுமென்றால் கையில் இருக்கும் பணத்திற்குத் தகுந்தாற்போல கலர் டி.வி.யா, சாதா டி.வி.யா எனத் தீர்மானிக்கலாம். இப்படி எல்லாவற்றிற்குமே பணத்தைப் பொறுத்து எது வேண்டுமானாலும் வாங்கலாம். ஆனால் உயிர் விஷயம் அப்படியில்லையே. லைஃபில் 'ரிஸ்க்' எடுக்க முடியாதே! மிகச் சிறந்த சிகிச்சை பெற்று உடல் நலம் பெறுவதுதான் சிறந்தது.


அப்படிப்பட்ட சிகிச்சை தேவைப்படும் மனிதர்களுக்கு, நீங்கள் எளிய தவணைகளில் திருப்பித் தரக் கூடிய கடனுதவி செய்வது மிகச் சிறந்தது. நீங்கள் இவ்வளவு தூரம் சேவையாகச் செய்வதால் நானும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உங்களுடைய அங்கத்தினர்களுக்கு எங்களால் இயன்ற சலுகைகளைத் தருகிறோம்.

'அப்பல்லோ' என்றவுடனே, 'ஐயையோ அவ்வளவு 'காஸ்ட்லி'யான மருத்துவமனை நமக்குக் கட்டுப்படியாகுமா' என்று நினைப்பார்கள். அது உண்மையல்ல. எல்லாவிதமான வியாதிகளுக்கும் மிகச் சிறந்த சிகிச்சையளிக்கிறோம். இருதய அறுவை சிகிச்சைப் போன்ற மிகப் பெரிய அறுவை சிகிச்சைகள் கூட இங்கு தலைசிறந்த டாக்டர்களால் செய்யப்படுகிறது.

'ரெடிமணி மெடிகல் ரிலீஃப் பண்ட்' ஒன்றைஇப்போ;இவர்கள் புதிதாக ஆரம்பித்து அதற்கு என்னைச் சேர்மனாகவும் நியமித்திருக்கிறார்கள். அதன்படி வைத்தியச் செலவிற்காக ரூ. 20,000 வரை நிதியுதவியாகச் சில தேர்ந்தெடுக்கப்படும் நோயாளிகளுக்கு வழங்கப்படும்."



நிரோத்....
முதல் குழந்தை பிறக்குமுன் தடையின்றி நீங்கள் இல்லற இன்ப சுகங்களை பலகாலம் அனுபவிப்பதற்காக



நிரோத், நீங்கள் விரும்பும்
அந்நியோனிய வேளைகளை
அனுபவிக்க உதவுகிறது.
முதல் குழந்தைக்காக
திட்டமிடுவதற்கு போதிய
அவகாசம் அளிக்கிறது.

நிரோத் உபயோகியுங்கள்

இன்பமயமான
இல்லற வாழ்க்கைக்கு



விநியோகஸ்தர்கள், புரூக் பாண்டு, லிப்டன், இந்துஸ்தான் லிவர், ஐ-டி சி., டாடா ஆயில் மில்ஸ், யூனியன் கார்பைட், ஐடிபிஎல், ஸ்மித் ஸ்டேனி ஸ்ட்ரீட், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம், அரசன் மேட்ச் இண்டஸ்ட்ரீஸ்.

davp 84/42

எண்ணை தேய்த்துக் குளிப்பதைப்பற்றி விஞ்ஞானப் பூர்வமான பல்வேறு விதமான சர்ச்சைகள் உள்ளன. ஆனால், எண்ணை தேய்த்துக் குளிப்பது பற்றிப் பொதுவாகச் சித்த மருத்துவம் என்ன சொல்கிறது தெரியுமா?

எண்ணை தேய்த்துக் குளிப்பதால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய உடலின் பாகங்கள் பெரிதும் வலிமையடைகின்றன. குரல் பிசிறு இல்லாமல் வளமடைகிறது. மயிர் கருப்பாக வளருகிறது. தலை வலி நீங்குகிறது. உடலில் ஏற்படும் வறட்சி, சொறி, தினவு, அழுக்கு ஆகிய பல்வேறு காரணங்களுக்காக எண்ணை தேய்த்துக் குளிக்கலாம்.

எண்ணை தேய்த்து வாரத்தில் இரண்டு நாட்கள் குளிக்கலாம் என்றாலும் தினசரி எண்ணைக் குளியல் மிகவும் ஆரோக்கியமான ஒன்றாகும். (விலையை நினைத்துப் பெருமூச்செறியாமல் இருந்தால்)



எண்ணையிட்டு முழுகுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

1. உடல் வலி நீங்குகிறது.
2. இளமையைப் பாதுகாக்கிறது.
3. முதுமையை விரட்டியடிக்கிறது.
4. கண்களைத் தெளிவாக்குகிறது.
5. பார்வையைப் பிரகாசமாக்குகிறது.
6. உடலுக்கு வலிமையைத் தருகிறது.
7. ஆயுளை விருத்தி செய்கிறது.
8. நல்ல தூக்கத்தை உண்டாக்குகிறது.
9. தோலை மிருதுவாக்குகிறது.
10. உடல் சோர்வை அகற்றுகிறது.
11. கபத்தை நீக்குகிறது.
12. பல்லில் ஏற்படும் நோயைத் தடுக்கிறது.
13. சுவையின்மையை மாற்றுகிறது.

நம்மில் மிகப் பெரும்பாலானோர் எண்ணைக் குளியலுக்கு நல்லெண்ணையை உபயோகப்படுத்துகின்றனர். கேரளப் பெண்கள் தேங்காயெண்ணையை உபயோகிக்கின்றனர்.

அத்துடன் வேப்பெண்ணையும் உபயோகப்படுத்தலாம். சுத்தமான பசுவின் நெய்யையும் பயன்படுத்தலாம்! இதைத் தவிர கஸ்தூரி மஞ்சள், மிளகு, வேப்பம் விதை, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு ஆகியவற்றைக் காராம் பசுவின் பால் விட்டரைத்துக் கொதிக்க வைத்துத் தைலமாக்கி உபயோகிக்கலாம்.

இந்த தைலம் 'பஞ்ச கற்பம்' என்று சொல்லப்படும். உடல் அளவுக்கு மீறிக் குண்டாக இருக்கிறது என்று நீங்கள் கவலைப் படுகிறீர்களா?

கவலையே வேண்டாம். இந்தப் 'பஞ்ச கற்பம்' தைலத்தைத் தினசரி தலையில் தேய்த்து முழுகி வாருங்கள்! உங்கள் உடலை மட்டும் அல்ல. உங்கள் முகத்தையும் அது அழகாக்கி விடும்.

எண்ணையை அதிகமாக உபயோகிக்க வேண்டிய இடங்கள், குறைவாக உபயோகிக்க வேண்டிய இடங்கள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன.

தலை, கால்கள், காதுகள் ஆகியவற்றில் எண்ணையினை அதிகமாக உபயோகிக்க வேண்டும். மருத்துவத் தைலங்களாக இருந்தால் மூக்கில் நான்கு துளிகளும், காதில் ஆறு துளிகளும் விட வேண்டும்.

தலையிலும், உடலிலும், பாதத்தின் அடிப் பாகத்திலும் சூடு பிறக்காமல் எண்ணையைத் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும்.

தகுதியான எண்ணை, தைலங்களை உள்ளங்காலில் தேய்த்தால் கண்களுக்கு உண்டாகும் பிரச்னைகள் தீர்ந்து போகும். கண்களில் கட்டினால் காதுகளில் உள்ள துன்பங்கள் அகலும். காதுகளில் கட்டினால் தலை சம்பந்தப்பட்ட நோய் பறக்கும். தலையில் இட்டுக் கொண்டால் உடல் நோய் தீரும்.

சித்திரை — வைகாசி மாதங்களில் ஐந்து நாழிகைக்குள்ளும், ஆனி ஆடி மாதங்களில் காலை எட்டு நாழிகைக்குள்ளும், ஆவணி,

புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் காலை மூன்று நாழிகைக்குள்ளும் எண்ணெய்க் குளியலால் நோயில்லாத உடலைப் பெறலாம்.

எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் போது இன்னின்ன உடல் உடையோருக்கு இன்னின்ன பொடிகளால் உடலைச் சுத்தம் செய்தல் நல்லது என்று வழி முறைக் கூறப்பட்டுள்ளது.

உடல் முழுவதும் ரணமுள்ளவர்களுக்கு உசிலந்தூள் நல்லது. சொறி, சிரங்கு, தினவு உடையோர் இலுப்பைப் புண்ணாக்கை உபயோகிக்க வேண்டும். எண்ணெய் முதலான தைலங்களுக்குப் பொன்னாங்காயும், சிகைக்காயும் உபயோகிக்க வேண்டும். பசுவின் நெய்க்குப் பச்சைப் பயறுப் பொடி உபயோகிக்க வேண்டும்.

எண்ணெய் தேய்த்துத் தலை முழுகிய நாட்களில் உபயோகிக்க கூடிய பதார்த்தங்கள், உபயோகிக்கக்கூடாத பதார்த்தங்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளன. அதைக் கையாண்டால் எந்த நோயும் அணுகாமல் உடலைக் காக்கலாம்!

உபயோகிக்கக் கூடாதவை:

1. வெண் பூசணி; 2. பறங்கி; 3. மாங்காய்; 4. மாம்பழம்; 5. தேங்காய்; 6. கீரைத் தண்டு; 7. சேம்பு; 8. அறுகீரை; 9. அகத்தி; 10. பாகல்; 11. கத்தரி; 12. கொத்தவரை; 13. பழ வகைகள்; 14. மாவும் பண்டங்கள்; 15. மொச்சை; 16. எள்; 17. கொள்; 18. கடலை; 19. உளுந்து; 20. வெங்காயம்; 21. கடுகு; 22. புளி; 23. பால்; 24. தயிர்; 25. கைப்பான பொருட்கள்; 26. புகையிலை; 27. வெல்லம்; 28. குளிர்ந்த நீர்; 29. பகல் தூக்கம்; 30. வெயில்; 31. போகம்; 32. மிகுந்த காற்று; 33. நண்டு; 34. மீன்; 35. கோழி; 36. ஆடு; 37. பன்றி; 38. கடமான் ஆகியன.

உபயோகிக்கத் தக்கவை:

1. அவரைப் பிஞ்சு; 2. முருங்கைப் பிஞ்சு; 3. தூதுளங்காய்; 4. மணத் தக்காளி; 5. வற்றல்; 6. சுண்டைக்காய்; 7. பொன்னாங்கண்ணி; 8. சிறு கீரை; 9. கருவேப்பிலை; 10. துவரை; 11. சிறுபயறு; 12. மிளகு; 13. ஜீரகம்; 14. வெந்தயம்; 15. கிராம்பு; 16. இலவங்கைப் பட்டை; 17. ஏலக்காய்; 18. ஜாதிக்காய்; 19. சர்க்கரை; 20. பசுவின் நெய்; 21. கௌதாரி; 22. காடை; 23. உடும்பு.

இவற்றுடன் பீர்க்கு, புடலங்காய் சேர்க்கலாம் என்று சொல்வாரும் உண்டு. ஆனால், அப்படிச் சேர்த்தால் உஷ்ண உடம்பினருக்குத் தினவெடுக்கும்.

கத்தரிக்காய், கத்தரி பிஞ்சு, நெல்லிக்காய், முளைக் கீரை, பெருங்காயம், உப்பு வறுத்துக் கொட்டிய சட்டியில் முறித்த மோர், சிறு புளிப்பு, தாம்பூலம், முயல், ஏரி மீன், அயிரை மீன், தேளி மீன், கரு மீன், கருவாலி, காட்டினெலி, வெள்ளாடு இவையெல்லாம் சேர்க்கலாம் என்றும் சிலர் கூறுவர்.

இச்சாபத்தியம் உள்ளவர்கள் முள்ளுள்ள பாகல், மா, கத்தரி, கொத்தவரை, வெண்பூசணி, அகத்திக் கீரை, மந்தக் குணப் பொருட்கள், கடுகு, போகம் ஆகியவற்றை அறவே நீக்க வேண்டும்.

—சுமித்ரா

கடந்த நான்கு மாதங்களாக சென்னை நகர அரிமா சங்கங்களும், அரிமா மங்கையர் சங்கங்களும் சேர்ந்து கொண்டு சென்னையை 'ஒரு கை' பார்த்துக் கொண்டிருக்கிறது.

வழக்கமாகவே சேவையில் முன்னணியில் நிற்பவர்கள் இவர்கள். இந்த ஆண்டு ''போலியோ இல்லாத ஆண்டாக''ச் செய்யக் கருதி, சென்னை மாநகராட்சி உதவியுடன் சென்னை முழுவதும் சர்வே எடுத்தார்கள். அப்படி எடுத்த சர்வேப்படி ஏராளமான குழந்தைகளுக்கு இலவச போலியோ சொட்டு மருந்தை அளித்திருக்கிறார்கள்.

அரிமா மங்கையர் சங்கமோ, ஒரு வாரம் 'குழந்தைகள் நல' வாரமாகவே கொண்டாடியது. அன்றைய ஏழைக் குழந்தைகளை சர்க்கஸுக்கு அழைத்துக் கொண்டு போய் அவர்கள் பார்த்து மகிழ்வதைப் பார்த்து இவர்கள் மகிழ்ந்தனர். பிக்னிக், திரைப்படம் எனக் குழந்தைகளோடு ஜமாய்த்தது. ஏராளமான ஊனமுற்ற குழந்தைகளுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்தது.

''வீட்டுக்கு வரும் கௌரிக்கு
டௌரி எதற்கு?''

என்று கொடி பிடித்துக் கொண்டு ஊர்வலம் போனார்கள் அரிமா மங்கையர்.

சிறிய குடும்பத்தின் நலன்களைப் பற்றி ஒரு பெரிய மாநாடே நடத்தி, ஆயிரக்கணக்கான குடிசை வாழ் மக்களைக் கூட்டி அவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.


மாவட்ட கவர்னர் வி.கே. பத்மநாபனின் சுறுசுறுப்பான சேவைக்கு இவையெல்லாம் சான்றுகள். அரிமா மங்கையர்களான வித்யா தோத்தாத்ரியும், ரூபி பொன்னையாவும் இவருடன் சேர்ந்து அயராது உழைக்கிறார்கள்.

—பவித்ரா, கலாமூர்த்தி



நியாயம் கேட்கிறேன்

கே. உஷா



"ஸார், போஸ்ட்" என்று கூவியபடி ஒரு இன்லெண்ட் லெட்டரை வீசி விட்டுச் சென்றான் போஸ்ட்மேன்.

"யாராயிருக்கும்?" என்று யோசித்துக் கொண்டே கீழே குனிந்து கடிதத்தை எடுத்த

சீதாராமன் விலாசத்தில் உள்ள கையெழுத்தைக் கண்டதும்,

"சாமு எம் பொண்ணு லெட்டர் போட்டிருக்காடி!" என்று தம் மனைவியை நோக்கி உற்சாகமாகக் கூவினார்.

கட்டிலில் படுத்துக் கிடந்த காமு, "என்ன எழுதியிருக்கா? பிரிச்சுப் படிங்க முதலில்" என்று கூறினாள் பர பரப்புடன்.

பிரித்துப் படித்தவரின் முகம் கறுத்துக் கொண்டே வந்தது. "உம் பொண் என்ன எழுதியிருக்கா பார்த்தியா?"

சில நிமிஷங்களுக்கு முன்னால் இருந்த "எம் பொண்ணு" இப்போது "உம் பொண்ணு" என்றானதிலிருந்து தன் கணவர் கோபப்படும் வகையில் ஏதோ எழுதியிருக்கிறாள் தன் பெண் என்பதைப் புரிந்து கொண்டாள்.

"என்ன எழுதியிருக்கா?"

"அவளால் வர முடியாதாம். அவாத்துக்காரருக்கு லீவு கிடைக்கலையாம். பையனுக்குப் பரீட்சையாம். அதனால் அம்மா உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள் அப்படின்னு எனக்கு அட்வைஸ் பண்ணி எழுதியிருக்கிறாள்."

"பெத்த தாய் இங்க உடம்பு சரியில்லாமப் படுத்துக் கிடக்கா.. வந்து பார்க்க ஒரு பொண்ணுக்குத் தோணுதோ? கேட்டா ஆத்துக்காரருக்கு லீவு கிடைக்கலே. அவனை யார் வரச் சொன்னா இப்போ? இவ பாட்டுக்குக் கிளம்பி வர வேண்டியது தானே! பையனுக்கு குவார்ட்டர்லி பரீட்சை. பெரிய படிப்பு! ஐ.ஏ.எஸ் படிப்பு தட்டுக்கெட்டுப் போகிறது!" என்று படபடவென்று பொரிந்தார் சீதாராமன்.

"அவ ஆத்துக்காரருக்கு லீவு கிடைக்கலேன்னு அவ எப்படி அவ்வளவு தூரத்திலிருந்து தனியா வருவா?"

"ஆமாண்டி! அவ்வளோ தூரம்! உம் பொண்ணு என்ன அமெரிக்காலயா இருக்கா இங்க இருக்கிற திருச்சியிலிருந்து வர்றதுக்கு அவளுக்குக் கஷ்டமாயிருக்காக்கும்? அதுக்குத் துணை வேணுமாக்கும்."

"என்ன இருந்தாலும் புருஷாத் துணையில்லாம எப்படின்னு தனியா வருவா? இப்ப வேற எங்கப் பார்த்தாலும் கல்லடி, ஸ்டிரைக் அது இதுக்குன்னு நடக்கிறது. குழந்தைக்கு வேற படிப்பு இருக்குங்கறு" என்று சமாதானமாகச் சொன்னாள் காமு.


"ஆமாண்டி! உம்பேரன் இந்தப் பரீட்சை எழுதலேன்னு பெயிலாடுவானாக்கும். அப்படி ஒண்ணும் மக்கு இல்லே நம்ப பேரன் அவன் நம்பளைக் கொண்டிருக்கான். அவாத்தைக் கொண்டாத்தான் நாம பயப்படணும்! மாப்பிள்ளையைத் தவிர்த்து பாக்கி ரெண்டு பிள்ளைகளும் எஸ். எஸ். எல். சியே ரெண்டு மூணு அட்டெம்ட். இந்த அழகில் சம்பந்திக்கு ஐம்பத்துக்கு ஒண்ணும் குறைச்சலில்லே" என்றார் சீதாராமன்.

"சரி, சரி! ஏதோ அசௌகரியம். அதான் உங்க பொண்ணுவரல்லே. அத்தோட விடுங்களேன். ஏன் அவாபரம்பரையையே இழுக்கறேள்?"

"ஒரு அசௌரியமும் இல்லே, உம் பொண்ணுக்கு. எல்லாம் அந்த மாப்பிள்ளைப் பயதான் அனுப்ப மாட்டேன்கிறான் போலிருக்கு. அதான் சொல்லிக்க முடியாம உம் பொண்ணு என்னென்னமோ சால் ஜாப்பு சொல்லி எழுதியிருக்கா. இந்தக் காலத்துல மாப்பிள்ளைகள்ளாம் சுரண்டுறதில் தான் குறியா இருக்கிறான்கள். ஒத்தாசைக்குன்னு அனுப்ப மாட்டான்கள். போக்கத்தப் பசங்க!" என்று இரைந்தார்.

காமாட்சி பேசாமல் இருந்தாள். இதற்கு மேல் எது பேசினாலும் வம்பிழுப்பார்.

'அவனை என்ன செய்கிறேன் பார்?' என்று குதிப்பார். காமாட்சி ஏதாவது சமாதானமாகப் பேசினால், 'மாப்பிள்ளைக்கு சப்போர்ட் பண்ணுகிறாயா?' என்று கர்ஜிப்பார்.



புடலங்காயை அரை அடி நீளத்திற்கு வெட்டி எடுத்து — அதன் உள்ளே உள்ளவிதைகளைநீக்கிவிட்டு, சீக்காய்த் தூளைத் தண்ணீர் விட்டு நன்றாகக் குழைத்து அந்தப் புடலங்காயின் உள் பக்கத்தில் நன்றாக அடைத்து ஒருநாள் முழுவதும் வெயிலில் காய வைக்க வேண்டும்! இவ்வாறு காய்ந்த பின் அதை அம்மியில் வைத்து அரைத்து, "தேமல்" உள்ள இடங்களில் தடவிப் பிறகு 1 மணி நேரம் சென்ற பிறகு வெந்நீரில் குளித்தால் "தேமல்" நீங்கும்!

—நாகை. பொன்னி.

காமாட்சிக்கு இவையெல்லாம் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன வார்த்தைகள் தாம். எல்லாக் காரியமும் நல்லபடியாக அவர் இஷ்டப்படி நடந்தால் வீட்டில் நிம்மதி. கெடுதலாக ஏதாவது நடந்துவிட்டால் ஒரே ரகளை தான். பழியும் அவள் பேரில்.

ஆனால் இன்றென்னவோ காமாட்சியால் பொறுக்க முடியவில்லை... . அவளையும் மீறி ஆத்திரம் மீறிட்டது.

"நான் ஒண்ணு கேக்கறேன். பதில்சொல்வேளா?"

'என்ன' என்பது போல் பார்த்தார் சீதாராமன்.

"இன்னிக்கு மாப்பிள்ளையைத் திட்டறீங்களே! இருபது வருஷத்துக்கு முன்னால நம்ப பொண்ணு லதா சின்ன குழந்தையா இருந்தப்போ நடந்ததைக் கொஞ்சம் நினைச்

வருகை தாரீர்!

விஜிபி - யின்

வாழுங்கள் வசதியாக

கண்காட்சி

சென்னையில் சொநதமாக வீட்டுமனை வாங்க ஓர் அரிய வாய்ப்பு!


உங்கள் தேவைக்கேற்ற கடற்கரையோர மனைகள், தொழிற்சாலைக்கேற்ற மனைகள்.

குடியிருப்போருக்கென மனைகள் மேடவாக்கம், தாம்பரம், ஸ்ரீபெரும்புதூர், பட்ப்பை, கூடுவாஞ்சேரி மற்றும் பல இடங்கள்.

பல மாதிரி வீடுகள் நீங்கள் விரும்பும் வண்ணம் உங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

முன்பணம் 25 சதவீதம் செலுத்தி மீதம் 24 சுலபத் தவணைகளில் பெறலாம்.

வீடு கட்ட கடன் வழங்கும் வங்கிகளில் கடன்வசதி ஏற்பாடு.



SOBHAGYA

மற்றும் இக்கண்காட்சி விஜிபி ஷோரூம், ரத்தன் பஜார், சென்னை-3-ல் நடைபெறுகிறது. போன்: 39649.

சப் பாருங்க?'' என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க.

'இருபது வருஷத்துக்கு முன்னால் என்ன நடந்தது' என்று நெற்றியைத் தேய்த்தவாறு யோசித்தார். அவருக்கு அதெல்லாம் நினைவிருக்காது. ஆனால் காமாட்சிக்கு நன்றாக நினைவிருந்தது. ஏனெனில்பாதிக்கப்பட்டவள் அவளாயிற்றே!

இருபது வருஷத்துக்கு முன்னால் ஒரு நாள் காமாட்சியின் அண்ணனிடமிருந்து லெட்டர் வந்தது.

''அம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் முடியவில்லை. நினைவு தப்பித் தப்பி வருகிறது. நினைவு வரும்போதெல்லாம் உன்னைப் பார்க்க வேண்டும் என்கிறாள். அம்மாவுக்கு உன்னையும் என்னையும் விட்டால் வேறு யாரும் கிடையாது. அம்மாவின் நிலைமையும் ரொம்பவும் மோசமாக இருப்பதால் இறப்பதற்கு முன்பு ஒரு தடவை வந்து பார்த்து விடு. மாப்பிள்ளையையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு வா'' என்று எழுதியிருந்தான்.

லெட்டரைப் படித்ததும் காமாட்சி மனம் துடி துடித்தாள். 'ஒரே பெண். ஒரே பெண்' என்று தனக்குக் குழந்தையிலிருந்து — ஏன் கல்யாணமான பின்பும் கூட — ஒரு குறையும் வைக்காமல் தன்னை ஆளாக்கி இன்று வரை கை நிறைய அள்ளி அள்ளிக் கொடுத்து இப்போது முடியாமல் கிடக்கும் தன் தாயை உயிரோடு இருக்கும் போதே கடைசி முறையாகக் காண வேண்டும் என்று ஏங்கினாள்.


லெட்டரைத் தன் கணவரிடம் நீட்டினாள். அவர் படித்து முடித்தவுடன்.

''போகலாமா?'' என்று கேட்டாள்.

''இப்ப எப்படிப் போக முடியும்? லதாவுக்குப் பரீட்சை இல்லையா?'' என்றார் சீதாராமன்.

''அரைப் பரீட்சைதானே. இந்தப் பரீட்சை எழுதலேன்னு ஒண்ணும் குடிமுழுகிப் போயிடாது''

''எனக்குப் படிப்பு தான் முக்கியம். அது அரைப் பரீட்சையாயிருந்தா என்ன, முழுப் பரீட்சையாயிருந்தா என்ன.''



கல்யாணத்துக்குப் போக முடியாதவர்கள், ''வாழ்த்துத் தந்தி'' அனுப்பி விடுகிறார்கள். இதைத் தவிர்த்து, மணியார்டர் மூலம் பெண்ணிற்கு, பணம் அனுப்பி வைத்தால், அவர்கள் கைச்செலவிற்கு இதுவும் உதவியாக இருக்குமே?

—ஆர். வசந்தகுமார்.

''ஆறு. அண்ணா எழுதியிருக்கிற லெட்டர்லேருந்து பார்த்தா இந்தத் தடவை அம்மா ரொம்ப சீரியஸ்னு எனக்குத் தோணுது. அதனால நாம போயிட்டு வந்துடுவோமே'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்'' என்று கூறிப் பேச்சை முடித்துக் கொண்டு விட்டார் சீதாராமன்.

அதற்கு மேல் அவளால் அவரை வற்புறுத்த முடியவில்லை.

அடுத்த வாரம் அவள் அம்மா இறந்து விட்டதாக அவள் அண்ணன் தந்தி அடித்தான்.

ஆனால் அவள் உடனடியாக இங்கிருந்து கிளம்பி என்ன பிரயோசனம்? டெல்லி போய்ச் சேருவதற்குள் எல்லாக் காரியமும் முடிந்து விடும்.

உயிரோடு இருந்தபோது போயிருந்தால், தன்னால் தான் அவளை வைத்துக் காப்பாற்ற முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் கொஞ்சம் பணி விடைகளாவது செய்திருக்கலாம். மனத்தில் ஒரு நிம்மதி ஒரு சந்தோஷம் இருந்திருக்கும்.

'ஊர் உலகத்தில் பெண்கள் எல்லாம் தாயை வைத்துக் காப்பாற்றவில்லை? என்ன செய்வது? எனக்கு வாய்த்த புருஷன் அப்படி'' என்று மனத்துக்குள் வருந்தப்பட்டுக் கொண்டாள்.

தந்தியைக் கண்டவுடன் சீதாராமன் ''போகலாமா?'' என்று கேட்டபோது.

''வேண்டாம்'' என்றாள் வைராக்கியமாக.

'எதற்குப் போக வேண்டும்? உலகத்துக்கு முன்னால் மாமியார் இறந்ததற்கு மாப்பிள்ளை வந்திருக்கிறேன் என்று காட்டிக் கொள்ளவா? மாமியாரைத் தன் வீட்டில் வைத்துக் கொண்டு ஒரு வாய்ச் சோறு போடாதவர் இன்று மாமியார் இறந்ததற்குத் துக்கப்படுகிறேன் என்று எல்லாருக்கும் முன்னால் வேஷம் போடுவதற்காக இங்கிருந்து டெல்லிக்குப் போக வேண்டுமா என்ன' என்றெல்லாம் மனத்துக்குள் வெறுப்புடன் நினைத்தாள் காமாட்சி.

இதற்கப்புறம் எவ்வளவோ நிகழ்ச்சிகள். அதற்காகக் கொண்ட கணவனை உதறி விட்டா போக முடியும்? அவளைப் போன்ற பெண்கள் மனசால் உறைந்து போக வேண்டியதுதானே.

''இப்போ புரியறதான்னு? நான் என் அம்மாவை ஒரு பத்து நாள் பார்த்துக்க முடியல்லே. அதான் என் பொண்ணுக்கு என்னைப் பார்க்க வர' முடியல்லே. அதனால அவ பார்க்க வரல்லேயேங்கிற வருத்தமே எனக்கு. பெண் ஜென்மங்களுக்குக்கொடுத்து வச்சது அவ்வளவுதான்''.

நீண்ட நேரம் பேசி விட்டதாலோ என்னவோ களைப் படைந்தவள் போல் கண்களை மூடிக் கொண்டாள் காமாட்சி.

சீதாராமன் ஒன்றும் பேச முடியாமல் குற்ற உணர்வுடன் தலை குனிந்தார்.

உலையே உயிருக்கு உலையா?



முன்பெல்லாம் செய்தித்தாள்களில் ஸ்டவ் வெடித்து விபத்து நேர்வதும், காஸ் அடுப்பினாலோ அல்லது சிலிண்டர், வெடிப்பதாலோ விபத்து நிகழ்வதும் வெளிவரும். ஆனால் சமீபத்தில் நான் கேட்க நேர்ந்த மூன்று விபத்துக்களும் வித்தியாசமானவை. இவை பிரஷர் குக்கரினால் நேர்ந்தவை. வேதனைப் படக்கூடிய அளவு பெரியது.

இரண்டு விபத்துக்களில் பிரஷர் குக்கரில் அதிக அழுத்தம் உருவாகி காஸின் மேலிருந்து பறந்தன. ஆட்கள் அருகில் இல்லாததால் உயிர்ச் சேதம் இல்லை. ஆனால் மூன்றாவது விபத்தில் இதில் பாதிக்கப்பட்ட பெண்மணி எனக்கு நன்கு பழக்கமானவர். 50 வயதான இந்தப் பெண்மணி அடுப்படியில் இருக்கும்போதே குக்கர் அதிக அழுத்தம் காரணமாக வெடிக்க, அப்போது காஸ் அடுப்பு எரிந்து கொண்டிருந்ததால் தீ பரவி சிலிண்டரும் வெடித்து விட்டது. அப்பெண்மணியின் முகம் உருத்தெரியாமல் சிதைந்ததோடு தீக்காயங்களும் ஏற்பட்டதால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கேயே இறந்தும் போனார்.

மேற்கண்ட மூன்று விபத்துக்களும் பிரஷர் குக்கரில் அதிக அழுத்தம் ஏற்பட்டபோது நீராவி வெளியேற்றப்படாததாலேயே நிகழ்ந்தன. எனவே உலை வைக்க உதவியாக இருக்கும் குக்கரே உயிருக்கு உலையாக மாறும் கொடுமையைச் சகோதரிகள் உணர்ந்து கீழ்க்கண்ட பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டியது மிக அவசியம்.

1. தரமான குக்கரை வாங்க வேண்டும். விலை மலிவு என்று குறையுள்ள குக்கரை வாங்கக் கூடாது. தாங்கள் வாங்க எண்ணியுள்ள குக்கர் பிறர் வீட்டில் எப்படி உழைக்கிறது என்பதை விசாரித்து வாங்க வேண்டும்.

2. காஸ்கெட், வெயிட் வால்வ், ஸேப்டி வால்வ் இவைகளைப் பழுதுபட்டவுடன் மாற்றுவதோடு, விலை குறைவு என்பதால் போலிகளை வாங்காமல் டீலரிடம் சென்று தரமான பகுதிகளை வாங்க வேண்டும்.

3. தற்சமயம் ரப்பரில் உள்ள ஸேப்டி வால்விற்குப் பதில் உலோகத்தில் அமைந்த ஸேப்டி வால்வ் பயன்படுத்தப்படுகிறது. இதன் நடுவில் உள்ள உலோகம் அதிக வெப்பத்தில் உருகி நீராவியை வெளியேற்றி விபத்தைத் தடுக்கும். ஆனால் போலி வால்வாக இருப்பின் இவ்வுலோகம் உருகாமல் போகலாம். அதனால் குக்கருக்குள் அதிக அழுத்தம் உருவாகி விபத்து நேரலாம். எனவே ஸேப்டி வால்வைத் தரமானதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

4. பிரஷர் குக்கரில் (அ) பேன்—ல் சாதம், பருப்பு, காய்கறிகளை வேக வைக்கும்போது மூடியின் மேல்பாகத்தைத் தொடும்படி உணவுப் பொருட்களை வைக்கக் கூடாது. இதனால் காய்கறி அல்லது பருப்பு மூடியின் நடுவிலுள்ள துளையில் அடைத்துக் கொண்டு விடுவதால் வெயிட் வால்வ் சரியானபடி நீராவியை வெளியேற்ற முடியாது.

5. வெயிட் வால்வ் போட்டதும் சுமாராக நேரத்தைக் கவனித்துக் கொள்வது நல்லது. வெயிட் வால்வ் போட்டு 10—15 நிமிடங்கள் வரை மெல்லிய ஸ்... ஸ்... சத்தம் கூட வராவிட்டால் வெயிட் வால்வை லேசாக அசைத்துப் பார்க்க வேண்டும். அப்போது ஆவி சீறிக் கொண்டு வந்தால் உள்ளே நீராவியின் அழுத்தம் அதிகம் என்று பொருள். உடனே காஸ் அடுப்பை ஸிம்மில் வைத்துவிட வேண்டும். இப்போதுகூட வெயிட் வால்வ் எப்போது வேண்டுமானாலும் தூக்கி அடிக்கப்படும் அபாயம் உண்டு. எனவே கவனமாக அருகிலேயே இருந்து அடுத்த 10 நிமிடங்களில் குக்கரை இறக்கி விட வேண்டும்.



6. குக்கரை அடுப்பில் வைத்துவிட்டு எக்காரணம் கொண்டும் வெளியே போகக் கூடாது. தனியாக இருக்க அனுமதிக்கக் கூடாது.

7. தொடர்ந்து ஒரு குக்கர் தொந்தரவு கொடுத்தால் அருகில் உள்ள டீலரிடம் கொடுத்துப் பழுது பார்க்க வேண்டும்.

8. இரண்டு குக்கர்கள் இருந்தால் (ஒரே கம்பெனியாக இருந்தால் கூட) ஒன்றின் மூடியை மற்றதற்கு மாற்றிப் பயன்படுத்தக் கூடாது.

9. தொடர்ந்து உப்புத் தண்ணீரை உபயோகித்தால் குக்கரின் அடிப்பாகத்தில் உப்பு படிந்துவிடலாம். இதனால் சூடு எளில் கடத்தப்படாது. எனவே குக்கர் அடுப்பில் இருக்கும் நேரம் அதிகமாக இருப்பதோடு அதிக அழுத்தம் ஏற்பட்டுக் குக்கர் வெடிக்கும் அபாயமும் இருக்கிறது. எனவே டீலரிடம் கொண்டு சென்று உப்புப் படிவத்தை நீக்க வேண்டியது அவசியம்.

10. எல்லாவற்றையும் மீறிக் குக்கர் வெடித்துவிட்டால் முடிந்தால் காஸ் சிலிண்டரை மூடிவிட்டு வெளியே ஓடி வந்து விடவேண்டும். குக்கர் அருகில் போகவோ, மூடவோ எக்காரணம் கொண்டும் முயலக் கூடாது. கொதிக்கும் நீரைவிட நீராவியின் உள்ளுறை வெப்பம் அதிகம். எனவே ஆவி பட்டால் ஏற்படும் தீக்காயம் ஆழமானதாக (செகண்டரி பிளிஸ்டர்) இருப்பதோடு உடலுக்கு அதிகச் சேதத்தையும் உண்டாக்கும்.

11. காஸ் அடுப்பு எரிந்து கொண்டிருக்கும் போது குக்கர் வெடித்துவிட்டால் அதிர்ச்சி காரணமாகச் சிலிண்டரும் வெடிக்க வாய்ப்பு உள்ளது. அப்படி நேர்ந்தால் உடனே தயங்காமல் தீயணைப்பு நிலையத்திற்குப் போன் செய்ய வேண்டும். இத்தகைய விபத்து பெரும் தீ விபத்தாக மாறலாம்.

—தாம்பரம் லக்ஷ்மி சங்கர்.

கல்கி

ஏப்ரல் 14உ

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில்

இளைஞர் சிறப்பிதழாக மலர்கிறது



சுஜாதா

எழுதும்

முழுநீள நாவல்



புதிய தொடர்கதை

வாசந்தி

எழுதும்

மௌனப் புயல்

கவிஞர்

வைரமுத்து

வாரம் ஒரு கடிதம்



இளைஞர்களுக்கு

எழுதுகிறார்

மற்றும் இளைஞர்களைப் பற்றிய பல சுவையான தகவல்கள்,

இளைஞர்களுக்குப் பயன்தரும் புதுமை அம்சங்கள்:

அதிக பக்கங்கள் அதே விலை

நாளெல்லாம் திருமதி இலட்சுமி வீட்டில் தனியாய் இருக்கலாம். ஆனல், தனிமை-யாக அல்ல! கூடவே இருப்பது— நீப்போ!



"நம்பினோர் கைவிடப் படார்"

குடும்பத்தினரை வேலைக்கும், படிக்கவும் வழி அனுப்பிவிட்டு, வீட்டுக்குள் நுழையும்போது, வெளியுலகத்தின் கதவுகள் மூடிக் கொள்வதுபோல் தோன்றும்.

அந்த நேரங்களில் எனக்கு நம்பிக்கையான துணை—நிப்போ ஸ்பெஷல்.

டிரான்சிஸ்டரில் போட்டு எனக்குப் பிடித்த ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்டு ரசிக்க, துல்லியமான, கணீரென்ற நாதம் மனதை நிரப்ப உதவு கிறது நிப்போவின் சக்தி.

எப்போதும் பக்கத்தில் ஒருவர் துணையாய் இருப்பதுபோன்ற தைரியம். டார்ச் லைட்டுக்கும் நிப்போ ஸ்பெஷல் மிகவும் ஏற்றது. விலையிலும் எவ்வளவு சிக்கனம்! என் நம்பிக்கைக்கு உகந்தது — நிப்போ!

NIPPO
Batteries

"ஆம்! நிப்போவை
நம்பினோர் என்றும்
கைவிடப்படார்".



நிப்போ பாட்டரிகள்:
நேஷனல்-ஜப்பானின் தொழில் நுட்பத்தில் தயாரானவை

INL 5C 84 TAM

இன்றைய மன நிலையில் பிரமோத் குப்தாவின் தோழமை கூட வேண்டியிருந்தது. மாலு ஒருத்திக்குத்தான் அவனுடைய மன உளைச்சல்களைப் புரிந்து கொள்ளக் கூடிய புத்திசாலித்தனம் இருப்பதாக அவன் நினைத்துக் கொண்டான். மாலு கிடைக்காவிட்டால், அவனது பழைய வாழ்வைச் சேர்ந்த யாரானாலும், அது பிரமோத் குப்தாவாகவே இருந்தாலும் கொய்ட் வெல்கம்...

பிரமோத் தன் எதிரே உட்கார்ந்திருந்த பாலுவைப் பார்த்து மேம்போக்கான புன்னகை புரிந்தான். பணக்காரச் சதையில் மெருகும், பளபளப்பும் கூடியிருந்தன. மேல் நாட்டு வாசத்தில் அதிக சிகப்பாகி பார்வையில் அதிகத்தன்னம்பிக்கையுடன்.. பணக்காரனாய்ப் பிறப்பது எத்தனைப் பெரிய அனுகூலம்! பர்ஸனாலிட்டியை டெவலப் செய்ய சிரமப்படவே வேண்டாம். பிறவியுடனேயே ஜனித்துவிட்ட அங்கம் அது இவர்களுக்கு!

பணிவுடன் வந்து நின்ற பேரரிடம் விஸ்கி சோடாவுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு பிரமோத் இன்னும் அகலமாகப் புன்னகைத்தான்.

எல்லைகளின் விளிம்பில்...

18

வாஸந்தி



முன்னைக்கு இப்போ ஆள் ட்ரிம் மாய்த் தெரியறே பாலு! யு லுக் ஸ்மார்ட் யூ நோ!''

''முன்னே ஸ்மார்ட்டா இருக்கவில்லை என்கிறாயா?''

''படிப்பிலேயும் பேச்சிலேயும் நான் ஸ்மார்ட்! பார்க்க இல்லே! இப்ப இருக்கே.''

இவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு இவனுடன் குடிக்க உட்கார்ந்தது அசட்டுத்தனம் என்கிற மெல்லிய நெருடலை ஒதுக்கிவிட்டு பாலு கேட்டான்.

''நீ அமெரிக்கா போனதே எனக்குத் தெரியாது. வேலை விஷயமாப் போயிருந்தியா?''

விஸ்கியை ஒரு பெரிய விழுங்கு விழுங்கி பிரமோத் சிரித்தான்.

''இந்தியாவை விட்டு வெளியிலே போயிடணும்னு ஒரு வெறுப்பு ஏற்பட்டுப் போயிருந்தது. படிப்பு, பிஸினஸ் என்கிற சாக்கிலே கம்பெனிச் செலவிலேப் போயிட்டு வந்தேன். எங்கப்பாவுக்கு நான் பிள்ளை என்கிற காரணத்தாலே கம்பெனியும் அனுப்ப ஒத்துக் கொண்டது.''

மறுபடி ஒரு மிதப்பான புன்னகை. நான் விரலசைத்தால் காரியம் நடக்கும் என்கிற பார்வை.

''இந்த காரணத்தாலேயே தான் உனக்கு சிரமமில்லாமயே வேலையும் கிடைச்சது. வெறுப்பு ஏற்பட்டுப் போயிடுத்துன்னு நீ சொல்றது வேடிக்கையாயிருக்கு பிரமோத்! எதுக்கும் சிரமப்படாத அலட்டிக்காத வாழ்க்கை உள்ளவனுக்கு எதை வெறுக்கவும் காரணமில்லை...''

''பாலு, காதலிச்ச அனுபவம் உனக்கு உண்டோ?''


பாலு அதிர்ந்து போய் நிமிர்ந்தான். இதற்கு என்ன பதில் சொல்வது?

நான் காதலித்தேனா? காதல் என்பது ஒரு சத்யமான உணர்வா? உண்மைக்கு புறம்பானதா? வெறும் பிரமையா? உண்மைக்காக இருந்தால் அசோக் ஹோட்டலின் இருள் படர்ந்த லௌஞ்சில் துரோகம் செய்திருக்குமா? விஸ்கியின் சூடு நாடி நரம்புகளையெல்லாம் பற்றி நெஞ்சில் ஜ்வாலையாக அமர்ந்து கொண்டது.

அவனுடைய பதிலை எதிர்பார்க்காத ஒரு மெதப்போடு பிரமோத் குப்தா தொடர்ந்தான்.

''காதல் விவகாரத்திலே ஏற்பட்ட தோல்வியினாலே எனக்கு உலகம் வெறுத்துப் போய் விட்டது!''

ஏதோ பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லி விட்டாற்போல் பிரமோத் சிரித்தான். கண்



களில் லேசான சிவப்பேறியிருந்தது. கன்னங்கள் பளபளத்தன. பிறகு திடீரென்று முகம் இறுகிப் போயிற்று. கோபமோ நிராசையோ ஏதோ ஒன்று அழுத்தமாகத் தென்பட்டது.

"இப்பொழுது யோசித்துப் பார்த்தால் எல்லாம் ஒரு ஈகோ ட்ரிப் என்று தோன்றுகிறது. ஆனால் அந்தச் சமயத்தில் எனக்கேற்பட்ட துக்கமும் கோபமும் அவமானமும் சத்யமாகத் தோன்றிற்று. இப்பொழுது நினைச்சாலும் அதிர்ச்சி ஏற்படறது. ஒரு பெண்ணாலே எப்படி அப்படி நடந்து கொள்ள முடியும்?

வேறு ஒரு சமயமாக இருந்தால் குப்தாவின் சுயசகாப்தமும், சுயப்பிரதாபமும் அலுப்பை ஏற்படுத்தியிருக்கும். இன்றைய மனநிலையில், தன்னை விஸ்கி செய்த வேலையில், குப்தாவின் பால் காரணம் புரியாத இரக்கம் சுரந்தது..."

"எப்படி?"

குப்தாவின் கண்கள் விரிந்தன. தடித்த உதடுகள் துடித்தன.

"என்னிடம் உயிரே வைத்திருப்பதாக நடித்தவள். அநேகமாய் என்னுடைய மனைவியாகவே ஆகிவிட்டவள், ஹௌ கான் ஷி டிரீட் மீ லைக் தட்? உனக்கும் எனக்கும் சம்பந்தமேயில்லை என்று எப்படி அவ்வளவுக்கும் பிறகு சொல்ல முடிந்தது?"

"டூ பாட்!" என்றான் பாலு! அனுதாபத்துடன்.

"காரணம் சொன்னா நீயே அதிர்ந்து போவே. என்னுடைய அப்பாவும் அவளுடைய அப்பாவும் ரொம்ப ஃப்ரண்ட்ஸாக இருந்தார்கள். அதாவது எங்கப்பாவுக்கு மேலிடத்திலே செல்வாக்கு இருந்த வரை. திமர்னு அந்தச் செல்வாக்குக் குறைந்து போய்விட்டது சில காரணங்களாலே. எங்களோட சம்பந்தத்தாலே லாபமில்லேன்னு தெரிஞ்ச உடனே என்னை ஒதுக்கிவிட்டார்கள்.

"சுயநலவாதிகள் அதிகமாகி விட்டார்கள் இப்பொழுது. பிரமோத், விவஸ்தை கெட்டுப் போய்விட்டார்கள்," என்ற பாலுவின் குரலில் ஆத்மார்த்த துக்கம் ஒலித்தது.

பிரமோத் குப்தாவின் விழிகளில் இன்னும் ஆச்சரியம் குறையவில்லை. "வெளிநாடுகளில் பார்த்திருக்கிறேன் பாலு, பெண்கள் நடந்து கொள்வதை — யாருடன் வேண்டுமானாலும் படுக்கைக்குப் போவார்கள். அடுத்த நிமிஷம் மறந்து விடுவார்கள். இந்தியாவில் பெரிய பட்டணங்களில் சில பெண்கள் இப்படி இருக்கிறார்கள். நான் ஒரு மேல் ஷாவினிஸ்ட் என்று வேண்டுமானால் நினைத்துக் கொள். அந்த மாதிரி பெண்களிடமிருந்து நான் ஒதுங்கிவிடுவேன். இந்தப் பெண்ணிற்கும் எனக்கும் கல்யாணம் நிச்சயம் என்றே பேச்சாக இருந்தது. அந்த நிச்சயத்தில் நானும் அவளும் ஸிம்லாவில் ஒரு வாரம் இருந்தோம். அத்தனைக்கும் பிறகு அவள் கொஞ்சங்கூட வருத்தமில்லாமல், 'உனக்கும் எனக்கும் சரி வராது' என்கிறாள். ஐ ஷுட் ஹாவ் நோன் ஹர் பெட்டர் யார்! மதராஸி அப்படி நடந்து கொள்ள மாட்டாள் என்று நம்பினேன்."

"ஆ, யாரையும் நம்புவதற்கில்லை," என்று தடுமாறிய பாலு, ஒரு வினாடி சித்ராவைப் பற்றிச் சொல்லலாமா என்று யோசித்தான். திடீரென்று ஒரு சோர்வு ஆட்கொண்டது. என்னுடைய அவமானத்தை இவன் புரிந்து கொள்ள மாட்டான் என்று தோன்றிற்று.

எத்தனையெத்தனை அவமானங்கள்...? பெண்ணின் இன, சதை, பொருளாதாரக் கவர்ச்சியில் கொள்கைகளை மறந்து எனக்கு நானே இழைத்துக் கொண்ட அவமானம்... சிபாரிசு இல்லாமல் வேலைக் கிடைத்ததாக மார் தட்டிக் கொண்டிருக்க, நாகநாதன் அந்த பிரமையை நேற்று உடைத்ததன் அவமானம்... சித்ராவின் அகம்பாவத்தால் ஏற்படும் அவமானம் தாம்பத்யத்தை அவமதிக்கும் அவமானம்,

"கான் யூ பிலீவ் இட் 'யார்?' " என்றான் பிரமோத் ஆச்சரியம் குறையாமல்.

"பப்ளிக்கா அவளை அவமானப் படுத்தணும்னு மகா ஆத்திரம் வந்தது. எங்கப்பா அதுக்கு இடம் கொடுக்கல்லே. "நல்லதாப் போச்சு போ," என்றார். "அந்தக் குடும்பத்துச் சம்பந்தம் நமக்குத் தேவையில்லே'ன்னு உடனடியா டிக்கெட்டை வாங்கி வெளிநாட்டுக்கு அனுப்பிட்டார். அவளுடைய அப்பன் பெரிய ஆள். எங்கப்பாவுக்குச் சந்தேகம். கவர்ன்மெண்ட் வேலையிலே இருந்து கொண்டே அந்த மனுஷன் ஏதேதோ தில்லுமுல்லு பண்றாரோன்னு

துவரம் பருப்பு தோசை

உளுத்தம் பருப்பு சேர்க்காமல், பச்சை அரிசி 1 ஆழாக்கு, புழுங்கல் அரிசி 1 ஆழாக்கு, வெந்தயம் 2 ஸ்பூன், துவரம் பருப்பு 2 ஸ்பூன் சேர்த்து ஊற வைக்கவும். இதை முதல் நாள் இரவு ஊற வைத்து பின் காலையில் அரைத்து வார்த்தால் நன்றாக இருக்கும். தோசைக் கல்லில் மாவு ஊற்றி தட்டு வைத்து மூடி திருப்பாமலேயே எடுத்துவிடலாம். அதிக எண்ணெய் செலவும் ஆகாது. தக்காளி தொக்கு தொட்டுக் கொள்ள நன்றாக இருக்கும்.

—பத்மா ராமமூர்த்தி



கற்பனை பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவை பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை.
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்.
அக்கூந்தலுக்கு
வி.வி.டி.தேங்காய் எண்ணெய்...

V.V.D

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

V.V.D



EP-VVD-4/84

கவர்ன்மெண்ட் வேலை ஒரு கவராப் போச்சு இப்பப் பல க்ருக்ஸுக்கு...''

பாலுவுக்கு திடீரென்று நாகநாதனின் ஞாபகம் வந்தது. மேற்கொண்டு பிரமோத் குப்தாவிடம் விவரம் கேட்கலாமா கூடாதா என்று மூளை தயங்கி அதிர்ந்து நின்றது.

''மதராஸி அப்படி நடந்து கொள்ள மாட்டான் என்று நம்புகிறேன்!''

''அவர் பெயர் நாகநாதனா?''

''ஆமாம், உனக்கு அவரைத் தெரியுமா?''

அவனுக்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஓ காட், நோ!

உள்ளங்கை வியர்த்து விரல்கள் லேசாக நடுங்கின. நெற்றி வியர்த்து மார்பு படபடத்தது. விழிகள் வெறித்தன.

என்னுடைய வீடு ஏற்கெனவே பொத்தல் விழுந்தது. சந்தியில் நின்று சிரித்துப் போனது. பெரிய மனிதப் போர்வை போர்த்தியிருப்பதால் எல்லோரும் காது படக் கைகொட்டிச் சிரிப்பதில்லை... ஆனால் அவனைப் பார்க்கும் போதெல்லாம் பெரிய மனிதர்கள் கும்பலில் தவழும் மறைமுகப் புன்னகையில் ஐயோ பாவப் பார்வையில், கேலிக் கிசுகிசுப்புக்களில் அவர்களது கைக்கொட்டல் தெரிகிறது...

''பேரர்... க்ளாஸை நிரப்பு...''

அவனுக்கே கூடச் சிரிப்பு வந்தது. பிரமோத் குப்தா கிளம்பிப் போன கையுடனே அவனுக்காக நாகநாதன் வலைவிரித்திருக்கிறார்.

சரியான வலை — தன் குடும்ப ரகசியங்கள் தெரிய முடியாத வட்டத்தைச் சேர்ந்த ஒரு பையனை, தமிழ்நாட்டு எளிமையையும் நேர்மையையும் மறக்காத குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சாதுப் பையனை, படிப்பிலும் சோடையில்லாதவனை... ஆனால் வேலை கிடைக்காமல் சோர்ந்திருப்பவனை — '

இதைவிட அருமையான இரை எங்கே கிடைக்கும்? பெண்ணிற்கு ஒரு கவசம், தனது தில்லுமுல்லு வேலைகளுக்கு ஆமாம் சாமி போட ஒரு கருவி — ஒரு ஏமாளி — பிரமோத் தோழமையுடன் அவன் கையைப் பற்றினான்.

''இப்பக்கூட அவ வாழ்க்கையை என்னாலே நாசமாக்க முடியும்.''

''எப்படி?''

''யாரோ ஒரு முட்டாள் அவளைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கானும் தெரியுமோ! அவனைக் கூப்பிட்டு எல்லா விஷயத்தையும் சொல்லிடுவேன்!''

பாலு திடீரென்று பக பகவென்று சிரித்தான்.

''நீ சொன்னால் யாருக்கு நஷ்டம்? அந்த முட்டாளுக்குத்தான் அவமானம். அந்தப் பெண்ணுக்கு ஒரு அவமானமும் இருக்காது. பிரமோத் திஸ் இஸ் ஹில்லேரியஸ்! இன்னொரு பெக் கொடு...!''

பிரமோத் குப்தா அவனைச் சற்று யோசனையுடன் பார்த்தான்.

''பாலு, நீ எப்பொழுதிலிருந்து குடிக்க ஆரம்பித்தாய், அதுவும் இப்படி? உனக்கு இதெல்லாம் பழக்கமில்லைன்னு நினைச்சேன்.''

பாலு மறுபடி சிரித்தான்.

''பழைய பழக்கங்கள் மறந்து போன நிலையிலே புதுப் பழக்கங்கள் வேண்டாமா? பேரர்... க்ளாஸ் காலி, நிரப்பு!''

ப்ரமோத் குப்தாவுக்கு உண்மையான கவலையேற்பட்டது. மேஜையில் கவிழ்ந்து விட்ட பாலுவின் தலையை உலுக்கினான்.

''பாலு எழுந்திரு, உன் காரிலேயே உன் வீட்டுக்குக் கொண்டு விடறேன்.''

''கோ அஹெட்!''

தனக்குள் சபித்துக் கொண்டே பிரமோத் பாலுவின் கோட் பாக்கெட்டிலிருந்து சாவியை எடுத்து, இருவர் உதவியுடன் காருக்குள் உட்கார்த்திக் காரை கிளப்பினான்.

''பழைய வீட்டிலேதானே இருக்கே?''

பாலுவிடமிருந்து பதிலேயில்லை. மகா ஒழுங்கான பிள்ளையென்று பெயர் வாங்கியிருந்த இவனுக்கு என்ன ஆகிவிட்டது என்று ஆச்சரியமாக இருந்தது. கம்பெனி வேலை.


கம்பெனி விருந்தும் ஆடம்பரமும் குடியும் காணுவதைக் கண்ட மாதிரி பழக்கங்கள் தொற்றிக் கொண்டிருக்கும் — பரதேசிகளுக்கு யோகமடித்தால் இப்படித்தான் இருக்கும் முடிவு...

பழைய நினைவில் அவன் ராமகிருஷ்ண புரத்தில் அந்தச் சிறிய வீட்டின் கதவை இரவு பதினொன்றரைக்குத் தட்டிய போது கதவைத் திறந்த மாலுவுக்கு அவனையும் பாலுவையும் பார்த்ததும்தான் நினைத்திருந்ததை விட அதிக வேகமாகக் காலம் சுழல்வது புரிந்தது.

(தொடரும்)

மல்லிகை, ரோஜா, குச்சிகளில் 'ஒக்கி' ரத்தில் வேர் பிடிக்க வேண்டுமா? இதன் குச்சிகளை வெட்டிக் கொண்டு பாலிதீன் பைகளில் நட்டு, வேர் பிடிக்கும் வரை இருட்டறையில் வைக்க வேண்டும். கால் மணிக்கு ஒரு முறை குச்சிகளை லேசாக நீர்விட்டு நனைத்து வரவேண்டும். இதற்கு ஒவ்வொரு குச்சியின் மேல் நுனியில், நெல்லிக்காய் அளவில் பஞ்சைப் பொருத்திவிட்டால், குச்சிகள் ஈரத்துடனேயே இருக்கும். தினமும் இரண்டு அல்லது மூன்று முறை குச்சியுடன் பஞ்சை நனைத்துவிட வேண்டும்.

—மதுபாலன்.



ஒரு கர்ப்பப் பெண்ணின் உடல்நிலையும், மனநிலையும் உருவாகும் குழந்தையைப் பெரிதும் பாதிக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. போஷாக்கான, சத்துள்ள உணவும், மனசாந்தியும், அமைதியான வாழ்வும், நல்ல சிந்தனையும், ஆரோக்கியமான குழந்தையை உருவாக்கும்.

முதல் மாதமே குழந்தையின் தலை, மூளை, உடல், இதயம் என்று எல்லாப் பாகமும் உருவாகிறது. ஆனால் இந்த நிலையில் கரு 'ஜல்லி' மாதிரி இருக்குமே தவிர துளிக்கூட மனித சாயல் இருக்காது.

இரண்டாவது மாதத்தில் தான் கொஞ்சம் உருவம் பெறுகிறது. இப்பொழுது அதற்குக் கண், காது, மூக்கு, நாக்கு எல்லாம் தோன்றிவிடும். தசையும், நரம்புகளும் ஒத்துழைக்க ஆரம்பிக்கின்றன.

மூன்றாவது மாதக் கரு சில சமயம் சுவாசிப்பது போல் செய்கிறது. ஆனால் அதற்குத் தேவையான பிராணவாயுவெல்லாம் தாயின் ரத்தத்தின் மூலமாக, தொப்புள் குழாய் வழியாகத்தான் கிடைக்கிறது. இந்த நிலையில் தாயின் எல்லா அசைவுகளையும், அவளின் இதயத் துடிப்பு, அவள் நடப்பது, ஓடுவது, அவளின் உணர்ச்சிகள் எல்லாவற்றையுமே கரு உணர்கிறது.

முதல் மூன்று மாதத்தில் தாயின் மனநிலை, கருவின் உடல் வளர்ச்சியையும், மனவளர்ச்சியையும் பெரிதும் பாதிக்க வல்லது. கர்ப்பிணிப் பெண்ணின் உடலில் ஏற்படும் ரசாயன மாற்றங்கள் ரத்தத்தின் மூலம் கருவையும் பாதிக்கும்.

ரொம்பத் தீவிரமான மனக்கிளர்ச்சியின் பொழுது தாயின் உடலில் வெளிப்படுத்தும் சில ரசாயனங்கள், கருவின் வளர்ச்சியின் முக்கியமான கட்டத்தில் அதன் மூளையை நரம்புகளை நிரந்தரமாகப் பாதிக்க வல்லது.

இந்த நிலையில் கருச்சிதைவு ஏற்படலாம். அல்லது கருவின் கண் குருடாகலாம். உதடு, நாக்கு உரு மாறலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.

கர்ப்பப்பையின் உஷ்ணநிலை, அழுத்தம் முதலியவை மிகவும் நுண்ணியமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. வெளி உலகுடன் தொடர்பேயில்லாமல் மூச்சு விடவும் தாயையே சார்ந்திருக்கிறது. உயிர் வாழவும், சீரான உடல் வளர்ச்சிக்கும் அத்தியாவசியமான பிராணவாயு தாயின் ரத்தத்தின் மூலமே கருவுக்குக் கிடைக்கிறது. உறுதியான

எலும்பும், திடமான உருவமும் இல்லாத நிலையில் சின்ன அதிர்வும், அழுத்தமும் கூட, உடல் உறுப்புக்களையும், 'செல்'களையும் காயப்படுத்த வல்லது.

இவை எல்லாம் தெரிந்திருந்தும், ஒரு பெண் கருவுற்றிருக்கும் பொழுது தன் கணவனுடன் உடலுறவு கொள்ளலாமா என்ற கேள்விக்கு, உடல் உறவே கொள்ளக் கூடாது என்றால் தம்பதிகளின் மணவாழ்க்கையே பாதிக்குமோ என்ற சம்சயத்தால், அனேக டாக்டர்கள் திட்டவட்டமாக பதில் சொல்வதில்லை. பலாத்காரம் இல்லாமல் மென்மையாக இருக்கலாம் என்று மட்டுமே சொல்கிறார்கள் (நம்மில் பெண்ணுக்குக் கண்ணாடி வளையடுக்கி அது உடையக் கூடாது என்று சொல்வது இதற்காகத்தான்.)

ஒரு பெண் உடலுறவு கொள்ளும் நேரத்தில், உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில், அவள் உடலில் அனேக மாறுதல்கள் ஏற்படுகின்றன. நாடித் துடிப்பு, மூச்சுவிடும் விதம், ரத்த அழுத்தம், ரத்த ஓட்டம், புலன்களின் சக்தி, தசைநார்களின் முறுக்கம் எல்லாவற்றிலுமே மாற்றம் ஏற்படுகிறது. உடலின் இயற்கை அமைப்பே முற்றிலும் மாறுபடுகிறது. காது மடல்கள் தடித்து, உதடுகள் வீங்கி, மார்பகங்கள் புடைத்து, கைகால்கள் விறைத்து, வயிறு இறுகி, கர்ப்பப்பை சுருங்கி, இன்னமும் சொல்ல முடியாத எவ்வளவோ நுணுக்கமான அசாதாரண மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவள் உடலில் ஒவ்வொரு பாகமும் பிராணவாயுக் குறைவினால் அவதிப்படுகிறது. அவள் வேகமாக சுவாசித்தாலும் உடலுக்குத் தேவையான பிராணவாயுவை அளிக்க முடிவதில்லை.

இந்த நிலையில் கர்ப்பப்பையில் இருக்கும் கருவின் நிலை என்ன ஆகும் என்று சிறிது சிந்தித்துப் பாருங்கள் என்கிறார் டாக்டர் ரோமன் லேனர்.

ஏழு அல்லது எட்டு மாத கர்ப்பிணியின் உடல் நிலையைப்பற்றியே எல்லோரும் அதிகம் கவலைப்படுகின்றனர் — ஏதேனும் அதிர்வு காரணமாகக் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டுவிடுமோ, குழந்தை முன்னதாகவே பிறந்து விடுமோ என்று. ஆனால்-குழந்தை உருவாகும் நிலையில், முதல் மூன்று மாதத்தின் முக்கியத்தை உணர்வதில்லை (சில வீடுகளில் பெண்ணை முதல் மூன்று மாதம் — மசக்கை நேரத்தில் பிறந்தகத்துக்கு அனுப்புவார்கள்.)

எத்தனையோ குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றிப் பிறந்தாலும், டாக்டர்களால் அதைத் தாய் கருவுற்ற நிலையில் உடலுறவு கொள்வதுடன் சம்பந்தப்படுத்தித் திட்டவட்டமாகச் சொல்ல முடிவதில்லை.

முதல் குழந்தை நிறைய அழுகிறது. (மனிதக் குழந்தையைத் தவிர வேறு எதுவும் பிறக்கும் பொழுது அழுவதில்லை.) குறைந்த எடையுள்ளதாக இருக்கிறது. இளம் பெண் ஆரோக்கியமாக இருந்தாலும் முதல் பிரசவம் சிரமமாக இருக்கிறது.

புதிதாகக் கல்யாணம் ஆன சில இளம் தம்பதிகள் உடலுறவில் அதிகம் ஈடுபடுவார்கள் என்பதால் இதுவே ஒரு காரணமாக இருக்குமோ என்று ஆராய்ச்சியாளர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

பொதுவாக முதல் குழந்தை பயந்த சுபாவமாகவும், நிதானமாகவும், தன்னம்பிக்கை இல்லாமலும், ஒரு நிர்ப்பந்தமான நிலையில் துரிதமாகச் செயல்பட முடியாமலும் இருக்கிறது. (ஆனால் மூத்த குழந்தைகள் தான் ஆபத்தான வேலைகள் செய்ய முன் வரவும் செய்கிறது.) என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மனைவி கர்ப்பமான நிலையிலும் தம்பதிகள் உடலுறவு கொள்வது அவர்கள் மணவாழ்க்கை சீராகச் செல்ல மிகவும் அவசியம். ஒன்பது மாதமும் தடை செய்தால் அவர்களின் தாம்பத்தியத்தில் முறிவேற்படலாம் என்பதுதான் அநேக திருமண ஆலோசனைக் குழுவினரின் அபிப்பிராயம்.

ஆனால் குழந்தை வேண்டுமானால் மட்டுமே பெற்றுக் கொள்ளும் இந்த நாளில், தம்பதிகள் குழந்தை பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தால், நிச்சயமாகச் சொந்த விருப்பத்திற்கு முன் குழந்தையின் நலனையே கருத வேண்டும். மனிதன் மட்டுமே, தன் பிறக்கப் போகும் குழந்தையின் நலனுக்கும் மேல் தன் இன்பத்தை விரும்புபவனாக இருக்கிறான். மிருகங்கள் எதுவும் கருவுற்ற பெண் இனத்திடம் உடல் உறவு கொள்வதில்லை. பெண் மிருகமும் இந்த நிலையில் ஆண் மிருகத்தை ஏற்றுக் கொள்வதில்லை.


அநேக மதங்கள் கர்ப்பப்பெண் உடலுறவு கொள்வதைத் தடை செய்கிறது. இன்றும் அநேக ஆதிவாசிகள் கர்ப்பப் பெண்ணை அவள் கணவன் நெருங்குவதை அனுமதிப்பதில்லை. (அநேகமாக இவர்களுக்கு ஒரு மனைவிக்கு மேல் இருப்பார்கள்.)

முதல் மூன்று மாதத்தில் பெண்ணுக்கு உடல் உறவு கொள்ள வேண்டும் என்ற இச்சை இயற்கையாகவே இருப்பதில்லை. இந்த நிலையில் உடலுறவு கொண்டபின் வயிற்றுவலி ஏற்படுவதாக அநேகப் பெண்கள் டாக்டர்களிடம் கூறுகிறார்கள்.

கர்ப்பிணி உடலுறவு கொள்வது கருச்சிதைவை ஏற்படுத்தும் என்று ஹிப்போகிராட்ஸ் இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பே சொல்லியிருக்கிறார்.

1950—ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த ஒரு விவாதத்தில் கலந்துகொண்ட முப்பத்தைந்து மகப்பேறு மருத்துவர்களும் கர்ப்பிணிப் பெண் உடல் உறவு கொள்வது கருச்சிதைவை ஏற்படுத்தக் கூடியது என்ற கருத்தை ஒரு மனதாக ஆமோதித்தனர்.

—ஜெயா வி. ராமன்.



"டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் நெடுங்கால ரகஸ்யத்தை இப்போது நானும் அறிவேன்"

"அது என்னுடைய கூந்தலை நாள் முழுவதும் கருமையாகவும், பட்டுப் போல் மிருதுவாகவும் வைத்திருக்கிறது.

டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் மகிமையை, அழகான நீண்ட கூந்தலுடைய ஒரு இளம் பெண்ணிடமிருந்து அறிந்து கொண்டேன். அவளும், அவள் தாயாரும் பல வருடங்களாக டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தை உபயோகித்து வருகிறார்களாம்.

இப்போது நானும் அவர்களுடைய ரகஸ்யத்தை பகிர்ந்து கொண்டு நாள்தோறும் டாபர் ஆம்லா தைலத்தை உபயோகித்து வருகிறேன். அது எனது கூந்தலுக்குத் தகுந்த ஊட்டமளிப்பதுடன், அதன் இயற்கை எழிலையும் அதிகரிக்கச் செய்கிறது. குளுமையான, மென்மையான மணமுடைய டாபர் ஆம்லா கூந்தல் தைலம், உங்கள் கூந்தலை மிருதுவாகவும், பட்டுப்போலவும் திகழச் செய்யும்.

இது பல பெண்கள் நீண்ட காலமாக பகிர்ந்து கொண்டுவரும் ஒரு ரகஸ்யம்."



டாபர் ஆம்லா ஹேர் ஆயில்

ஜெயபிரதா டாபர் ஆம்லா கூந்தல் தைலத்தின் ரகஸ்யத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

டாபர் (டாக்டர் எஸ்.கே. பர்மன்) பி.லிட்., ஹர்ஷா பவன், பிளாக்-இ, கன்னாட் பிளேஸ், புது தில்லி-110001.

'ஏ! கலா...! ஜெம்பியாச்சா? ஜவுளிக் கடையைப் பூட்டிடப் போறாங்க'.

கலா பரபரவென்று புடவையைச் சுற்றிக் கொண்டு வந்தாள். அலமாரியைத் திறந்து தன் கல்யாணப் பத்திரிகையை எடுத்துக் கைப்பைக்குள் திணித்துக் கொண்டாள்.

'காலம் கெட்டுக் கிடக்குடா முருந்தா! கல்யாணப் பெண்ணே பத்திரிக்கை கொடுக்க டிரஸ் எடுக்க அலையறாப் போல இருக்கு' முருந்தன் கூற, கண்ணன் சிரிக்க கலா இருவரையும் ஒரு முறை அமர்த்தலாக பார்த்து விட்டு நகர்கிறாள். காரில் ஏறிக் கொண்டவள், முருந்தனை அழைத்தாள். 'டேய்! முருந்தா! மறக்காம அமெரிக்காவிலிருந்து கேபிள் வந்துதான்னு ஆபிஸில் விசாரிக்க வைடா!'

'மாப்பிள்ளையிடமிருந்து தானே! கண்டிப்பா செஞ்சுடறேன்...'

''சீ போடா எப்போதும் கேலி தான்' கலாவின் முகம் சிவந்தது. கார் புறப்பட்டது.


'ஏ..ம்மா! கலா! கல்யாணம் உன் விருப்பப்படிவிமரிசையா நடக்கணும்னுதான் நானே ஒரு மாதம் லீவு போட்டுட்டு வந்திருக்கேன் நீ கவலைப்படாமல் சந்தோஷமாயிரு! எல்லாம் தன்னால் நல்லபடி நடக்கும்' ஏதேதோ பேசி வந்தார் அண்ணா! 'இன்னும் அவ..டமிருந்து ஒரு தபாலும் இல்லே! இவ்வளவுக்குப் பின்... ஏதாவது தவறாக நடந்து.. நினைக்கவே அஞ்சியது மனம்! நல்லபடி முடிய வேண்டுமே! வழி நெடுக, இதே சிந்தைதான் கலாவுக்கு.

'டேய் கண்ணா! ஜவுளி மூட்டை வந்தாச் சுடா!'


ஆவலுடன் வந்து அள்ளிச் சென்றான் கண்ணன். உள்ளே நுழைந்த கலா வேகமாய் டெலிபோனைச் சுழற்றப் போனாள். ''நில்லுடீ கலா! கேபிள் வந்தாச்சு. மாப்பிள்ளை நாளை மாலை வருகிறாராம்'.

'அப்பா..டா நிம்மதி அக்கா! இவ்வளவு ஏற்பாடும் வீணாகி போனால், நான் எப்படி வெளியில் தலை காட்டுவேன்'

ஜேகலா ராமன்



கலாவுக்குக் கல்யாணம்



'உனக்கு மட்டுமா? எங்களுக்கும் தான். என்ன ஏதுன்னு எல்லோரும் கேட்கும் போது என்ன பதில் சொல்வது? நல்லதாப் போச்சு, போ! இனிமேயாவது நீ கொஞ்சம் அலட்டிக்காமே ரெஸ்ட் எடு' ஓய்வு எடுக்க விட்டால் தானே!

'கலா! மாப்பிள்ளைக்கு டிரஸ் வந்தாச்சு. டெய்லர் பையன் வந்திருக்கான். சரிதானா பாரு'

'இதோ வந்துட்டேன் அண்ணா!' விரைந்து வந்தாள் கலா! கண்ணனும் முகுந்தனும் கண்ணடித்துச் சிரிக்க, அவர்களை முறைத்து விட்டுப் போனாள் கலா. இவங்க ரெண்டு பேரும் என்ன பாடு படுத்தறானுங்க! வயது கடந்தாத்தான் என்ன? கல்யாணம் கல்யாணம் தானே.

அண்ணாவும் மன்னியும் பந்தல் அலங்காரம் கவனிக்கப் போய் விட்டார்கள். கண் அயரப் போன கலாவை கூடத்து இரைச்சல் எழுப்பியது.

கண்ணன், முகுந்தன், மைதிலி, வித்யாவின் குரல்கள் கூடத்தில் ஒலித்தன.

'டேய் முகுந்தா! உன் ரூமைக் காலி செய்து 'டெகரேட்' பண்ணணும்டா! வித்யாகிட்டே கேட்டுக்கோ! என்னைத் தொந்திரவு பண்ணாதேப்பா!'

'இல்லடா கண்ணா! அவர் ஃபாரின் ரிடர்ன் டு. உன்னுடைய ரூம் தான் சகல வசதியோட இருக்கு. அட்டாச்டு வேற' வேண்டுமென்றே சத்தப் பேசுகிறார்களோ! எட்டிப் பார்த்தாள். 'கொல்' என்ற சிரிப்பொலி அவளைக் கூனிக் குறுகச் செய்தது.

'என்..ன! உங்களுக்குத்தான் ஏற்பாடுகள்...! அதெல்லாமாவது நாங்க கவனிச்சுக்கட்டுமா... இல்லே...'

'போங்கடா வெளியே... சரியான அரட்டை கோஷ்டி!' இரண்டு நாட்களுள் இப்படி எத்தனை கேலி, கிண்டல்கள். வெளியில் கோபித்துக் கொண்டாலும், இனிக்கத்தான் செய்தது.

ஆயிற்று இதோ அவரும் வந்து விட்டார் எவ்வளவு நிறுத்தியும் கண்கள் கேட்கிறதா! ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். அப்...பா! என்ன கம்பீரம்! இவரருகில் நான் நின்றால், நான் தான் கொடாட்டம் இருப்பேனோ? கண்ணனும் முகுந்தனும் அவரையும் விடவில்லை. ஏதோ கேலி செய்ய, கண்கள் அலை பாய சிரித்துக் கொண்டே வருகிறார். 'என்னடா! நூறு தரம் கேபிள் வந்துதான்னு கேட்டுக் கேட்டு ஃபோனையே தேய்த்த கல்யாணப் பொண்ணைக் காணோம்' பொறுக்கவில்லை! 'என்ன கேலி! அவளே அவர் முன்னே போய் நிற்க, ''ஏய், கலா! என்ன உள்ளே ஒளிஞ்சுக் கிட்டே!' உணர்ச்சிக் கலப்பால் பேச முடியவில்லை கலாவால்.


முகூர்த்தம் நெருங்கியது. ஓமப் புகை கரிக்க, தோழிகளும், சிறுவர்களும் புடை சூழ பட்டுப் புடவை சரசரக்க அமர்ந்திருந்தாள் கலா.

'நலுங்கு உண்டா, கேட்டுச் சொல், கலா!?' அக்கா கிண்டலாக கிசுகிசுத்தாள். இவராவது விடுகிறாரா! என்னைக் கேட்கறது என்ன? நடத்திட வேண்டியது தான். ஏய்! கலா! என்ன இப்படி வெட்கம்! நமக்கு நடக்கறது இருபதுக்கு இருபது இல்லேம்மா.. அறுபதுக் கறுபது.' கூடமே கலகலத்தது.

'அதானே! சோஷியல் ஒர்க்கர் கலாவதி அம்மாள்..ன்னு ஊரே தான் பறக்கறது இப்படி வெட்கப் பட்டா எப்படி?' மருமகள் வித்யா விடவில்லை.

'அம்மா! நீ கவலைப்படாதே! இருபது மாதிரியே எல்லா ஏற்பாடும் செஞ்சுருக்கோம்.''

ஹோவென்ற சிரிப்பொலியும், கைத்தட்டலும் கலாவதி அம்மாளின் நெஞ்சை நிறைத்தது.



காலிப் பிளவர் ஊறுகாய்

நல்ல வெள்ளை கலரில் அடர்த்தியான காலிப்ளவர் ஒன்றை வாங்கி அதைச் சிறிய துண்டுகளாகச் செய்யவும். சிறிய காலிப் பளவர் துண்டங்களை நன்றாகக் கழுவி, தண்ணீர் போக வடிகட்டி ஒரு சுத்தமான துண்டில் போட்டு நிழல் உலர்த்தலாக உலர்த்தவும்.

துளிக் கூட ஈரம் இல்லாமல் காலிப்பளவர் துண்டங்கள் காய்ந்த பிறகு தேவையான காரப் பொடி, உப்பு மஞ்சள் போடவும் அத்துடன் 4 எலுமிச்சம் பழத்தின் ரஸமும் சேர்த்து, துண்டங்களை நன்றாகக் கிளறி மூடி வைக்கவும்.

மறுநாள் அரை டீஸ்பூன் சீரகம், அதே அளவு வெந்தயம், சிறிய துண்டு பெருங்காயம் சிறிதளவு கடுகு எண்ணெய் சேர்த்து சிவக்க வறுத்து, பிறகு எல்லாவற்றையும் சேர்த்து அதில் கலக்கவும். பிறகு 4 டேபிள் ஸ்பூன் எண்ணெய் அடுப்பில் வைத்து சிறிது கடுகுக் போட்டு தாளித்து, எண்ணெய் நன்றாக ஆறிய பின், கலவையில் போட்டுக் கலக்க காலிப்ளவர் ஊறுகாய் ரெடி.

3 நாட்கள் கழித்து உபயோகிக்கலாம். 15 நாட்கள் வரை கெடாமல் இருக்கும்.

-சித்ரா



ஹேலோ வழங்குது
கூந்தல் எழில்—
கூந்தல் பெற்றிடும்
மென்மை சுகம்.
அதன் மணமோ
அபூர்வப் புதுமையே,
ஹேலோ உணர்வே
உன்னதமே.



வியப்பூட்டும் புதிய ஹேலோ வரிசை

ஹேலோ எக்
ஷாம்பூ—
புரத
ஊட்டத்திற்கானது.

புதிய ஹேலோ
க்ரீன் ஆப்பிள்
ஷாம்பூ—
வியப்பூட்டும்
புத்துணர்வு மணம்
அளிக்கிறது.

புதிய ஹேலோ
ஹெர்பல்
ஷாம்பூ—
மூலிகைகளின்
இயற்கை நலன்கள்
உள்ளது.

ஹேலோ உணர்வே உன்னதமே!

..B83.29.TM

கொண்டை '85





சில பெண்கள் தங்கள் முக அமைப்புக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத கொண்டையைப் போட்டுக் கொள்வார்கள். கொண்டை அழகாக இருக்கும். ஆனால் அது அவர்கள் முக அமைப்புக்கு ஏற்றவாறு உள்ளதா எனப் பார்க்க மாட்டார்கள். சிறிய வட்ட முகம் உள்ளவர்கள் கொஞ்சம் தூக்கிப் பெரிய கொண்டையாக போட்டால் எடுப்பாக இருக்கும். அதே போல் நீண்ட மூக்கையுடையவர்களும் பெரிய கொண்டையாகப் போட வேண்டும்.

பெரிய நெற்றியுடைய பெண்கள் வகிடு எடுத்து, தலைய வாரி இரண்டு காதுகளின் அருகிலும் சிறிதளவு முடியை எடுத்துச் சுருட்டி விட்டுக் கொண்டால் அழகாக இருக்கும். பெரிய முகம் உள்ளவர்களும் சிறிய நெற்றியுடையவர்களும் வகிடு எடுக்காமல் தூக்கிவாரி, சிறிய கொண்டையாகப் போட்டால் நன்ருக இருக்கும். எவ்வளவு சிறிய முடியாக இருந்தாலும் அவரவர் முடியிலேயே கொண்டை போடலாம். போடுவதுதான் நல்லதும்கூட.

ஏனெனில் கடையில் வாங்கிப் பொருத்தும் கொண்டைகளுடன் சில சமயம் ஆபத்தும் கூட வர வாய்ப்புண்டு. சிலர் அதனால் இறக்கக் கூட நேரிடுகிறது. சொறி, சிரங்கு உள்ளவர்களுடைய தலையில் இருந்து கூட முடி எடுப்பதுண்டு. அதில் உள்ள கிருமிகள் நம் தலையைத் தாக்கிக் கெடுதல் செய்வதுண்டு. துண்டுத் துண்டு முடிகளைக் கொண்டுதான் ரெடிமேட் கொண்டை தயாரிக்கிருர்கள். அதில் பல்லிகூட போக வாய்ப்



புண்டு. கொண்டையைக் கடையில் எத்தனைக் காலம் வைத்திருப்பார்களோ? அதை நாம் வாங்கி வெளியில் எங்காவது செல்லும்போது தான் உபயோகிப்போம். அந்த நேரத்தில்தான் அதைத் தேடுவோம். மீதி நேரங்களில் அது எங்கேயோ இருக்கும். அதனால் அதனுள் தேன் முதற்கொண்டு எல்லாவிதமான ஜந்துக்களும் குடியிருக்க ஏதுவாகிறது. சிலருக்கு முடி உதிரவும் செய்யும்.

எனவே அவரவருக்கு இருக்கும் முடியைக் கொண்டே முகத்துக்கு ஏற்றவாறு பெரியதாகவோ, சிறியதாகவோ போட்டுக் கொள்ளலாம்.

இனி கொண்டை—'85 என்ற கொண்டை போடும் முறையினை விளக்கத்துடன் காண்போம்.

கொண்டை போடுமுன் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகள்:

தலையில் எண்ணெய்ப்பசை இல்லாமல் இருக்க வேண்டும்.

தலையில் ஈரம் இருக்கக் கூடாது.


தலைமுடி சிக்கில்லாமல் இருக்கவேண்டும்.

½ மீட்டர் கறுப்பு நாடா, **tail comb** எனப்படும் சீப்பு, ஹேர்பின்கள்.

1. முதலில் தலைமுடியை நாடாவினால் உயரமாகவோ, நடுவிலோ, கீழே இறங்கியோ குதிரைவால் கட்டிக் கொள்ள வேண்டும்.







மல்லிகா
&
பார்வதி

படங்கள்: யோகா.

2. தலைமுடியில் ஆறில் ஒருபாகம் எடுத்து அதை அடியில் சீப்புக் கொண்டு நன்றாக 'பேக்—கோம்ப்' செய்து கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு 'பேக்—கோம்ப்' செய்கிறோமோ அந்த அளவு சுருள் நன்றாக வரும்.

அந்தப் பாகத்தின் மேல் பகுதியினைச் சீராக வாரி தலைமுடியின் நுனியின் அடியில் நான்கு விரல்களைக் கொடுத்து மேல் நோக்கிச் சுருட்ட வேண்டும்.

4. சுருட்டிய பகுதியை மேல் பாகத்தில் தலையில் வைத்து விரல்களை எடுக்காமல் ஹேர்பின்னைத் தலையின் முடியோடும் சுருளின் அடிப்பகுதியோடும் சேர்த்துக் குத்த வேண்டும்.

5. பிறகு விரல்களை எடுத்துவிட்டு மறுபுறமும் அதேபோல் பின் பண்ண வேண்டும். இப்பொழுது முதல் சுருள் ரெடி.

6. இதேபோல் மற்ற ஐந்து பாகங்களையும் பக்கவாட்டிலும், நடுவிலும் சுருட்டி வைத்துப் பின் பண்ண வேண்டும்.



7. இறுதியில் சிறிதளவு முடிவிட்டு அதை இரு சமபாகங்களாகப் பிரித்து, அவற்றை நன்றாக முறுக்கிக் கொண்டு இரண்டு பக்கங்களிலும் அவற்றை மேல் நோக்கிக் கொண்டுவந்து வளைத்துப் பின் பண்ண வேண்டும்.

. தேவையானால் இறுதியில் ஒவ்வொரு சுருளுக்கு ஹேர்—ஸ்பிரே தெளித்து மேலிருந்து கீழ்நோக்கிவாரிவிட வேண்டும். அப்பொழுது காற்றில் முடி சிலும்பாமல் இருக்கும்.

வீட்டில் உயர்இனக் கலப்பு இனப் பசுக்கள் இருந்தால், அதன் பால் அதிகரிக்கச் செய்ய, ஒரு நாளைக்கு மூன்று தடவை, அதாவது எட்டு மணி நேரத்திற்கு ஒருமுறை பால் கறக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் மடியில் பால் உற்பத்தி அதிகரிக்க ஏதுவாகிறது.

—மதுபாலன்.

மீராவின் புடவை

ஒரு குடும்பத்தின் தலைவியாகவும் இருந்து கொண்டு, பல கைவேலைகளையும் செய்வது என்றால் சிரமம்தான். அதுவும் சிறிய குழந்தைகள் இருந்துவிட்டால் கேட்க வேண்டாம்.





அதுவே அந்தப் பெண் கூட்டுக் குடும்பத்து மருமகளாகவும், அந்தப் பெண்ணின் திறமைகளைப் போற்றி ஆதரிக்க மற்றவர்கள் தயாராகவும் இருந்துவிட்டால் அவள் வாழ்க்கை சொர்க்கம் தான்.

நான் அப்படிப்பட்ட மருமகளாக இருந்ததால்தான் என்றால் பெயிண்டிங், பதிக், க்லாஸ் வொர்க், பொம்மைகள் செய்தல் எனக் கணக்கில்லாமல் கற்றுக் கொள்ள முடிந்தது. கற்றுக் கொடுக்கவும் செய்கிறேன்.''

என்கிறார் திருமதி செல்லம் கோபால கிருஷ்ணன். சமீபத்தில் இவருடைய கைவினைப் பொருட்களின் கண்காட்சி நடந்தது. இவருடைய கைவண்ணத்தில் மீராவின் புடவை ஜரிகை மின்னுகிறது. காட்டின் பூக்கள் வாசனை வீசுமோ என முகர்ந்து பார்க்கத் தோன்றுகிறது.

— படத்தில் நடிகை ஸ்ரீப்ரியா திருமதி செல்லம் கோபால கிருஷ்ணன் அமைத்திருந்த கண்காட்சியைத் திறந்து வைக்கிறார்.









ஸ்ரீமதி லீலா கணபதி எம்.ஏ.

''நம்ம நாட்டிலே இன்னைக்கு வர சினிமாவை 'அடல்ட்ஸ் ஒன்லி'ன்னு பிரிக்க வேண்டிய அவசியமே இல்லே. அந்த அளவுக்கு நம்ப சினிமாக்கள் 'முன்னேறிடுச்சு'. முன்னெல்லாம் ஆங்கில சினிமாவிலதான் செக்ஸ் அதிகமா இருக்கும். ஆனா இப்பல்லாம் நம்ப தமிழ் சினிமாக்களைப் பார்த்தாலே போதும். நாம அவங்களை விட ரொம்ப முன்னேறிட்டோம்ங்கறது நல்லாத் தெரியும்.

சினிமா ஒரு நல்ல மீடியா. அதை இன்னைக்கு எவ்வளவு கீழ்த்தரமாப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தறாங்க. கேட்டால் நாட்டிலேயும் வீட்டிலயும் நடக்கறதுதானே நாங்க சொல்றோம்னு வேற விளக்கம் தராங்க. இந்தத் தவறுகளை எப்படிப் பண்றதுன்னு சொல்லித் தர்றதே இந்தச் சினிமாக்கள்தான்.

சமீபத்தில் 'ஆனந்தக் கும்மி'ன்னு ஒரு படம் பார்த்தேன். அதுல தனித்தனி ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கும் இரண்டு சிறுசுகள் காதலிக்கறதை வார்டன் பார்த்துக் கண்டிக்கறதா ஒரு சீன். இதோட நின்னுருந்தா நல்லா இருக்கும். ஆனா, இந்த வார்டனே கெட்ட வழிக்குப் போறதாக் காண்பிச்சு அந்தக் காரக்டரை ஸ்பாயில் பண்ணிட்டாங்க. ஒரு லெக்சரர் என்கிற முறையில் இல்லாம ஒரு மதர் என்கிற முறையில் என் பையனை நான் படத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போனா அவன் எனக்கு மரியாதை தந்தாலும் நிச்சயமா அவன் டீச்சருக்கு மரியாதை தர மாட்டான்.

முன்ன வந்த படங்கள் நாட்டுப் பற்று. விடுதலை உணர்வு. சரித்திரச் சம்பவங்கள், மொழி உணர்வு, போன்றவற்றை உணர்த்தக்கூடியதாக இருந்தது. உதாரணமா வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்றவைகள். இவைகளிலிருந்து நம்முடைய சரித்திரப் பாடங்களின் சந்தேகங்களைக் கூட உணர முடிந்தது. ஆனால் இன்று வரும் படங்கள் எல்லாம் செக்ஸ், கொலை, கொள்ளை போன்ற உணர்வுகளைத்தானே தூண்டுகின்றன? இப்படிப்பட்ட விரசமான படங்களை எப்படிக் குடும்பத்தோடு பார்க்க முடியும்?''

ஸ்ரீமதி சாமதிலீவெங்கட சுப்ரமணியம்

''நிச்சயமா இப்ப வர்ற படங்களை குடும்பத்தோட பார்க்க முடியாதுன்னுதான் நான் சொல்லுவேன். மனிதர்களுடைய பலவீனங்களைப் பயன்படுத்திக்கிட்டுப் பணம் சம்பாதிக்கறாங்க. காதல்ங்கிற பவித்ரமான வார்த்தையை அசிங்கப் படுத்தறாங்க. முன்னெல்லாம் சினிமாவில காதல்ங்கிறது ஒரு பாகம்தான். ஆனா இப்ப அதுதான் சப்ஜெக்டா இருக்கு. இதுல வருத்தம் என்னன்னா அருமையான படங்களைக் கொடுத்த பெரிய நிறுவனங்களே காசுக்காக இந்த மாதிரிப் படங்களை இப்ப எடுக்கறாங்க.

முன்ன வந்த படங்கள்ள குறிப்பா எம். ஜி. ஆர் படங்கள்ல ஹீரோ தாய்க்காகவும், ஊருக்காகவும் பாடுபடுகிறதாக் காட்டுவாங்க. சிவாஜியோட படங்கள்ல பாசம், நட்பு, நேர்மை, போன்ற அம்சங்களை அதிகமாகக் காட்டுவாங்க. நம்ப வீட்ல அந்தச் சம்பவம் நடக்கற மாதிரி கண்ல நீர் வரும். ஆனால், இப்ப? 'ஷோலே' படம் வந்த ஒரு வாரத்திலே ரயில் கொள்ளை அதிகமா நடந்தது நமக்குத் தெரியும். அந்த மாதிரிதான் 'நூறாவது நாள்' படம் வந்ததுக்கப்புறம் விருகம்பாக்கத்துல பத்துக் கொலையை ஒரே ஆள் செஞ்சான்.

ஸ்ரீமதி ராஜாம்பாள்

''இன்னைக்கு வர்ற தமிழ் சினிமாக்களைப் பத்தி நினைச்சால் மனசுக்குக் கஷ்டமா இருக்கு. பெண்களை மையமா வச்சு ரொம்ப அசிங்கப்படுத்தறாங்க. பழைய படங்கள் பெண்களோட பெருமையைச் சொல்லி, குடும்பம் எப்படி ஒற்றுமையாக நடக்கணும்னு வலியுறுத்தினது. குறிப்பாக, பாகப்பிரிவினைங்கற படம் பாகத்தைப் பிரிச்சாக் குடும்பம் எப்படிக் கஷ்டப்படும்னு சொன்னது. பாசமலர், அண்ணன் — தங்கை புனித உறவை வெளிப்படுத்தியது. ஆனா இப்ப வர்ற படங்கள்ல அந்த மாதிரி இல்லாம இரட்டை அர்த்த வசனங்கள் நகைச்சுவைங்கற பேர்ல விரசமா இருக்கு. இந்த மாதிரி வசனங்களை நம்ப குடும்பத்துல உள்ள குழந்தைகளோ, பெரியவங்களோ சேர்ந்துப் பார்த்து ரசிக்க முடியாது. என்கிட்டக் கேட்டா, இந்தச் சமுதாயத்தைக் கெடுக்கறதுக்கு சினிமாவைப் போலச் சிறந்த சாதனம் எதுவுமே இல்லே என்றுதான் சொல்லுவேன்.''

குமாரி பத்மினி (கல்லூரி மாணவி.)

''இன்று வரும் படங்களைக் குடும்பத்தோடு பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லை. நாகரீகம் வளரும் போது நாமும் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டித்தானே இருக்கிறது? நாம் எவ்வளவோ புதுமைகளை ஏற்றுக் கொண்டுள்ளோம். அப்படி இருக்கும்போது சினிமாவில் ஏற்படும் மாற்றத்தை மட்டும் ஏன் நம்மால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. நாட்டிலும், வீட்டிலும் நடப்பதைத்தான் சினிமாவில் காண்பிக்கிறார்கள்! இன்று வரும் சினிமாக்களில் 'செக்ஸ்' அதிகமாக இடம் பெறுகிறது எனக் குறைபட்டுக் கொள்பவர்களால் அந்தப் படத்தைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையே! இன்று கோவிலுக்குச் செல்வதை விடக் கூட்டம் சினிமாக் கொட்டகைக்குத் தானே அதிகமாகச் செல்கிறது?

வயது ஏது என்னும் பகுத்தறியும் பக்குவம் வந்துவிட்டால், அது திரைப்படத்தில் வந்தாலும் சரி; எதில் வந்தாலும் சரி அவைகளைத் தாங்களாகவே அவர்கள் ஒதுக்கிவிடுவார்கள். 'ஹரிதாஸ்' படத்தில் கதாநாயகன் விலைமாது வீட்டுக்குப் போவது போல் காட்டவில்லையா? 'பாலும் பழமும்' படத்தில் எம். ஆர். ராதா கருணாநிதியிடம் தாது புஷ்டி லேகியம் சாப்பிடச் சொல்வதைப் போல் இடம் பெறவில்லையா?

ஒரு படத்தில் உள்ள தீய விஷயங்களில் நாம் பாதிக்கப்படுகிறோம் என்பது, உண்மையானால், அதில் வரும் நல்ல விஷயங்களில் நாம் திருந்தியிருக்க வேண்டுமே. எதையுமே நீங்கள் தவறு என்று ஏன் நினைக்கிறீர்கள்? அப்படியே அது தவறு என்றால் கூட அதைத் தள்ளிவிடக் கூடிய பக்குவத்தைப் பெற நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? அறிவியல் முன்னேற்றம், அதனால் முப்பரிமாணத் திரைப்படம் — இப்படி எவ்வளவு தொழில் நுட்ப வளர்ச்சியடைந்து ஆங்கிலப் படங்களுக்கு இணையாக நாம் போட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறோம். நமது பெற்றோர்களைப் போல் இருக்கவில்லை. நம்மைப் போல் நமது பிள்ளைகளால் இருக்க முடியவில்லை. ஏனென்றால் இவைகளெல்லாம் காலத்தினால் ஏற்படக் கூடிய மாறுதல்கள்.

இன்றைய திரைப் படங்களைக் குடும்பத்தோடு பார்க்க முடிகிறதா?

ஸ்ரீமதி நீலாபாய்.

''ஏதோ விடுமுறையில் பொழுதுபோக்க குடும்பத்தோடு சினிமாவுக்குப் போனால், அதில் வரும் வசனங்களும், காட்சிகளும் செயற்கையாக இருக்கிறது. பாடல்களும், இசைகளும் மனத்தைப் பாதிக்கிறது. 'நேத்து ராத்திரி யம்மா...' பாட்டை என் தம்பியோடு பார்க்கச் சகிக்கவில்லை.

என்னதான் நாம் கட்டுப்பாடாக இருந்தாலும், இந்த மாதிரியான தூண்டுதல்களால் நாம் எப்போதாவது பாதிக்கப்பட்டு விடுகிறோம். முன்பெல்லாம் சினிமா பார்த்தால் கதை, காட்சி, நடிப்புப் பற்றிப் பேசுவோம். ஆனால் இப்போது படம் பார்த்துவிட்டு வந்தால் குடும்பத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவே கஷ்டமாக உள்ளது. அதனால், தற்கால சினிமாக்களைக் குடும்பத்தோடு பார்க்க முடியாது.''

- தொகுப்பு: பிருந்தா



வயது ஒரு தடையா?

உஷா சுப்ரமணியம்

"சமூகச் சூழ்நிலையை ஒத்துப் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பை அதிகரிக்க வேண்டும்...!"

பள்ளியிலும், கல்லூரியிலும், படிப்பில் எப்போதும் அவள்தான் முதல். விளையாட்டுக்களில் அதிகத் தேர்ச்சி... தெளிவான பொது அறிவு... ஐ.ஏ.எஸ். படிக்க வேண்டும் அல்லது நிர்வாகத் துறையில் சிறக்க வேண்டும் என்று அவள் திட்டமிட்டிருக்கிறாள். அதற்கான வகையில் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறாள்.

அவள் பெற்றோரின் திட்டமோ வேறுவிதமாக இருந்தது. பி. ஏ. பரீட்சை எழுதுவதற்குள் பெண் பார்க்க மனிதர்களை அழைத்து வருகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் திருமணத்திற்கு மட்டுமே பாஸ்போர்ட் என்னும் திடமான நம்பிக்கை. மேலே படிக்க வைத்தால், அதற்கும் மேல் படித்த மாப்பிள்ளைக் கிடைக்க மாட்டார் எனப் பயம்.

புத்திசாலியான இவள், தன் திருமணத்தையும் மிக்க சந்தோஷமான பொறுப்பாக ஏற்றுத் திறமையுடன் செயல்படுகிறாள். வயதான மாமியார், மாமனார், வளரும் நாத்திகள், தனக்கெனப் பிறந்த இரு குழந்தைகள் நடுவே இவள் நேரம் கைகொட்டாமலே ஓடி விடுகிறது. அப்படியும் சுயமுயற்சியால் தபால் மூலம் எம். ஏ. முடித்துவிடுகிறாள். அரிதாகக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் நிறையப் புதுவிஷயங்கள் கற்றுத் தன்னையும் மேம்படுத்திக் கொள்கிறாள். வாழ்வில் அனுபவம் அளித்த முதிர்ச்சியும், சுய அறிவும், விடாமுயற்சியும், இனிமையான பண்புகளும் இவள் ஒரு அற்புதமான பெண்ணாக உருவாகியிருக்கிறாள்.

இப்போது சுதாவுக்கு வயது முப்பத்தி ஐந்து. வாழ்வில் அவள் சுமந்த பொறுப்புகளின் பளு நிறையவே குறைந்துள்ளது. நாத்திகளைப் படிக்க வைத்துத் திருமணம் செய்தாகிவிட்டது. மாமனார், மாமியார், காலம் முடிந்துவிட்டது. அவள் பெற்ற செல்வங்களே மேல்நிலைப் பள்ளியில் உள்ளனர். இப்போது அவளுக்கென அவளால் நேரம் ஒதுக்க முடிகிறது. அதே சமயம், தன் குழந்தைகளின் எதிர்காலத்துக்கெனத் 'திட்டமிடப் பணத் தேவையும் அதிகரிக்கிறது. பழைய ஆசை தலைதூக்கி, இப்போது கணவன் அளித்த உற்சாகத்துடன், பல அரசாங்க தனியார்த் துறைக் கம்பெனிகளுக்கும் மனு எழுதுகிறாள். அவசரமாக நிர்வாகத் துறைப் பயிற்சியிலும் சேருகிறாள்.

அரசாங்கம், வங்கி, இன்ஷ்யூரன்ஸ் போன்ற எந்தத் துறைக்கும் அவள் பரீட்சை கூட எழுத முடியாதபடி அவள் வயது தடையாய் நிற்கிறது என்று உணரும் போது அவள் திடுக்கிடுகிறாள். தனியார்த் துறையிலும் தாங்கள் இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டப் பெண்களை வேலைக்கு எடுப்பதில்லை என்ற பதிலே வருகிறது. கல்லூரி வேலை தேடினாலோ தபாலில் படித்த எம். ஏ.க்கு மதிப்பில்லை என்கிறார்கள். எம். பில். படிக்கலாம் என்றால் அட்மிஷனுக்கே வயது அதிகமாம். பள்ளி வேலைக்கு அவள் சன்னக்குரல் உதவாது. கடனுதவி பெற்று ஏதாவது தொழில் துவங்கலாம் என்றால் அங்கும் "முன் அனுபவம் இல்லையே..." என்று பதில் வருகிறது. இந்தக் கடனுதவி தரும் நிறுவனங்கள் சில கூட வயது வரம்பை அனுஷ்டிக்கின்றன. ஏறக்குறைய இரு ஆண்டுகள் ஓயாமல் முயற்சி செய்தும், நிர்வாகப்

பட்டம் பெற்றும், விற்பனைத் துறையில் டிப்ளமா பெற்ற பின்பும், சுதாவின் வயது அவளுக்கு வேலை வாய்ப்பை இல்லாமலே செய்துவிட்டது...

இது ஒரு சுதாவின் கதையல்ல... ஆயிரக் கணக்கான புத்திசாலி இந்தியப் பெண்களின் கதை. முப்பத்தைந்து வயதிலேயே முத்திரை குத்தி, சுய இரக்கம் என்னும் மீளாக் குழியில் தள்ளப்பட்டுவிட்ட பெண்களின் கதை. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்திராகாந்தி சமூகச் சூழ்நிலையை ஒத்துப் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் வயது வரம்பை அதிகரிக்க வேண்டும் எனக் கூறினார். ஆனால் இதுவரை அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை. பெண் அரசியல் வாதிகளும், நிறுவனங்களும் கூட ஆர்வம் காட்டவில்லை.

மேல்நாடுகளில் நடுத்தர வயதைக் கடந்த ஏர்—ஹோஸ்டஸ்களைக் காணலாம். பெரும்பாலும் ஹோட்டல் முன் அலுவலகத்திலும் இளம் பெண்களுடன், நடுத்தர வயது, முதிர்ந்த பெண்களும் இருப்பார்கள். அங்கே வயது வரம்பின்றிக் கல்லூரியில் சேர்ந்து படிக்கவும், வேலை பெறவும் வாய்ப்புண்டு. நாற்பது வயதுக்குமேல், முதல் பேரன் பிறந்த பிறகு, குதிரையேற்றப் பயிற்சி தொடங்கி, இன்று பள்ளியில் குதிரையேற்றப் பயிற்சியாளராகப் பணிபுரியும் ஒரு பெண்ணையும் நான் சந்தித்தேன். ஆனால், பெண்மைக்கு மதிப்பளிப்பதாகக் கூறப்படும் இந்தியாவிலோ, வேலையைப் பொறுத்தவரை அவள் இளமைக்கும், கவர்ச்சிக்கும் முக்கியம் அளிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்குமுன் ஐ. ஏ. எஸ். தேர்வில் மிகச் சிறப்பாகத் தேறி நிறைய பிரபலம் அடைந்திருந்த ஒரு பெண்மணியைச் சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது. ஐ. ஏ. எஸ். பயிற்சி பெற்று மிகக் குறுகியகாலமே வேலையில் இருந்த அவர் இப்போது திருமணம் செய்து கொண்டபின் வேலையை விட்டுவிட்டார். தான் வேலைக்குப் போவதில் என்றுமே தீவிரமாக இருந்ததில்லை என்றும் கூறினார். இவருக்குப் பயிற்சி அளிப்பதில் அரசு எவ்வளவு பணமும், நேரமும் வீணடித்திருக்க வேண்டும்? நடுத்தர வயதில் ஆர்வம் காரணமாக வேலையில் சேரும் பெண்களிடம் வேலை, பயிற்சி பற்றி இத்தகைய மேம்போக்கான எண்ணம் இருப்பதில்லை. தங்கள் திறமையை நிலைநாட்ட வேண்டிய ஒரு தீவிரப் பொறுப்புணர்ச்சியை அவர்களிடம் காணலாம். அத்துடன் தங்களைவிட வயதில் குறைந்தவர்களுடன் போட்டியிட வேண்டியதன் காரணமாக அவர்கள் அதிகமும் உழைப்பார்கள்.

முப்பத்தைந்து வயதுப் பெண்மணியின் உடல் தகுதி இருபத்தைந்து வயதுப் பெண்களைவிடக் குறைவாகவே இருக்கும் என்ற கணிப்பும் தவறானது. மாறாக, குடும்ப நலனைக் காக்கும் பெண் இந்த வயதுக்குள் தன் பேற்றுக் காலத்தை முடித்திருப்பாள். அவளுக்குப் பேறு, குழந்தைப்பிறப்புக்கான விடுப்புக்கள் தேவைப்படாது. குழந்தைகள் வளர்ந்துவிட்டதன் காரணமாக அடிக்கடி அவர்கள் உடல்நலம் பற்றிய கவலையும் இருக்காது. அதனால் வேலையில் கவனமும் அதிகமாகவே இருக்கும்.

கவர்ச்சி என்பதும் பெண்களின் வயதைப் பொறுத்த விஷயமில்லை என்று இந்தியர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தன் தோற்றத்தை அழகாகப் பேணும் பெண் எந்த வயதிலும் அழகாகத்தான் இருப்பாள். உலகத்தின் மிகச் சிறந்த அழகிகளாகக் கருதப்படும் சோபியா லாரனும், எலிஸபெத் டெய்லரும் ஐம்பதைக் கடந்தவர்கள் தான். மற்றும் அழகு என்பது வெளித் தோற்றத்தால் மட்டுமே வருவதில்லை. அது முழு ஆளுமையால் வருவது புத்திக் கூர்மை, பேசும் விதம், இவை தோலின் நிறத்தையும், மூக்கின் அளவையும், உதட்டின் சுழிவையும் விட அழகு தருவன.

குடும்பத் தலைவியாக மட்டுமே சில ஆண்டுகள் இருந்த பெண் அலுவலக வேலைக்குத் தகுதியற்றவள் என்னும் கருத்தும் முரணானது. அலுவலக நிர்வாகத்தை விடக் குடும்ப நிர்வாகம் எந்த விதத்திலும் குறைவானதல்ல. குடும்பப் பெண்கள் சோம்பல் உள்ளவர்களாக இருக்கவே முடியாது. பல சுமைகளைச் சிறு வயதில் தூக்கியதன் காரணமாக நடுத்தர வயதுப் பெண்களிடம் பொறுமையும், பொறுப்புணர்ச்சியும் இருக்கும். குடும்பத் தலைவிகள் அலுவலக வேலைக்கு ஏற்றவர்களா என்பது அவரவர்கள் மனப்போக்கை மட்டுமே பொறுத்தது. பல ஆண்டுகள் குடும்பத்துடன் மட்டுமே இருந்த பெண்ணாலும் அவள் முயன்றால் அலுவலக வேலைகளை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும்.

இந்திய சமுதாய அமைப்பில் பெண்கள் நிலை தாழ்த்தப்பட்டவர்களிலும் மிகவும் கீழ்த்தட்டிலேயே உள்ளது. அவளது சுய விருப்புக்களுக்கும், சிந்தனைக்கும் அதில் இடமே இல்லை. எனவே தாழ்த்தப்பட்டவர்

குளம், குட்டைகள் இருந்தால் அங்கு நிச்சயம் கொசுக்கள் குடி இருக்கும். கொசுக்கள் அதிகமாக இருப்பதால், மலேரியாக் காய்ச்சல் ஏற்பட வழியுண்டு. இதனை ஒழிக்க, உங்களூர் மாதர் சங்கம் மூலம் "கம்பூசியா" என்னும் இன மீனை வாங்கி, குளம், குட்டைகளில் விட்டால், அவைகள் கொசுக்களைத் தின்றுவிடும்.

—மதுபாலன்.

களுக்குத் தரும் பல சலுகைகளையும் பெண்களுக்கு அளிப்பது மிக முக்கியமாகும்.

திடமான உடல்நிலையும், வேலைக்கான தகுதியும், அறிவும் உடைய பெண் மற்ற விஷயங்களில் சமமாக இருந்தால், வயது ஏன் அவள் வேலை வாய்ப்புக்குக் குறுக்கே நிற்க வேண்டும்? பயிற்சி அளிக்கும் அலுவலகங்கள் குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் 'பாண்டு' பெற்று எந்த வயதிலும் இவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ளலாமே.. எத்தனைப் பெண்களின் படிப்பும், அறிவும், தகுதியும், நாட்டுக்கும், அவர்களுக்கும் நலம் அளிக்காத வகையில் வீணாகிவிடுகிறது. உபயோகப்படுத்தப்படாமலே எரிந்து வீணாவது இவர்களின் வேலைத்திறன்.

நடுத்தர வயதுப் பெண்களின் வேலைத் திறனை உபயோகப்படுத்த அரசாங்கம் திட்டம் தீட்டவேண்டும். முழுநேர வேலைக்குச் செல்ல முடியாத பெண்களைப் பகுதிநேர வேலைக்குப் பயன்படுத்த வேண்டும். தனியார்த் துறைகளில் விற்பனை, விளம்பரம் பகுதிகளிலும்; வங்கி மற்றும் அரசாங்க வேலைகளுக்கும் இந்தப் பெண்கள் மிகவும் திறமையுடன் செயல்பட முடியும்.

சமுதாயத்தின் மிக முக்கியமான அங்கமான பெண்களை வயதைக் காரணம் காட்டி, வேலை வாய்ப்பிலிருந்து ஒதுக்குவது குடியரசு நாட்டில் நடக்கவே கூடாது. அரசும், பெண்கள் நலத்துறையும், சமூக அமைப்புக்களும் செயல்படுமா?

ஒரு வரம்!



இரு தாரம் கட்டிய முருகா
ஒரு வரம் தாரும் ஐயா!
பெண் வேண்டாம் பொன் தாரும்
என்று கூத்தாடும் ஆண் கையால்
தொட்ட பெண் எல்லாம் பொன்,
என்று மாறி விட வேண்டும்!
அணைக்க, அரட்ட, கசிக்க,
பிள்ளைப் பெற இந்தப் பொன் பெண்
வருவாளா என்று பார்ப்போமே!

—அகிலா கிருஷ்ணன்.



• வாழ்க்கை பெரிதா, பணம் பெரிதா என்று கேட்டால் வாழ்க்கைதான் பெரிது என்று சொல்வேன். திருப்தியும், மகிழ்ச்சியுமே நிரந்தரமான செல்வம். அது இருந்து விட்டால் "ஏழையும் பணக்காரன்தான். அதிருப்தியான பணக்காரனின் வாழ்வு என்ன வாழ்வு?

• இப்போதெல்லாம் பெண் விடுதலை பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். ஆனால் நம்முடைய சமுதாயத்தைப் பாருங்கள். 'வெறும் பழக்க வழக்கங்களே நம்முடைய கலாசாரமாக மாறிவிட்டதோ எனப் பயமாக இருக்கிறது. 'இது எங்கள் பரம்பரைப் பழக்கம், எங்க ஊர் வழக்கம்' என்கிறார்கள். இந்த நிலைமை மாறி அடிப்படையான பண்புகள் முக்கியத்துவம் பெற்றால்தான் பெண் விடுதலை சாத்தியம்.

• எங்கள் கல்லூரியில் சமூக சேவை ரொம்பப் பிரபலம். ஆனால் வெறுமனே சேரியில் சென்று குழந்தைகளைக் குளிப்பாட்டுவதை நான் சமூக சேவையாக நினைக்கவில்லை. முடங்கிக் கிடக்கும் மனித சக்தியைத் தூண்டி, அவர்களை வேலை செய்ய வைத்து அந்த உழைப்பில் அவர்கள் மகிழ்ச்சி அடைவதையே சேவை என நினைக்கிறேன்.

—ஸ்டெல்லாமேரி பெண்கள் கல்லூரி முதல்வர் சகோதரி ஹெலன் ஆன் சென்ட்.



பிரகதாம்பாள்

உலகம் உருண்டைதான்

ஊரிலிருந்து என் மச்சினன் பத்து நாட்கள் டூரில் ஆபீஸ் வேலையாக வரப் போவதாய் லெட்டர் வந்தது. என் மனைவி சரோவிற்குப் பூமியில் காலே பாவவில்லை. என் புத்திரச்செல்வங்களோ ஆகாயத்தில் பறந்தார்கள். எனக்கும் சந்தோஷம் தான். தம்பியுடன் குலாவுவதில் என்னுடன் சண்டை போட சரோவுக்கு நேரம் கிடைக்காது என்பது முதல் காரணம். மாப்பிள்ளைக்குப் பிடிக்குமே என்று டப்பா டப்பாவாக விதவிதமான பட்சணங்களை என் மாமியார் அனுப்புவது இரண்டாவது காரணம்.

லெட்டர்படி குறித்த நாளில் என் மச்சினன் வந்து சேர்ந்தான். ஆபீஸ் வேலை, ஆபீஸ்வேலை என்று ஆபீஸே தான் தலையில் தாங்குவது போல் அலட்டிக் கொண்டு வெளியில் அலையோ அலை என்று அலைந்தான். கொஞ்ச நேரத்தில் மருமான், மருமான் சகிதம் ஊர் சுற்றினான். அவனுடைய மனைவி சக்குவின் உறவினர் நிறைய பேர் டில்லியில் இருந்தனர்.

போன தடவை அவன் சக்குவுடன் வந்தபோது, ஒரு உறவினர் விடாமல் விஸிட் செய்ய நேர்ந்ததில் அவன் பர்ஸ் கணிசமாக இளைத்து விட்டது. அந்தக் கோபத்தை மனத்தில் வைத்துக்கொண்டு, என் மனைவியிடம், 'சரோ, இந்தத் தடவை சக்கு உறவுக்காரா யார் வீட்டுக்கும் போகப் போவதில்லை. வேணுங்கறவா வந்து பார்த்து விட்டுப் போகட்டும்' என்று, மனைவி அருகில் இல்லாத தைரியத்தில் வீர முழக்கம் செய்தான். வீட்டில் உட்கார்ந்தபடி போன் உள்ள வீடுகளுக்கு டெலிபோன் செய்து க்ஷேம லாபம் விசாரித்தான். ஆபீஸ் வேலை ரொம்ப ஜாஸ்தியா, டைமே இல்லை என்று பிகு செய்து கொண்டான்.

சக்குவின் நெருங்கிய உறவினர் சிலர் மரியாதைக்காக அவனை வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

அத்திம்பேரே, 'இவர்தான் சக்குவின் ஆடிட்டர். சித்தப்பாப் பிள்ளை. எங்க கல்யாணத்தின் போது ஸ்டேட்ஸில் இருந்தார். அதனாலே கல்யாணத்துக்கு வரலே, நீங்க பாத்திருக்க மாட்டேள்' என்று அவரை அறிமுகம் செய்து வைத்தான்.

அவருடன் கூட அவருடைய ஷட்டகரும் வந்திருந்தார். அவர் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டார். ''இவரோட ஷட்டகர்ளார் நான். எம்பேரு ராஜாராமன். பாலம் ஏர்போர்ட்லே வேலை. பாலம் வில்லேஜிலே ஜாகை.''

பேச்சைக் காதில் வாங்கிக் கொண்டே வந்த சரோ, ''பாலம் வில்லேஜா? அங்கே எந்த இடத்தில் இருக்கேள்'' எனதனக்கு அந்த ஏரியா முழுக்க அத்துப்படி என்பது போல விசாரித்தான். அவர் ஏதோ ஒரு ப்ளாக் நம்பர் சொல்லவும், ''45 வது ப்ளாக்கிலே கோபாலன் என்கிறவர் கானரா பேங்க்லே மானேஜரா இருக்கிறாரே தெரியுமா?'' என வினவ, அவரும் உற்சாகமாக, ''ஓ... கோபாலனு கடலூரிலிருந்து மாற்றி வந்திருக்காரே! அவர்தானே, நன்னாத் தெரியுமே'' என்று சொல்ல சரோவுக்கு ஒரே குஷி.

''அவர் எங்க மாமியோட ஒன்றுவிட்ட தங்கையின் மச்சினன். அவாத்து மாமி எங்களுடன் லலிதா ஸஹஸ்ரநாமம் சேந்து கத்துண்டா. அவா பாலம் போனபின் ஒருநாள் தைவெள்ளிக்கிழமை சேர்ந்துபாட (அரட்டை அடிக்க) எங்களைக் கார் வைச்சு அழைச்சுண்டு போனா. அப்போ பாலம் போயிருக்கேன். ரொம்பச் செழிப்பான இடமாச்சே. கறந்தபால் ஃபேர்ஸ்ட் க்ளாசாக் கிடைக்குமே. நாங்க திரும்பி வரச்சே தோட்டத்துக் கறிகாய், வெல்ல பேலி (வெல்லக்கட்டி) எல்லாம் வாங்கிண்டு வந்தோம். கறிகாய் என்ன மலிவு. என்ன ருசி'' என்று தனக்குத் தெரிந்தவற்றை பிரகடனப்படுத்திக் கொண்டாள்.

இந்த ரகமான சம்பாஷணையில், ஓ.

அவாளா தெரியுமே என்று சொல்லிவிட்டால்தான் என்ன சந்தோஷம் இந்த மனுஷ ஜாதிக்கு. லட்ச ரூபாய் லாட்டரியில் விழுந்த மாதிரி - சரோவாவது தேவலே. என்னுடைய அத்தை ஒருத்தி இருக்கிறாள். இந்த மாதிரி சமயங்களில் அவர்கள் 'தெரியலேயே' என்று சொல்லிவிட்டால் விடமாட்டாள். ஏதோ மிஸ்ஸிங் பெர்ஸன்ஸ்ஸுக்கு அடையாளம் சொல்லுகிற மாதிரி, 'சேப்பா, குட்டையா இருப்பார். ரெண்டே பிள்ளைகள். ஆத்துக்காரி கூட ரேடியோவிலே பாடுவா. ஆத்திலே நாய் கூட வளர்த்தா' என்று ஆரம்பித்து விடுவாள். ஆசாமிக்கு அவாளைத் தெரியலேன்னு கூட, தெரியுமே, தெரியுமே என்று அலறணும். நமக்கும் போதும்டா சாமி என்று ஆகிவிடும்.

வந்திருந்தவர்கள் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேச்சோடு பேச்சாக, ராஜாராமன், ''என் பொண்ணுக்கு கல்யாணத்துக்குப் பார்த்துண்டிருக்கேன் ஸார். ஏதாவது உறவுக்காரப் பிள்ளைகள் இருந்தா சொல்லுங்கோ. இந்தாங்கோ ஜாதகம் ஒரு காப்பி வைச்சுக்கோங்கோ. விவரம் எல்லாம் அதில எழுதியிருக்கேன். நாங்க இருக்கற இடத்திலே ஒண்ணுமே தெரிய வழி இல்லே' என்றார்.

''சரோ, உன் ஃப்ரண்டு ஒரு மாமி ஹாபி மாதிரி ஜாதகப் பரிவர்த்தனை செய்வதாகச் சொல்லியே, அவரிடம் மாமாவை **அழைச்சண்டு** போனால் என்ன?'' **என்றேன்.**

''பேஷாச் செய்யலாமே. அந்த மாமி வாரத்திலே ஒருநாள் அதுக்காக ஒதுக்கியிருக்கா. அன்னிக்கு எங்கேயும் போகமாட்டா. ஜாதக லிஸ்ட் தருவா. மாமிக்கு ஜோசியமும் தெரியும். பொருத்தம் கூடப் பார்த்துச் சொல்வா. விசாரிச்சண்டு ஒரு நாள் போய் வாங்கிண்டு வரலாமே'' என்றாள் சரோ.

''வீக் டேஸ் என்றால் என்னால் வர முடியாது. மாமியை அனுப்பறேன்'' என்றார் அவர்.

இதற்குள் சக்குவின் தங்கை லதா வந்தாள். அவளுடன் சிறிது நேரம் பேசி முடிப்பதற்குள் முதலில் வந்தவர்கள் புறப்பட்டார்கள். புறப்படும் போது முத்தாய்ப்பாக, ராஜாராமன், ''ஜாதகத்தைப் பற்றி ஞாபகமாக உங்க ஃப்ரண்டிடம் விசாரித்துப் போன் செய்யுங்கள்'' என்று சொல்லியபடி விடைபெற்றுக் கொண்டார்.

அவர்கள் போன பிறகு லதா சரோவிடம், ''என்ன மாமி ஜாதகம் என்று பேசிக் கொண்டீர்களே'' என்று விசாரித்தாள். சரோ விவரம் சொன்னவுடன், ''நாங்க கூட என் சின்ன நாத்தனாருக்கு ரொம்ப மும்முரமா வரன் தேடிண்டிருக்கோம். என்னிக்கு நீங்க போறேளோ அன்னிக்கு எனக்கும் போன் பண்ணினா நானும் கூட வரேனே'' என்றாள்.

வியாழக்கிழமை அவர்கள் எல்லாம் சேர்ந்து ஜாதக வேட்டைக்கு போகப்போவதாய் அறிந்து கொண்டேன்.

வியாழக்கிழமை நான் ஆபீஸிலிருந்து வந்தவுடன், டிபன் சாப்பிட்டுக்கொண்டே, என் பெண்ணிடம், ''என்ன இன்னிக்கு உங்கம்மா ரொம்ப பிஸியாக இருந்திருப்பாளே'' என்று சீண்டினேன்.

''ஆமாம்ப்பா. அம்மாவுக்கு இன்னிக்கு நிறைய விஸிட்டர்ஸ்'' என்றாள்.

''லதா, அவளோட பெரிய நாத்தனார். மிஸஸ் ராஜாராமன் எல்லாரும் வந்திருந்தா எல்லாருமாப் போய் ஜாதகம் குறிச்சிண்டு வந்தோம். போஸ்ட் ஆபீஸ் மாமாவேறு நிறைய ஜாதகங்கள் கொடுத்தார். லதா, நாத்தனார் ஆத்துக்காரர் கூட உங்க ஆபீஸ் தானுமே. எம். எஸ். ஃப்ளாட்ஸ்ல நம்ப ராமு அம்மாஞ்சி பிள்ளை ஆத்துக்கு பக்கத்திலே இருக்காளாம். அம்மாஞ்சி மன்னி அவாத்துக்காரருக்கு உறவாம்.'' விடமாட்டாளே புது மனுஷாளை.

சரோ பேச்சின் தொடர்ச்சி:

''ஆகக் கூடி நிறைய ஜாதகம் கிடைச்சிருக்கு. பாக்கலாம். யார் யாருக்கு எங்க ப்ராப்தமோ, எங்க முடி போட்டிருக்கோ'' என்று பாட்டி ஸ்டைலில் மூச்சு விடாமல் பேசிக் கொண்டு போனாள்.

''நீயும் எல்லாம் கத்துக்கோ. ஆச்சு இன்னும் இரண்டு வருஷம் போனால் நாமும் ஜாதகக் கட்டைத் தூக்க வேண்டியது தானே'' என்றேன்.

இரண்டு மாதம் ஆகியிருக்கும். ராஜாராமன் போன் செய்தார். கொண்டு போன ஜாதகங்கள் ஒன்றும் சரிப்படவில்லையாம். கோத்திரம், படிப்பு, வயது வித்தியாசம் என்று தள்ளுபடி போகத் தேறிய ஜாதகக்காரர்களுக்குப் பதில் போட்டதில் சிலதிற்கு பதில் வரவில்லை. கல்யாணம் ஆகிவிட்டதாய் ஓரிரு பதில்கள். மறுபடி சரோவின் ஃப்ரண்டு மாமியிடம் புது லிஸ்ட் வந்துவிட்டதா என்று விசாரித்துச் சொல்லும்படி கேட்டுக் கொண்டார். சரோவின் ஃப்ரண்டு தன் பெண்ணின் கல்யாணத்துக்கு மெட்ராஸ் புறப்பட்டுச் சென்றுவிட்டார். வந்தபின் மேற்கொண்டு விவரம் தெரிவிப்பதாய்ச் சொன்னேன்.

என்னுடைய கஸின் சங்கரை டில்லிக்கு மாற்றி இருந்தார்கள். வீடு பார்த்துஃபேமிலியை அழைத்து வரும்வரை எங்களுடன் தங்கியிருந்தான். நாங்கள் இருவரும் சிறு வயதில் ஒன்றாக வளர்ந்தவர்கள். இரவு பன்னிரண்டு மணிவரை பழைய விஷயங்களை அசைபோட்டு மகிழ்வோம். இரவு சாப்பாட்டுக்குப் பின், பேசிக் கொண்டே மைல் கணக்காக வாக்கிங் போய்த் திரும்புவோம். ஒருநாள் அவன் என்னிடம் ''நம்ப ராமு அம்மாஞ்சி டில்லி வந்திருக்கிறாராம். முரளி வீட்டிலே இருக்காராம். முரளி வீடு பக்கத்திலேதானே இருக்கு. போய்ப்பார்த்துட்டு வரணும்'' என்றான்.

''சரி, ஒருநாள் போய் அட்டென்டென்ஸ் கொடுத்துட்டு வந்துடலாம்'' என்றேன்.

ராமு அம்மாஞ்சி என் அப்பா, சங்கர் அப்பா இருவருக்குமே அம்மாஞ்சி. போலீஸில் இருந்து ரிடையர் ஆனபடியால் அதிகாரத் தோரணையில் பேசுவார். நல்ல பெர்சனாலிடி வேறு. நாலாவிதத்திலும் கெட்டிக்காரர். அம்மாஞ்சியைக் கலந்து ஆலோசிக்காமல், இன்னும் எங்கள் குடும்பத்தில் கல்



மிக வேகமாக விற்பனையாகி வருகிறது

‘சுபஸ்ரீ’

வழங்கும் வீட்டு மனைகள் !

சென்னை பெருநகரை ஒட்டிய

திருவள்ளூர் நகரின் மையப் பகுதியில்

அமைந்துள்ளது எமது

வீரராகவ நகர்

அரசாங்க அங்கீகார எண் **CRDTCPM**: 84.249 **LP** 207 சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து அடிக்கடி மின்சார ரயில் வசதி உண்டு. சீசன் டிக்கட் மாதம் ரூ. 38/ தான்.

✲ **அனைத்து நகர்ப்புற வசதிகளும் உண்டு.**

நல்ல குடிதண்ணீர், மின்சார ரயில் வசதி, பஸ் வசதி' கான்வென்ட், மார்க்கட், உயர்நிலைப்பள்ளி, திரையரங்கம் இவையனைத்தும் உண்டு.

ஒரு மனை (1800 சதுர அடி)
விலை ரூ. 12420 மட்டுமே.

உடனே வீடுகட்டிக் குடியேற சிறந்த இடம்.

வீடு கட்டவும் ஏற்பாடு செய்கிறோம்.

பம்பாய் நகரில் எமது மனைகளை ரிசர்வ் செய்ய அணுகவேண்டிய முகவரி:—

திரு. கே. சுப்பிரமணியன், 13, லக்ஷ்மி.
17வது தெரு, செம்பூர், பம்பாய் — 400071. போன்: 525212.

Promoters:-

SUBASREE REAL ESTATES

"SUGANTHI MANSION"
6/15, Ranganathan Street, T. Nagar,
Madras - 600 017. (Next to Star Bazaar)

House Construction Undertaken by
Mr. V. KASTURIRANGAN, B.E
VENKATESWARA CONSTRUCTIONS
86, Santhome HighRoad, Madras - 600 028. Phone: 417202.



யாணமும் கார்த்திகை எதுவும் முடிவு செய்ய மாட்டார்கள்.

அந்த வாரமே ஒருநாள் அவரைப் பார்க்கப் போனோம். எங்கள் இருவரையும் பார்த்து ரொம்பச் சந்தோஷப்பட்டார். சங்கரைப் பார்த்து, ''என்ன? பொண்ணுக்குக் கல்யாணத்துக்கு, பாத்திண்டு இருக்கே போலிருக்கே. கேள்விப்பட்டேன். ஜமின்டுலே குடுத்திருக்கயாமே'' என்றார்.

''ஆமாம் அம்மாஞ்சி. உங்க ஆசிர்வாதத்துல எல்லாம் நல்லபடி நடக்கணும்'' என்று அடக்கமாகச் சொல்லிக் கொண்டான் சங்கர்.

ஒருமணி நேரம் பேசிவிட்டுப் புறப்பட்டோம். அம்மாஞ்சி சங்கரைக் கூப்பிட்டு, ''உங்கிட்டே நிறைய ஜாதகம் வந்திருக்குமே. தேவையில்லாதவைகளை இங்கே கொடு'' என்றார்.

கொஞ்ச நாட்களில் சங்கர் தனி வீடு பார்த்துக் கொண்டு புறப்பட்டுப் போய் விட்டான். ஃபேமிலியைக் கூட்டிவரும்போது ஞாபகமாக அங்கே இருந்த ஜாதகங்களைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, அம்மாஞ்சியிடம் ஒப்புவிக்கச் சொன்னான்.

ராஜாராமன் மாமா, மாமி இருவரும் ஒருநாள் வந்திருந்தார்கள்: ''சேர்ந்தாற் போல இரண்டு நாள் லீவு. சரி எல்லாரையும் ஒரு தடவை விசிட் செய்யலாமே என்று வந்தோம்'' என்று சொன்னார்கள். அவர்களைப் பார்த்ததும், சங்கர் கொடுத்த ஜாதகக் கத்தை ஞாபகம் வந்தது. அதை எடுத்து அவரிடம் கொடுத்து, ''இதில் ஏதாவது தோதுபட்டால் எழுதிக் கொள்ளுங்கள்'' என்றேன்.

அவர் அவற்றைப் பிரித்துச் சரிப்படும் எனத் தோன்றியவற்றை நகல் எடுத்துக் கொண்டிருந்தார். ஒரு ஃபைல் மாதிரி வைத்துக் கொண்டு, வேலை, கோத்திரம், டேட் ஆப் பர்த் என்று காலம், காலமாக அவர் நீட்டாகக் குறிப்புகள் எடுத்து வைத்திருந்தது என் கவனத்தைக் கவர்ந்தது. மேலெழுந்தவாரியாக நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன்.

என் மனத்திலிருப்பதை ஊகித்தவர் போல ராஜாராமன், ''யாருக்கானும் வேணுமென்றால் தாங்கோ ஸார். அப்புறமா திருப்பிக் கொடுத்தால் போதும். இதைத் திருப்பிக் கொடுக்கிற சாக்கிலேயாவது பாலம் வருவேளோல்லியோ'' என்றார்.

அந்த லிஸ்டை வாங்கி வைத்துக்கொண்டேன். சங்கர் கொடுத்த ஜாதகங்களுடன் அந்த லிஸ்டையும் நகல் எடுத்து அம்மாஞ்சியிடம் சேர்ப்பித்து விட்டேன். நிறைய கல்யாணங்கள் முடித்துக் கொடுத்த மாதிரி பெருமிதம் எனக்கு.


ரொம்ப நாட்களாக லதா வீட்டிற்குப் போக வேண்டிய ட்யூ. இந்த ஸண்டே எப்படியாவது போய்விட்டு வந்துவிடுவதென்று தீர்மானித்து சரோவும், நானும் அங்கு போயிருந்தோம். லதாவின் கணவரும் வீட்டிலிருந்தார். நாங்கள் பாலிடிக்ஸ் பற்றி அலச, லதாவும், சரோவும் வேலைக்காரிகள் படுத்தும் பாடு, ஸ்வெட்டர் பேட்டர்ன் என்று ஒவ்வொரு டாபிக்காகப்பேசிக் கொண்டிருந்தார்கள். தோட்டத்துக்குப் போனார்கள். திரும்பி வரும்போது, லதா சரோவிடம், ''எங்க நாத்தனாருக்கு இது வரை ஒரு வரனும், நிச்சயமாகவில்லை. ஜாதகம் கொடுக்கிற மாமி திரும்பி வந்து விட்டாரா?'' என்று விசாரித்துக் கொண்டே வந்தாள்.

''இந்த வாரம் வந்திருப்பா. ஒரு வியாழக்கிழமை வாயேன். இரண்டு பேரும் போய் விட்டு வரலாம்'' என்றாள் சரோ.

அப்போது அவளுடைய பெரிய நாத்தனாரும் அவள் கணவனும் உள்ளே நுழைந்தார்கள். பெருமூச்சு விட்ட வண்ணம் ஸோஃபாவில் உட்கார்ந்தாள் அவள் நாத்தனார்.

லதாவின் நாத்தனார் தன் ஹாண்ட்பேக்கிலிருந்து ஒரு கவரை எடுத்து லதாவிடம் கொடுத்து, ''இந்தா, இதிலே நிறைய ஜாதகம் இருக்கு. மாப்பிள்ளையோட உறவுக்காரா (சரோவைப் பார்த்து அதான் மாமி உங்களுக்கு உறவுன்னு சொன்னேளே மூர்த்தின்னு எங்க ப்ளாட்ல இருக்காளே அவாதான்.) கொடுத்திருக்கா. இதிலே ஏதாவது சேர்ந்தாத் தேவலை. மேற்கொண்டு எல்லாம் உன் வேலைதான்'' என்றாள்.

கவரைப் பிரித்து லதா பார்த்தாள். ''இந்த ஜம்ஷெட்பூர் டாக்டர் பையன் ஜாதகம் முன்னாலேயே நம்மிடம் வந்தாச்சு. ஜாதகம் சேரலை. அப்புறம் இந்தப் பையன்...'' என்று ஆரம்பித்து பேச்சை நிறுத்திவிட்டு மளமளவென்று மேற்கொண்டு



பார்த்தவளாய்ச் சிரிக்க ஆரம்பித்தாள்

லதாவின் கணவர், 'எதுக்குச் சிரிக்கறே. எங்களுக்கும் சொல்லி விட்டுத்தான் சிரிக்கலாமே'' என்றார்.

லதா ஜாதகங்களை அவரிடம் கொடுத்தாள். அதைப் படித்த அவரும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

நாங்கள் விழித்தோம். பிறகு அவர்களே அதை விளக்கினார்கள். இந்த ஜம்ஷெட்பூர் டாக்டர் பையனில் ஆரம்பித்துத் துபாய் இஞ்ஜினியர் பையன் வரை எல்லா ஜாதகமும் முன்பே இங்கு வந்தவைதான். ஒன்றும் சரிப்படவில்லை என்று ஆடிட்டர் சித்தப்பா பிள்ளை சூரியிடம் கொடுத்துவிட்டோம். மறுபடி எப்படி இங்கேயே திரும்ப வந்திருக்கிறது என்பது தான் தெரியவில்லை என்று ஆச்சரியப்பட்டார்கள்.

நான் புரிந்து கொண்டுவிட்டேன். சூரி தன் ஷட்டகர் ராஜாராமனிடம் கொடுக்க, ராஜாராமனிடம் இருந்து நான் வாங்கி அம்மாஞ்சியிடம் கொடுக்க, அம்மாஞ்சியிடமிருந்து லதா நாத்தனார் வாங்கி வந்திருக்கிறாள்.

நான் அதை விளக்கிச் சொன்னபோது எல்லோருமே ரசித்துச் சிரித்தார்கள்.

குறும்புக் குழந்தைகள்

ஒருநாள் என் அம்மா ஊறுகாய் ஜாடியைத் திறக்க அதன்மேல் பாகத்தில் உப்புப் பூத்திருப்பதைப் பார்த்து, ''உப்புப் பூத்திருக்கிறது. நன்றாகக் கலக்கி எடு'' என்று என்னிடம் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டிருந்த என் ஐந்து வயது மகன்,

''பாட்டி உப்பு எங்கேயாவது பூக்குமா? கடல்லேருந்துதான் எடுப்பார்கள்'' என்றானே பார்க்கவேண்டும்!



என் தோழிக்கு 2 பெண்கள். பெரியவளுக்கு மணமாகிவிட்டது. பொங்கலுக்காக வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்த போது கல்யாணப் பத்திரிகை மீந்து போனவை ஒரு கட்டு இருந்தது. ''இதெல்லாம் 'வேஸ்ட்'தான். தூக்கி எறியவும் மனது வரவில்லை'' என்று என் தோழி சொல்ல, அருகிலிருந்த அவள் 6 வயதுப் பெண், ''ஏன் 'வேஸ்ட்'? என் கல்யாணத்திற்கு ''யூஸ்'' செய்து கொள்ளலாம் அம்மா!'' என்றவுடன் நாங்கள் எல்லோரும் ஆனந்தத்தில் சிரிக்க, குழந்தை ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

—விஜயசுந்தர்



கலந்து பழக ஒரு வாய்ப்பு



முடிவுரை:

மாதர் சங்கங்களில் பங்கு பெறப் பெண்கள் அநேகம் பேர் முன்வர வேண்டும். குடும்பத் தொல்லைகளிலிருந்தும், அந்தச் சூழ்நிலைகளிலிருந்தும், ஒரு வீட்டின் நாற்சுவருக்கு இடையே அடைபட்டுத் தன்னைச் சுற்றி ஒரு உலகம் இயங்குகிறது என்றே தெரியாமல் இருக்கும் பெண்களுக்கு ஒரு வடிகாலாக அமைவது மாதர் சங்கங்களே.

மேல்மட்ட வகுப்பினர் நடத்தும் கிளப் போன்ற ஓரிரு அமைப்புக்களைக் கண்ணோட்டம் செய்து, மாதர் சங்கம் என்றால் பல பெண்கள் கூடி வம்பு பேசுவார்கள் என்றும் அவர்கள் சங்கத்திற்குப் போய் விடுவதால் வீட்டு வேலைகள் ஒன்றும் நிர்வகிக்காமல் நின்று விடுகிற மாதிரியும், திரித்தும் கதை கட்டுரைகள் எழுதியும் மாதர் சங்கத்தைப் பற்றி ஒரு இழிவான எண்ணத்தைச் சமூகத்தில் ஏற்படுத்திய புண்ணியத்தைப் பலர் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்'

அது தவறு என்று நிரூபிப்பது போல் இன்று நமது நாடு முழுதும் எத்தனை மாதர் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

எத்தனையோ பெண்கள் கைத்தொழில் கற்றுக் கொள்கின்றனர். அதனால் அவர்களுக்கு உபரி வருமானம் வர ஏதுவாக இருக்கிறது. குடத்தில் இட்ட விளக்கென, பல திறமைகளைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் பெண்களுக்கு அதை வெளிப்படுத்த இச்சங்கங்கள் வாய்ப்பு அளிக்கின்றன.

ஏன், பலனுடன் பழக வாய்ப்புப் பெறுகின்றனர். நல்லவர்கள் குறுகிய மனப்பான்மையுடையவர். கர்வம் உடையவர்கள் பிறரை மதிக்காத் சுபாவம் உடையவர். பரந்த மனப்பான்மையும் அன்புள்ளமும் கொண்டுள்ளவர்கள், இரக்கச் சுபாவம் உள்ளவர்கள் என்று பலரைத் தெரிந்து கொள்ள வாய்ப்புப் பெறுகின்றனர்.

சங்கோஜமான சுபாவமுடையவர் தைரியமாகப் பலருடன் பழகும் வாய்ப்பை பெறுகின்றனர். பிறரை ஓயாமல் குற்றம் கண்டுபிடிக்கும் சுபாவம் உள்ள பெண்கள், பலருடன் பழகி நல்ல குணம் அடைகிறார்கள். புதுப் புதுக் கலைகள், கற்றுக் கொள்கின்றனர். தங்களுக்குத் தெரிந்ததை நாலு பேருடன் பகிர்ந்து கொள்ளும் பரந்த மனப்பான்மை பெறுகின்றனர்.

இப்படி ஒரு குணத்தையே மாற்றும் வாய்ப்பைத் தருகிறது மாதர் சங்கம். நல்ல முறையில் ஒற்றுமையுடன், ஏற்றத் தாழ்வு வித்தியாசமின்றிப் பலருடன் பழகி, சங்கத்தில் பல பொறுப்புக்களைச் சவாலாக ஏற்றுக் கொண்டுத் திறம்படச் செயல்பட்டு பெண்களை ஒரு ஒழுங்கு முறைக்குக் கட்டுப்படுத்திக் கொண்டு வருகிறது மாதர் சங்கம். சங்கங்களுக்கு வந்து, மனம் மகிழ்ந்து பழகுவதால் மனம் திறந்துக் குடும்பத்தினை இன்னும் திறம்படச் செயல்படுத்துகின்றனர் பெண்கள். அத்தனை மாதர் சங்கங்களும் ஒன்றுபட்டுச் செயல்பட்டால் சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பலமாகப் பெண்கள் மாறுவார்கள்.

—சாவித்ரி வைத்தி.



கோலங்கள் கோலமாவதில்லை



வேலைக்குப் போகாமல் வீட்டிலிருப்பது இவ்வளவு கஷ்டம் என்று காதம்பரி உணர்ந்ததில்லை, வேலையை ரிஸைன் செய்வதானால் ஒரு மாத நோட்டீஸ் கொடுப்பதாய் ஒப்பந்தம். கொடுத்துவிட்டு அந்த ஒரு மாதத்துக்கும் லீவு போட்டுவிட்டாள். ஊரை விட்டே போவதானால் வீட்டுக்கு ஒரு ஏற்பாடு செய்வதிலிருந்து எத்தனை ஆயிரம் விஷயங்களை கவனிக்க. வேண்டியிருக்கிறது. ஆனால் எதிலும் முழுமையாக ஈடுபட முடியவில்லை. மனதைக் குழப்பும் யோசனைகள். விரட்டி விரட்டித் துரத்தினாலும் எப்படியோ நுழைந்து விடும் கள்ள பூனையைப் போல் அவள் எத்தனையோ உறுதியாய் இருந்தாலும் சிந்தையில் புகுந்து வருத்தும் வேண்டாத நினைவுகள். ஹாஸ்பிடலுக்குப் போய்க் கொண்டிருந்த போது வந்து குவியும் நோயாளிகள் மத்தியில் போவது தெரியாமல் நேரம் ஓடி விடும். அதிலும் மன நோயாளிகளுடன் பழகுவதே தனி அனுபவம். வீட்டுக்கு வந்தால் அக்கடாவென்று ஓய்வெடுக்கத்தான் தோன்றும். ஆனால் இப்போதோ காலியறைகளை வலம் வந்து கொண்டு, எதைப் பார்த்தாலும் அது ஏதோ ஒன்றை நினைப்பூட்ட பகிர்ந்து கொள்ள ஆளில்லாவிட்டால் வெறும் எண்ணங்களே கூட கனமேறி எப்படிப்பட்ட சுமையாகி விடுகின்றன! அவள் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த வீட்டில் தான். தாத்தாவும் அவளுமாய் இருந்த போது. இதே வீடு இப்படி பெரியதாய், காலியாய் தெரிந்ததில்லை. அவர்கள் இரண்டே பேர் தானே! அதில் அவர் ஒருவர் அவ்வளவு தூ ரம் நிறைந்துக் கொண்டிருக்



தாரா? கோவில், பக்தி, மதம் என்று இப்படிப்பட்ட விஷயங்களில் அதீத ஈடு பாடு கொண்டிருந்த அவரைப் பார்க்க யார் யர்ரோ வருவார்கள். வேளை பொழுது கிடையாது. சமையலறையில் காபியும் பலகாரமும் தயாரான வண்ணம் இருக்கும். வேறு பெண்கள் இல்லாத வீட்டில் அவளுக்கு சின்ன வயசிலேயே பொறுப்பு வந்து விட்டது. வரும் படியான சூழ்நிலை அமைந்து விட்டது. கைக் குழந்தையாய் இருக்கையிலேயே தாயை இழந்து விட்டவள் காதம்பரி. 'அந்த அடக்கமும் அமெரிக்கையும் யாருக்கு வரும்! உரத்து பேசியதுண்டா, அதிர நடந்ததுண்டா, முகம் சிணுத்தது ண்டா... மகாலட்சுமி மாதிரி வளைய வந்ததுண்டு...' முகம் தெரியாத அம்மாவைப் பற்றி தாத்தா சொல்லும் போதெல்லாம், காதம்பரி கூடத்து லட்சுமி படத்தைப் பார்ப்பாள். வெகு அழகாய், சாந்தமாய் ஒரு அம்மாவை உருவகப்படுத்திக் கொள்ளுவாள். அந்த அம்மாவுக்கு லட்சுமியின் உருவம் இருக்கும், தலையில் கிரீடம் உட்பட. அந்தக் காலத்து விளைவியா சோப் காலண்டரிலிருந்து எடுத்து ஜரிகையும் ஜிகினாவும் வைத்துத் தைத்து ஜதையாய் மாட்டியிருந்த சரஸ்வதி, லட்சுமி படங்களில், லட்சுமி மட்டும் தாமரை பூவிலிருந்து எழுந்து, மௌனமாய் அவளை நோக்கி மெள்ள அழகாய் நடந்து வருவதைப் போல ஒரு கற்பனை விரியும். தொடர்ந்து காதம்பரியின் நடை நிதானப்படும். துள்ளல் அடங்கும், அடியெடுத்து வைக்கும் ஓசை கூட கேட்காமல் நடக்கப் பழகுவாள். அம்மாவை சொல்வது போல் தாத்தா தன்னையும் 'உன் மாதிரி யாருண்டு, உன் அடக்கமும், சமர்த்தும்...' என்று சொல்ல வேண்டுமென வெகுவாய் ஆசைப்பட்டிருக்கிறாள்.

அம்மா, அப்படிப்பட்ட அருமையான அம்மா, போய் விட்ட போது, அவள் பிரிவை சகித்துக் கொள்ள முடியாத வாஞ்சிநாதனும் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைவிட்டுப் போய் விட்டாராம். தாத்தா சொல்லி தெரிந்து கொண்டதுதான். அந்தப் பிள்ளையைத் தேட தான் பட்ட சிரமங்களையும் விவரித்திருக்கிறார். மனைவியை இழந்து, மருமகளை இழந்து — அதெல்லாமாவது கடவுள் பறித்துக் கொண்டது. இருக்கும் ஒரே பிள்ளையையும் தொலைந்து போடா வென்று விட்டு விட மனம் வருமா? கொஞ்சம் பெரியவளாகி புரிந்து கொள்ளும் வயதில் அவளே அவர் முயற்சிகளைக் கண்டிருக்கிறாள். அலுக்காமல், சலிக்காமல் ஊர் ஊராக ஆளனுப்பி விசாரிக்கச் சொல்லுவார். நம்பிக்கையிழக்கவேயில்லை. மேலும், ஒண்டிக்கட்டையாய் ஒரு பெண் குழந்தையை வளர்ப்பதென்றால் லேசா. சமைத்து சாப்பாட்டை ஆள் கொண்டு வந்து பரிமாறினாலும் அவர் எதிரே உட்கார்ந்து மேல் பார்வை செய்வார். வெள்ளிக் கிழமைகளில், 'எண்ணை தேச்சுக்கணும், எழுந்திரும்மா...!' வென்று ஒரு அரை மணி முன்னதாகவே எழுப்பிவிடுவார். இரவு சாப்பாட்டுக்குப் பின் கதை சொல்லுவார். படுக்கையில் விட்டு இழுத்துப் போர்த்தி விடுவார். 'கிராதகன்! இந்தக் குழந்தையை விட்டுப் போக மனசு வந்ததே... ம்...' மென்று நொந்துக் கொள்ளுவார். கிராதகனென்றால் எப்படியிருக்கும் என்று யோசித்திருக்கிறாள் காதம்பரி. இப்போது கூட நினைவிருக்கிறது. அம்மாவுக்கு மாதிரி காட்ட ஒரு லட்சுமி படம் இருப்பது போல், அப்பாவுக்கு ஒரு கிராதகன் படம் இல்லையே என்று அந்த பிஞ்சு மனம் வருந்தியிருக்கிறது. நாளடைவில் பயத்தைத் தோற்றுவிக்கும் பொல்லாத மனிதன் ஒருவன் அவள் மனத்தில் அப்பாவாய் உருப் பெற்றான்.

நேரில் அவர் ஒரு நாள் திடுதிப்பென்று வந்த போது அந்த மனச்சித்திரத்திற்கும் நிஜத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தது!

அவளுக்குப் பதினாறு வயதிருக்கும். தாத்தாவின் நம்பிக்கையெல்லாம் தளர்ந்து நப்பாசையாகி அதுவும் போய் நிராசையாகி விட்டிருந்தது. 'மாட்டுப் பொண்ணு பார்த்த எனக்கே மனசு தாளலேன்னு, மனைவியா-

அனுபவிச்சவனுக்கு அந்த இழப்பு எப்படியிருந்திருக்கும்... அதான் சகலமும் வெறுத்துப் போய் அவன் போயிட்டான். இதோ இந்தக் குழந்தை மட்டும் இல்லேன்னு, நானும் சன்னியாசம் வாங்கிண்டு போயிருப்பேன்...' வருபவர்களிடமெல்லாம் சொல்லி சொல்லி நொந்துக் கொண்டிருந்த தாத்தா வெளியே போயிருந்தார். வருடாந்திர பரிட்சைக்குத் தயார் பண்ணும் மும்முரத்தில் காதம்பரி பாடங்களில் ஆழ்ந்திருந்தாள்.

வாசலில் டாக்ஸி வந்து நின்றது.

முன்சீட்டுக்காரர் முதலில் இறங்கி மீட்டர் அருகில் குனிந்துப் பார்க்க, பின் சீட்டிலிருந்து ஒரு பெண்மணியும் இரண்டு பையன்களும் இறங்கி, அஸ்தமித்த வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் பார்க்க—'நம் மாத்துக்குத்தான் போலேயிருக்கே...' யென்று வாசலுக்கு விரைந்தாள் காதம்பரி.

சாமான்களை எடுக்கச் சொல்லிக் கொண்டிருந்த அவன், இவள் தலை தென்பட்டதும், "ஏம்மா, ஊட்லே ஐயா யாரும் இல்லே?.." என்கிறான். திடுக்கிட்டுப்போகிறாள் காதம்பரி. படிப்பு மும்முரத்தில் சாயங்காலம் தலை வாரிக் கொள்ளவில்லே, முகம் கழுவி பொட்டிட்டுக் கொள்ளவில்லே, கசங்கியிருந்த உடைகளைக் களைந்து மாற்றிக் கொண்டிருக்கவில்லே.. அதனால்... அதனால்... அவளையென்ன வேலைக்காரியென்றா எண்ணிவிட்டார்கள். தாத்தாவுக்கு அருமையிலும் அருமையான பேத்தி. 'அந்த வீட்டின் இளவரசியில்லேயோ?... பட்டென்று என்னமாய் இப்படிக் கேட்கப் போயிற்று...

இறங்கி அவளை சற்றுக் கிட்டத்தில் உற்றுப்பார்க்கிறாள் காதம்பரி. கறுப்புத்தான். அகலமான முகம். வெற்றிலைக் காவியுடன் பற்கள். சதுரமான நெற்றியில் பெரிய பொட்டு, பொருத்தமில்லாத அளவில் ஒரு வட்டக் கொண்டை. நைலான் சரிகை பளா பளாவென்று மின்ன ஒரு புடவை. இவள் கோலத்துக்கு நான் குறைந்தா போயிட்டேன்...

"இங்கே ஐயா, அம்மா யாரும்இல்லே.."

"ஊட்லே பெரியவங்களே இல்லேயா?.."

"தாத்தா வேணும்னா காத்நட்டிருங்க..

அவள் திரும்பிப் போக எத்தனிக்கையில்,

"நீ காதம்பரியா?..."

டகாரென்று திரும்புகிறாள். கேட்டவரை ஏறிட்டுப் பார்க்கிறாள்.

"நீங்க...நீங்க... யாரு நீங்க?..."

"அடேங்கப்பா! என்னமா வளர்ந்துட்டே.... இத்தனூண்டு கையிலே பிடிக்க முடியாம வழுக்குவே..." அவர் பரபரவென்று அருகில் வருகிறார். கண்கள் மின்னப் பார்க்கிறார்.

காதம்பரி பின் வாங்குகிறாள்.

"பார்த்தீங்களாடா, இனம் இனத்தோடன்னு சும்மாவா சொன்னாங்க. நம்பளை இப்படியே விட்டுவிட்டு இவரு மட்டும் பொண்ணோடக் கூடவே உள்ளே போயிடுவாரு போலிருக்கே, ம்?..."

மெள்ள சொன்னாலும் கேட்டுவிட்ட அந்தக் குத்தல் காதிலேயே விழாதது போல் காதம்பரி ஆச்சரியத்துடன் எதிரே அவரைப் பார்த்தாள்.

நிஜமா... இருக்குமா?....

நிஜம்தான் போலிருக்கிறது. தாத்தாவுக்கு வழுக்கையில்லாமல் இருந்தால் எப்படியிருக்குமோ, அப்படி இருக்கிறாரே...

"காதம்பரி... என்னைத் தெரியல்லியா?.."

"தெரியாது... எப்படித் தெரிய முடியும்?...

நான்தான்..., நான்தான்...

"அப்பா!..." மெள்ள ரகசியம் போல், உதட்சைய சொல்லிப் பார்த்துக் கொள்கிறாள் காதம்பரி.

"ம்" கொட்டுகிறார் அவர்.


காதம்பரியின் விழிகள் விரிகின்றன.

அப்பா... அவள் அப்பா... இனிமேல் எங்கே வரப் போகிறாரென்று நம்பிக்கையிழக்க வைத்திருந்த அப்பா... சிவப்பாக, ஒல்லியாக... அடேயப்பா! அவளுடைய கற்பனை கிராதகனுக்கும், இவருக்கும் எவ்வளவு வித்தியாசம்!...

சட்டென்று பார்வையை அகற்றி கீழே பார்க்கிறாள். இது அப்பாவானால், அவர்கள்..

"ஏங்க, இப்படி வாசல்லேயே நிக்க வச்சு வேடிக்கைப் பார்க்கவா இங்கே அழைச்சுட்டு வந்தீங்க. பெட்டியை எடுங்க, உள்ளே போவோம்..."


அசிங்கமான குரல்... யார் இவள்...



Milk குக்கரில் சாதம் வடிக்கலாம்

இரவில் 1 ஆழாக்கு, ½ ஆழாக்கு சாதம் வடிக்க பெரிய குக்கரை வைக்காமல் பால் காய்ச்சும் பொழுது லைன்—ல் ஊற்றுகிற மாதிரி தண்ணீர் விட்டு பின் அரிசியையும் தேவையான அளவு தண்ணீரையும் வைத்து கேஸ் அடுப்பை Sim—ல் வைத்தால் 20 நிமிடங்களில் சாதம் தயார். சாதமும் அதிக நேரத்திற்குச் சூடாக இருக்கும்.

—பத்மா ராமமூர்த்தி.



அவன் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் அவர் காதம்பரியிடம் கேட்கிறார்.

''தாத்தா எங்கேம்மா, எப்போ வருவார்...''

''வாக் போயிருக்கார், கரெக்டா எட்டு மணிக்கு வந்துடுவார்...''

''நீங்க பொட்டியை எடுக்கப் போறீங்களா, இல்லேயா? இல்லாட்டி நான் இப்படியே திரும்பிப் போயிடுவேன்...''

க்குக்... க்ஹக்... அந்த இரண்டு பையன்களும் கையால் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்கின்றனர்.

''கட்டேலே போறதுங்க, சிரிக்கவா சிரிக்கிறீங்க. நம்ம பொழுப்பே சிரிக்கப் போகுதோன்னு தோணுது எனக்கு.''

டக்கென்று காதம்பரிக்கு அவர்கள் யாரென்று புரியவும் அதிர்ச்சி அதிகரிக்கிறது. அம்மா இருந்த இடத்துக்கு... அவன் கேள்விப்பட்டிருந்த அந்த அமெரிக்கைக்கும் நொடிப்புக்கும் எவ்வளவு வேறுபாடு...

''ஆளைக் கூப்பிடறேன்...'' என்று நழுவுகிறாள். உள்ளே போய் ஆளோடு வருகையில், வாஞ்சி நாதனே பெட்டிகளை வாரந்தாவுக்குக் கொண்டு வந்திருக்கிறார். இரண்டு பையன்களும் ஆளுக்கொரு பையோடு, அந்த நீண்ட வராந்தாவை, உயரமான நிலைப்படியை, பெரிய ரேழியை, கூடத்து சாமான்களையென்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு மெள்ள உள்ளே வருகிறார்கள்.

''மொதல்லே பாத்ரூம் எங்கேயிருக்குது காட்டுங்க, வயிறு வெடிச்சுடப் போவுது... வாங்கடா ஜல்தி...''

''இப்படித்தானே பின்னடி போனும், காதம்பரி. ஒண்ணும் மாறல்லியே... நான் காட்டுறேன் வா...'' வாஞ்சி நாதனைத் தொடர்ந்து அனைவரும் பின்கட்டுக்குச் செல்ல —

வாசல் படிக்கட்டில் பழக்கமான செருப்போசை தாத்தா வந்து விட்டதை அறிவிக்கிறது. பையும் பெட்டியுமாய் கூடத்தில் சாமான்கள்தான் முதலில் கண்ணில் படுகின்றன.

''யாரும்மா வந்திருக்கா?...''

அவரை ஏறிட்டுப் பார்க்கிறாள் காதம்பரி.

''அப்பா!...''

''யாரு?...''

''அப்பா... அப்பா...''

''அப்பான்னா?... யாரைச் சொல்றே...''

''ஒரு அப்பாதானே...''.

''என்னது?... வந்து... வாஞ்சியா... வந்து... வந்து...'' தாத்தாவின் குரல் வேடிக்கையாய் இருந்தது.

'ம்'மென்று தலையாட்டுகிறாள் காதம்பரி.

கண்களில் ஒரு பனீர்!

நிஜம்மாவா!... உதடசைந்தது புரிந்ததே தவிர சப்தம் வரவில்லே.

நம்பிக்கை பிறப்பது கஷ்டந்தான்.

அவரிடமிருந்து பார்வையை விலக்கி மேலே மாட்டியிருந்த லட்சுமி படத்தைப் பார்க்கிறாள் காதம்பரி. இத்தனை நாள் போல இன்று அவளுடைய அம்மா அந்தத் தாமரைப் பூவிலிருந்து எழுந்து வரவில்லே. அங்கிருந்தபடியே மௌனமாய் சிரிக்கிறாள். இனி அவள் வர மாட்டாள். ஆனால் வந்திருப்பவனைப் பற்றி எப்படி தாத்தாவிடம் சொல்லுவது...

காதம்பரியின் மனம் உருகி துளிக் கண்ணீராய் விழிநுனியில் வேலிகட்டி நின்றது.

(தொடரும்)



ஆரஞ்சு கிரீம்

தேவையான பொருட்கள்:

பால்		அரை லிட்
சாத்துக்குடி ஜூஸ்	—	அரைலிட்
சர்க்கரை	—	300 கிராம்
கஸ்டட்பவுடர்	—	50 கிராம்
பாலாடை	—	50 கிராம்

செய்முறை:

முதலில் அரை லிட்டர் பாலை நன்ருகக் காய்ச்சி கால் லிட்டர் ஆக வற்ற வைக்க வேண்டும். சாத்துக்குடி பழங்களை நறுக்கி கால் லிட்டர் சாறுபிழிந்து பில்டர் பண்ணி எடுத்து வைத்துக் கொள்ளவும். பால் நன்கு சூடு ஆறிய பின்பு அதனுடன் கஸ்டட் பவுடர் ஜூஸ் சேர்த்து கலக்கிய பின் பிரிஜில் அரை மணி நேரம் வைக்க வேண்டும். பின்பு அந்தக் கலவையுடன் பாலாடை சேர்த்து 4 நிமிடம் நன்கு கலக்க வேண்டும். மிக்ஸியாக இருந்தால் அரை நிமிடம் ஓட விடலாம். வாசனைக்காக 2 சொட்டுக்கள் எசென்ஸ், சேர்த்து செர்ரிபழங்கள் காய்ந்த திராட்சை ஆகியவற்றை அதனுடன் கலந்து மீண்டும் பிரிஜில் வைக்க ஒரு மணி நேரத்திற்குள் நன்ருகக் கட்டியாகி ஆரஞ்சு கிரீம் ரெடியாகிவிடும்.

—அபிராமி ராமமூர்த்தி

இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு : விசிட்டர்ஸ் செட்

புடலங்காய் அடைகறி


தேவையான பொருட்கள்:
முழுப்புடலங்காய் (இளசாக) 1; ஆட்டுக்கறி (கொத்தியது) ¼ கிலோ; முற்றிய தேங்காய் 1; பொட்டுக்கடலை 100 கிராம்; பச்சை மிளகாய் 50 கிராம்; இஞ்சி 25 கிராம்; பூண்டு 50 கிராம்; பட்டை 2 துண்டு; லவங்கம் 6; கடலெண்ணெய் 200 கிராம்; தக்காளி ¼ கிலோ; உருளைக் கிழங்கு ¼ கிலோ; மைதா 100 கிராம்; கொத்துமல்லிக் கீரை ½ கட்டு; வெங்காயம் ¼ கிலோ; கசகசா 2 தேக்கரண்டி; மஞ்சள் பொடி 1 தேக்கரண்டி; தேவையான அளவு உப்பு.

செய்முறை:
கொத்திய கறியை நன்றாகக் கழுவியபின் சிறிது மஞ்சள் தூள், உப்பு சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். உருளைக் கிழங்கை மண் போகக் கழுவி நன்றாக வேக வைக்கவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயைத் துருவிக் கொள்ள வேண்டும். துருவிய தேங்காயில் ¼ பாகம், பொட்டுக்கடலை, பச்சை மிளகாய் 10, பட்டை துண்டு, லவங்கம் 2. இஞ்சி ஒரு துண்டு, பூண்டுப்பல் 10 இவை எல்லாவற்றையும் வைத்து அம்மியில் அரைத்துக் கொள்ளவும்.

புடலங்காயை முழுசாகக் கழுவிக்கொண்டு இரண்டு நுனிகளையும் அறுத்துவிட வேண்டும். புடலங்காயைப் பன்னிரண்டு சம பாகங்களாக வெட்டிக் கொண்டு, உள்ளிருக்கும் விதைப் பகுதியைச் சுத்தமாக நீக்க வேண்டும். சுத்தம் செய்த புடலைத் துண்டுகளைச் சிறிதளவு உப்புப்போட்டு பிசிறி ஒரு பாத்திரத்தில் வைத்து மூடிவிட வேண்டும். மைதாவைச் சப்பாத்திப் பிசைவதுபோல் கெட்டியாகப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியை வைத்து 100 கிராம் எண்ணெயை விட்டுக் காய்ந்ததும், நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தைப் போட்டு, நன்றாகச் சிவக்க விடவும். கொத்துமல்லித் தழையை நன்றாக் அலசி, நறுக்கிப் போட்டு, வெந்த கறி, மசித்த உருளைக் கிழங்கு, அரைத்த மசாலா, சிறிதளவு உப்பு சேர்த்துப் பிசைந்து வாணலியில் போட்டுப் பிரட்டி எடுக்கவும். மீதமுள்ள தேங்காய், கசகசா, இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் இவைகளை நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாயகன்ற பாத்திரத்தை வைத்து, எண்ணெய் காய்ந்ததும், வெங்காயம், பட்டை லவங்கம், கருவேப்பிலை,



இவைகளைப் போட்டு நன்றாகச் சிவந்தவுடன் தக்காளியை அறுத்துப் போட்டு நன்றாக வதங்கிய உடன் அரைத்த மசாலாவையும் போட்டு, சிறிது உப்பு போட்டு சிறிது தண்ணீர் ஊற்றிக் குருமா வைத்துக் கொள்ளவும். இப்பொழுது புடலங்காய்த் துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து தயாரித்து வைத்திருக்கும் மசாலாவைக் கொள்ளுமளவு புடலங்காய்த் துண்டுகளில் நிரப்பவும். சிறிதளவு பிசைந்த மைதாவை எடுத்துப் புடலந்துண்டுகளின் இரு பக்கத்தையும் அடைத்திட வேண்டும். குருமா நன்றாகக் கொதிக்கும்போது, அடைத்து வைத்திருக்கும் புடலந்துண்டுகளைக் குருமாவில் போட்டு மூடி விட வேண்டும். பத்து நிமிடம் கழித்துக் கிளறி மூடவும். பத்து நிமிடம் கழித்துக் குருமாவை இறக்கிக் கீழே வைத்துவிடவும். இது சாப்பாட்டோடு கலந்துச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

—அ. ஜெனி, சென்னை—75.

இரண்டாம் பரிசு : தூக்கு

புடலங்காய் பிடித்தான்

தேவையான் பொருட்கள்:

- புடலங்காய் — 6
- துவரம் பருப்பு — 100 கிராம்
- கடலைப்பருப்பு — 100 கிராம்
- பச்சரிசி — 100 கிராம்
- கடுகு — 1 டீஸ்பூன்
- பச்சை மிளகாய் — 8
- இஞ்சி — சிறிதளவு
- உப்பு — தேவைக்கேற்ப
- எண்ணெய் — 250 மி.லி.
- தேங்காய் — 1 மூடி.
- (தேவையானவர்கள் தேங்காயைத் தவிர்த்து வெங்காயம் சேர்த்துக்கொள்ளலாம்.)

செய்முறை:!

முதலில் அரிசி, பருப்பு களை நைஸாக உடைத்துக் கொள்ள வேண்டும் (மாவும், ரவையுமாக இருக்குமாறு). புடலங்காயை நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். வாணலியில் எண்ணெய் சிறிதளவு விட்டு கடுகு, நறுக்கிய மிளகாய், இஞ்சி இவற்றைத் தாளித்துக் கொண்டு அவற்றுடன் புடலங்காயைப் போட்டு வதக்க வேண்டும். சிறிதளவு வெந்தவுடன் உடைத்து வைத்துள்ள மாவுக் கலவை, உப்பு, தேங்காய் இவற்றைப் போட்டு நன்றாக வேக விட வேண்டும். (தண்ணீர் சேர்க்கக் கூடாது) நன்றாக வெந்தபின் அந்தக் கலவையைப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். (உருண்டைக் கொழுக்கட்டைப் பிடிப்பது போல).

வாணலியில் சிறிதளவு (சுமார் 4 அல்லது 5 டீஸ்பூன்) எண்ணெய் விட்டு அதில் 4 உருண்டைகளைப் போட்டு உருண்டையின் எல்லாப் புறமும் பொன்நிறமாக வரும் வரை வறுத்து எடுக்க வேண்டும். எண்ணெயைச் சிறிது சிறிதாகத்தான் விட வேண்டும். நான்கு, நான்கு உருண்டையாகத்தான் போட வேண்டும். மிகவும் சிக்கனமான, ருசியான மாலை உணவாகும். மேற்கண்ட அளவிற்கு 20, 25 உருண்டைகள் வரை செய்யலாம்.

—லட்சுமி நடராஜன், குளித்தலை.

மூன்றாம் பரிசு : கெட்டில்

புடலங்காய் உசிலியல்

தேவையான பொருட்கள்:

- துவரம் பருப்பு — 2 கப்
- கடலைப் பருப்பு — 2 கப்
- பாசிப் பருப்பு — ½ கப்
- உளுத்தம் பருப்பு — ¼ கப்
- மிளகாய் வற்றல் — 10
- உப்பு — தேவையான அளவு
- பெருங்காயம் — தேவையான அளவு
- பிடித்தமான எண்ணெய்: 100 கிராம்
- கடுகு — 1 ஸ்பூன்.

செய்முறை:

புடலங்காயை நன்றாக அலம்பி, காயின் உள்ளே இருக்கும் கொட்டைகளை நீக்கி விட்டுப் பொடிப் பொடியாக நறுக்கி வைத்துச் சிறிது மஞ்சள் பொடியும், உப்பும் கலந்து வைக்க வேண்டும்.

நன்றாக ஊறிய பருப்புகளையும், உப்பு, மிளகாய், பெருங்காயம் எல்லாவற்றையும் (முதலில் பருப்புகளை ஒன்றாகக் கலந்து நிறையத் தண்ணீர்விட்டு ஊற வைக்க வேண்டும்.) அதிகமாகத் தண்ணீர் விடாமல் கெட்டியாக வடைக்கு அரைப்பது போல் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெயை ஊற்றிக் கடுகைப் போட்டுத் தாளித்ததும் அரைத்து வைத்துள்ள பருப்புகளைப் போட்டு மூடி வைக்கவும். நன்றாக வெந்ததும் கிளறி மீண்டும் வேக வைத்ததும் நறுக்கி வைத்துப் புடலங்காயை நன்றாகப் பிழிந்து (சிறிது தண்ணீர் கூட இருக்கக் கூடாது) பருப்புகளுடன் போட்டு நன்றாகக் கிளறி வேகவிட வேண்டும். சாம்பார் சாதம் போல் பிசைந்து சாப்பிட மிகவும் ருசியானது.

ஜெயலக்ஷ்மி வெங்கடேசன்,
திருச்சி—3.

ஆறுதல் பரிசு : எவர்சில்வர் இலை


மிக்ஸட் வெஜிடபிள் பச்சடி

தேவையான பொருட்கள்:

- பிஞ்சு புடலங்காய் — 1 அடி
- வெள்ளரிக்காய் — 1 (சுமாரான சைஸ்)
- தக்காளி — 1
- வெங்காயம் — 1 (தேவையானால்)
- கொத்துமல்லி — ஒரு சிறு கட்டு
- புளிக்காத கெட்டித் தயிர் — 1 கப்
- பச்சை மிளகாய் — 4
- தேவையான அளவு உப்பு
- தாளிக்க 2 டீஸ்பூன் எண்ணெய், கடுகு (அல்லது) சீரகம் — ½ ஸ்பூன்.



Chhaya/PP/415



செய்முறை:
புடலங்காயைக் கொட்டை நீக்கி நன்கு அலம்பி, நறுக்கிக்கொண்டு, அதேபோல் தக்காளி, வெங்காயம், பச்சை மிளகாய் எல்லாவற்றையும் நறுக்கி ஒரு தட்டில் தனித்தனியாக வைத்துக் கொள்ளவும். வெள்ளரிக்காயைத் தோல்சீவிக் கேரட் துருவலில் துருவி, துருவலை தண்ணீர் இல்லாமல் பிழிந்து வைத்துக் கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து முதலில் கடுகு (அல்) சீரகம் தாளித்து அதனுடன் பச்சை மிளகாயைப் போட்டு வதக்கி ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். மீதி எண்ணெயை மறுபடி வாணலியில் இட்டு வெங்காயம், புடலங்காயைப் போட்டு நன்கு வதக்கவும். (ஒரு கை ஜலம் தெளித்துப் புடலங்காய் நன்கு வேகும் வரை). பிறகு அதை அப்படியே கீழே இறக்கி வைக்கவும். நன்கு ஆறவிடவும். அதற்குள் தாளித்து வைத்துள்ள பாத்திரத்தில் தக்காளி, வெள்ளரிக்காய், உப்பு, தயிர் சேர்த்து, கொத்துமல்லியை நன்கு அலம்பிப் பொடியாக நறுக்கிப் போட்டு, பிறகு புடலங்காய், வெங்காயத்தைத் தயிருடன் கலந்து விடவும்.

குறிப்பு: புடலங்காயை வதக்கியவுடன் சூடாகத் தயிரில் போடக் கூடாது. அப்படிப் போட்டால் பச்சடி நீர்த்துப் போய் விடும்.

—புஷ்பா வெங்கடராமன், சென்னை–4

ஆறுதல் பரிசு : எவர்சில்வர் இலை

புடலங்காய் வறுவல்

தேவையான பொருட்கள்:
- இளம்பிஞ்சாகப் புடலங்காய் — 1
- அரிசி மாவு — ½ ஆழாக்கு
- எண்ணெய் — 200 கிராம்
- மிளகாய்த்தூள் — ½ மேஜைக்கரண்டி
- உப்பு — 1½ டீஸ்பூன்


செய்முறை:
புடலங்காயை முதலில் அலம்பி வில்லை வில்லையாக நறுக்கிக்கொள்ளவும். பிறகு உப்பு மிளகாய்த் தூள் போட்டுப் பிசிறி விடவும். பிறகு இரண்டு மூன்று தரம் குலுக்கிக் கால் மணி நேரம் ஊற விடவும்.
அடுப்பில் எண்ணெயை மிதமாகக் காய வைத்துப் புடலங்காய்த் துண்டுகளை அரிசி மாவில் புரட்டி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்கவும். இதை அப்படியே சாப்பிடலாம். சாப்பாட்டுடன் சேர்த்தும் சாப்பிடலாம்.

—ஜெ. ராஜலட்சுமி, திருவான்மியூர்.





ஜெயலட்சுமி வெங்கடேசன்.



புஷ்பா வெங்கடராமன்.



லட்சுமி நடராஜன்.



நாட்டு மருந்துக்கடைகளில் மாசிக்காய் வாங்கி அதை நான்கு பாகமாக உடைத்துச் சாப்பாட்டிற்கு முன்பு வாயில் போட்டுக் குதப்பி வரும் எச்சிலை விழுங்குங்கள்; வாய்ப்புண் ஆறிவிடும்.



கோயிலில் பூஜைக்குப் பழத் தட்டுக்களைக் கொடுக்கும்போது பெயர் எழுதிய சிறிய துண்டு அட்டையை நூலில் கோர்த்து விடுங்கள். இதனால் தட்டுகள் மாறுவதைத் தவிர்க்கலாம்.

—வள்ளிமயில் மணியம்.

காமிராவுக்கும் கால்ஷீட் பிரச்னை!



லோக்சபா தேர்தலில் அடித்த 'இந்திரா அலை' மூன்று மாதங்களுக்குப் பிறகு நடந்த மாநிலத் தேர்தல்களின்போது வேகம் இழந்துவிட்டது. உத்தரப்பிரதேசம், பீகார், ராஜஸ்தான்' மத்தியப் பிரதேசம் முதலான 'ஹிந்தி' மாநிலங்களில் கிடைத்த அமோக வெற்றி ஆந்திரா, கர்நாடகா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் கிட்டவில்லை. ஆந்திராவில் என். டி. ஆரும், கர்நாடகாவில் ராமகிருஷ்ண ஹெக்டேயும் முன்னைவிட அதிக ஆதரவு பெற்று நிலையான ஆட்சியை ஸ்தாபித்துக்கொண்டுள்ளனர். சிக்கிமில் எதிர்க்கட்சி ஆட்சியைக் கலைத்துவிட்டு சொந்தக் கட்சி ஆட்சியைத் திணித்ததற்குத் தண்டனையாக இ. காங்கிரஸ் கட்சிக்கு 30 இடங்களில் ஒரே ஒரு இடம்தான் கிடைத்தது.

கர்நாடகாவில் லோக்சபை தேர்தலின்போது இந்திரா காங்கிரஸ"க்கு அதிகம் வோட்டுப் போட்டனர். அதை வைத்துச் சட்டமன்றத்தேர்தலில்மொத்தம் 224 இடங்களில் 174 இடங்களை காங்கிரஸ் பெற்றுக் காங்கிரஸ் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று ராஜீவ் காந்தி எதிர்பார்த்திருந்தார். கிடைத்தது 66 இடங்கள்தாம். இப்படியாக, டில்லியில் ஆளும் கட்சியே மாநிலங்களிலும் ஆள வேண்டும் என்று ராஜீவ் காந்தி தேர்தல் பிரசாரம் எழுப்பியது அடிபட்டுப் போய்விட்டது.

* * * * *

தமிழ்நாட்டில் ஆளும் கட்சி கோஷ்டிப் பூசல் எம். ஜி. ஆர். திரும்பி வந்தபிறகு அடங்கிவிட்டது. இரு கோஷ்டிகளையும் சாமர்த்தியமாக அவரவர் இடத்தில் வைத்து, ஒதுக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட ஜெயலலிதாவிடம் புதுவைத் தேர்தல் பிரசாரப் பொறுப்பை ஒப்படைத்தார். அங்கே காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று காங்கிரஸ் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி ஜெயலலிதாவின் திறமைகளை அறிந்து அவரைப் புறக்கணிக்கக் கூடாது என்று எம். ஜி. ஆருக்குச் சொல்லி அனுப்பினாராம். ராஜ்யசபை எம். பி.யாக உள்ள ஜெயலலிதாவுக்கு இன்னும் பல சிறப்புகள் காத்திருக்கின்றன.

* * * * *

சினிமா உலகில் ஹீரோ ஹீரோயின் நடிக நடிகையரைக் குறிப்பிட்ட தேதிகளில் படப்பிடிப்புக்கு வரச் சொல்லி கால்ஷீட் தருவார்கள். புதிதாக ஒப்பந்தம் செய்ய விரும்பும் படமுதலாளிகளுக்கு கமலஹாசன், ரஜினிகாந்த், ஊர்வசி, நளினி முதலான முன்னணி கலைஞர்கள் ஒரு வருடம் இரண்டு படம் என்று நீண்ட காலத்துக்கு அகப்படமாட்டார்கள். அதுவரை 'புக்' ஆகி இருப்பார்கள். இந்த 'கால்ஷீட்' பிரச்னை இப்போது ஒரு 'கேமிரா' விஷயத்தில் ஏற்பட்டிருக்கிறது.

'குட்டிச் சாத்தான்' என்னும் மலையாள 3—டி படம் சக்கைபோடு போட்டுக்கொண்டிருக்கிறது. முப்பரிமாண பிம்பங்கள் திரையில் தோன்றும். அதை ஒரு விசேஷ கண்ணாடி அணிந்து பார்க்க வேண்டும். கண்ணுக்கு அருகே பாத்திரங்களும், பொருள்களும் ஓடி வருவது போல் தோன்றும்.

இந்தப் படம் இதுவரை 10 கோடி ரூபாய்க்குமேல் லாபம் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது. முதல் 3—டி இந்தியப் படமான குட்டிச்சாத்தானின் வெற்றியைக் கண்டு பிற இந்தி, தமிழ், தெலுங்கு தயாரிப்பாளர்களும் 3—டி படப்பிடிப்பில் முழுமூச்சாக இறங்கிவிட்டார்கள்.

இந்தப் படங்களை எடுப்பதற்கும் விசேஷமான 3—டி காமிராக்கள் வேண்டும். 'அர்ரிவிஷன்' என்னும் இத்தகைய காமிரா சென்னையில் இரண்டே இரண்டுதான் இருக்கிறது. ஒருநாள் வாடகை காமிராவுக்கு ரூ. 10,000/— இப்படி வாடகை கொடுத்து இந்த காமிராவுக்கு 'கால்ஷீட்' வாங்க பட முதலாளிகள் கியூவில் நிற்கிறார்களாம்.

1986 வரை காமிரா கால்ஷீட் கிடையாது என்று இந்தக் காமிராக்களை மொத்த குத்தகை எடுத்திருக்கும் ரமேஷ் பிரசாத் சொல்கிறாராம். தமிழில் முதல் முதலாக வெளியாகவிருக்கும் 3—டி படம் தேவர் பிலிம்சின் 'அன்னை பூமி.'

—ரங்கஸ்ரீ.



கதகளி



கேரள நாட்டின் தனிப் பெரும் கலை, கதகளியாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன், பண்படாத நாட்டுப்புறக் கலையாகக் கருதப்பட்டு வந்த இக்கலையானது, சுமார் 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன் ஒரு கிளாசிகல் நடனவடிவ அந்தஸ்திற்கு உயர்வு பெற்றது. பரத நாட்டியம் மற்றும் கதக் போன்ற நாட்டிய வடிவங்களுள், தனி நாட்டியத்திற்கும் நாட்டிய நாடகத்திற்கும்

உள்ள விந்தியாசத்தை அறுதியிட்டு வரையறுக்க முடியும். ஆனால் இக்கலையில் அவ்விந்தியாசத்தைக் காண்பதரிது. பல நூற்றாண்டுகளின் பரிணாம வளர்ச்சியாலும், தென்னகத்தின் பல்வேறு நாடக வடிவங்களின் செல்வாக்கினாலும் உருவம் பெற்ற கலையே கதகளியாகும். கதகளி பரத நாட்டியத்தைப் போன்று ஒரு தனிப்பட்ட நாட்டிய நிகழ்ச்சியின் வடிவமோ அல்லது அரண்மனையைச் சார்ந்த கதக் நாட்டிய நிகழ்ச்சியின் வடிவமோ அல்ல. கதகளி நாட்டிய வடிவத்தில் பல நாடகப் பண்புகள் மிளிர்ந்திருப்பதைக் காணலாம்.

கேரளத்தின் தொன்மையான கூத்து, சாக்கியர் கூத்தாகும். தென்னகத்தின் பலவகை ஆட்ட வடிவங்களான திரையாட்டம், களியாட்டம் போன்றவை, கதகளி நாட்டியக் கலையின் கருவாகும். கேரளத்தில் இன்று புகழுடன் விளங்கி வரும் கூடியாட்டம், பல்வேறு முகப் பாவங்களைப் பிரதிபலிக்கும் கலையாகும்.

பல்வேறு கூத்துக்கள், துள்ளல்கள், ஆட்டங்கள் மற்றும் பகவதி, காளி ஆட்டங்கள் ஆகியவற்றின் கலவையே தற்கால கதகளியாகும். பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த கன்னிக் கோட்டை சிற்றரசரும், கொட்டாரக் காரா சிற்றரசரும் இக்கலை உருவெடுக்க பெரும் காரணமாக இருந்தவர்கள். கலை நுட்பத்தில் கதகளி மற்ற நாட்டிய வடிவங்கள் போன்று, நிருத்தியம் மற்றும் அபிநயம் ஆகியவற்றைப் பின்பற்றி வந்தாலும் நாடக வடிவே அதன் ஜீவநாடியாகும்.

புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் ஆகியவையே கதகளி நாட்டிய நிகழ்ச்சிகளின் தலைப்புகளாகும். கதகளி நாட்டிய ஒப்பனை விரிவானதாகும். பச்சை நிற வண்ண ஒப்பனை சாத்வீக குணத்தை பிரதிபலிக்கும். பெரும்பாலும் கதகளி கலைஞர்கள் முகத்திற்கு இளஞ்சிவப்பு வண்ணத்தையே உபயோகிக்கின்றனர். முக மூடிகளை அறவே உபயோகப்படுத்தப்படுவதில்லை. கண்களும் தாடைகளும் பெரிதாகக் காட்ட, வெட்டப்பட்ட காகிதங்களையும், காகிதத்தின் இறுகிய கூழையும் பயன் படுத்துகின்றனர். நாட்டிய நாடகத்தின் பல்வேறு பாத்திரங்களுக்கேற்ப பல்வகை வர்ணங்கள் கையாளப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும், கதகளி நிகழ்ச்சிகள் அதிர வைக்கும் தோல் வாத்தியக் கருவிகளின் ஒலியுடன் துவங்குகிறது. தோல் கருவி வாத்தியமான செண்டை, மத்தளம் முக்கிய கருவிகளாகும். தோடயம் என்பது இறை மற்றும் சபை வணக்கமாகும். அதற்குப் பின்னர் புறப்பாடு எனப்படும் நிருத்யம் நிரம்பிய நாட்டியத்தைக் காணலாம். இறுதியாக நாட்டிய நாடகம் துவங்கும். தெருக் கூத்து, வீதி நாடகம் போன்ற கலைகளில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் திரைச்சீலைகளை இக்கலையிலும் காணலாம்.

உலக அரங்கில் கதகளியின் பெருமையை அறியச் செய்தவர்களில் தலையாயவர் மலையாளக் கவிஞர், மகாகவி வள்ளத்தோல் ஆவார்கள்.

— கே. எல். ராமன்



தென்னம்பாளையில் தெளிந்த ஓவியம்

1. சிவப்பு நிறத்துணி
2. கரும்பச்சை நிறத்துணி
3. மஞ்சள் நிறத்துணி
4. லைட் ப்ரௌன் நிறம்
5. ஆழ்ந்த ப்ரௌன் நிறம்
6. கிளிப்பச்சை நிற நூலால் chain stich போடவும்
7. சாம்பல் or க்ரே கலர் நூலால் காம்புத் தையல் போடவும்.
8. பவழச் சிவப்பு நூலால் அடைப்புத் தையல் போடவும்.
9. கறுப்பு நூலால் சங்கிலித் தையல் போடவும்.

10. கறுப்பு நூலால் அடைக்கவும்.
11. சிவப்புநிறத் துணி
12. கரும்பச்சை நிறம் or இலைப்பச்சை

தேவையான பொருட்கள்:

1. தென்னம்பாளை. இது அதிகமும் காய்ந்து விடாமல், மிகவும் இளசாகவும் (குருத்து) இல்லாதிருத்தல் வேண்டும். தென்னைமரம் கலையெடுக்கும் சமயத்தில் கிடைக்கும்.
2. பச்சை, கரும்பச்சை, மஞ்சள், சிவப்பு, அரக்கு, நிறத் துண்டுகள்.



எந்த மருந்தை வாங்கினாலும், அந்த மருந்தின் மீது தயாரிக்கப்பட்ட வருஷம், காலாவதியாகும் வருஷம், சரியான விலையைப் பார்த்து வாங்குங்கள்.

— லட்சுமி சிவம்.



3. ஆழ்ந்த பச்சை மற்றும் கறுப்பு எம்ப்ராய்டரி நூல்கள்.
4. கெட்டியான அட்டை.
5. பெவிகால்
6. வார்னிஷ்

செய்முறை:

முதலில் பாளையை ஓர் அடி நீளம் விட்டு ஆக்ஸா ப்ளேடினால் சரியாக அறுத்துக் கொள்ளவும். பிறகு படத்தில் உள்ள கிளியின் உருவத்தை பச்சை நிறத் துணியில் ட்ரேஸ் செய்துக் கொள்ளவும். படத்தில் குறிப்பிட்டுள்ள தையல்களைத் தகுந்த நூல்களைக் கொண்டு தைத்து முடிக்கவும். கிளி ட்ரேஸ் செய்த துணியை அட்டையில் பெவிக்காலைத் தடவி அழுத்தமாக ஒட்டவும். கிளியின் உருவத்தை மட்டும் கத்தரிக்கோல் உதவியினால் வெட்டிக் கொள்ளவும். அதை பாளையில் சற்று சரிவாக ஒட்டவும். பிறகு பூக்களின் உருவங்களையும் மேலே சொன்ன முறையில் அட்டையில் ஒட்டி கத்தரிக்கவும். சிவப்பு நிறப் பூக்கள் கவர்ச்சியாக இருக்கும். பூவின் நடுப் பாகத்தை மஞ்சள் நிறத்துணியை சிறு வட்டமாக வெட்டி ஒட்டவும். கிளியின் நிறத்திற்கு வர்ணபேதம் தருவதாக இருக்க வேண்டும். இலைகள், கிளைகள் முதலிய வற்றையும் அட்டையில் ஒட்டி, பின் பிசிறில்லாமல் வெட்டி ஒட்டவும். கிளியின் கால் பாகத்திற்கு ப்ரௌன் நிறத் துணியை உபயோகிக்கவும். பெவிகால் நன்கு பிடித்துக் கொண்டு காய்ந்ததும், மெல்லிய பிரஷ்ஷின் உதவியால் வார்னிஷை பாளையின் இதர பாகங்களில் பூசவும். முதற் பூச்சு காய்ந்த பிறகே இரண்டாம் பூச்சு கொடுக்க வேண்டும். இரண்டாம் பூச்சு கொடுப்பதற்கு முன் வார்னிஷை சிறு கிண்ணத்தில் விட்டு அதில் சிறிதளவு கேசரிப் பவுடரை கலக்கி அடித்தால் மிகவும் எடுப்பாக இருக்கும். விளக்கு வெளிச்சம் படும் சுவரில் முனையை மாட்டி விட வேண்டியதுதான்.

எளிமையான, அதிகம் செலவில்லாத கைவேலை இது. கொஞ்சம் கற்பனை வளம் இருந்தால் அவரவர் இஷ்டம் போல கூடைக்காரி, தென்னைமரம் இன்னும் பலவற்றை செய்யலாம். எங்கே முயன்று பாருங்கள் பார்க்கலாம்.

சாமாளி

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: சத்தான டிபன் கடைசி தேதி: 15-4-85

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

சொல்ல

உஷா சுப்ரமணியம் அவர்களின், "நீங்கள் ஒரு சிறந்த இல்லத்தரசியா?" கட்டுரை சிறந்த இல்லத்தரசிகளாக்க உதவும் அருமையான — பயனுள்ள கட்டுரை!
வாசுகி இமயன் பெங்களூர் 53.

தன்னுடைய கண்மணி ப்ரீதியைப் பற்றி— கதை கதையாய்ச் சொல்லி — சோகமான ஒரு பாரத்தை உருவாக்கி — நெஞ்சில் அழுத்தமாக குத்தியதோடில்லாமல் — கடைசியில் கண்களில் நீரையும் அல்லவா வரவழைக்கச் செய்துவிட்டார்... அந்த நாலாம் கிளாஸ் வாத்தியார்...! இது போன்ற உண்மைச் சம்பவங்களை பத்திரிகை வாயிலாக படித்துக் கொள்வது போதாது? கதை வடிவத்தில் வேறு தந்து நெஞ்சை கனக்கச் செய்ய வேண்டுமா?! வேண்டாம் சார்... ப்ளீஸ்!
பி. எல். பரமசிவம் மதுரை 1.

மாதர் சங்கம் நடத்துவது எபபடி? — உபயோகமான கட்டுரை. தமிழகத்தில் பவனி வரும் எல்லா மாதர் சங்கமும், அதன் அங்கத்தினரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை.
சிம்மவாஹினி சென்னை .39

தோடம்பழ ஸாப்டி கேக் செய்து பார்த்தோம். மிக அருமையாக இருந்தது. சுவையான டிபனுக்கு வழி செய்த உங்களுக்கு ரொம்ப தேங்க்ஸ்!
பா. தியாகராஜன் வேதாரண்யம்

எந்த பாத்திரத்தில் சமைத்தால்— என்ன பலன் ஏற்படும் என்ற பயனுள்ள கட்டுரை எங்கள் வீட்டு இல்லத்தரசிகளை மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தி விட்டது!
ஆர். எஸ். இராஜ். சீர்காழி

'உங்கள் குழந்தையை யார் வளர்க்கிறார்கள்' என்ற ஜெயா. வி. ராமனின் கட்டுரை ஒவ்வொரு பெற்றோரும் கண்டிப்பாக படிக்க வேண்டிய முக்கியமான தொன்று. குழந்தைகளை மட்டுமல்ல, பெற்றோர்களையும் இந்த டீ. வி. மோகம் எந்த அளவுக்கு ஆட்டுவிக்கிறது என்பதை அறியும் போது ஏற்படும் வேதனை அளவிடற்கரியது. எண்ணற்ற வன்முறை, கொலை, சண்டைக் காட்சிகளைக் காணும் குழந்தைகளின் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அன்பு, இரக்கம், மனிதநேய உணர்ச்சி, பாசம் முதலியவைகள் விடைபெறுகிறது. இது எதிர்கால தலைமுறைகளிடம் மிக பயங்கரமான விளைவையே உண்டு பண்ணும் என்பது அதிர்ச்சி தரத்தக்க உண்மை.
சுதமதி, புது தில்லி. 19

'இங்கே ஒரு சந்திப்பு' மிகவும் பயனுள்ள ஒரு சந்திப்பாய் அமைந்திருந்தது. 'உங்கள் குழந்தையை யார் வளர்க்கிறார்கள்?' அநேகமான பெற்றோர்களையும் சிந்திக்க வைக்கும் கட்டுரையாக பரிமளித்தது.
ஏ. ஜி. கண்ணன், திருவல்லிக்கேணி

டாக்டர் ஜெயந்தி கூறிய சம்பவங்கள் அனைத்தும் இன்று பல குடும்பங்களில் நடப்பது கண்கூடாகும். இந்த நிலை மாற வேண்டும்.
செல்வி அன்னபூரணி, தூத்துக்குடி. 6

"ஆர். அருந்ததியின் 'பெண்களை உயர்த்திய ஆசிரியை' கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. மேலும் இதைப் போல் கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம். பிளாரென்ஸ் நைட்டிங்கேல், அன்னை தெரசா, போன்றவர்களைப் பற்றியும் கட்டுரை வெளியிடலாமே!"
ரா. சுசீலா, மன்னார்குடி

விரும்புகிறோம்

குறும்புக் குழந்தைகள்



"சுபா சுந்தரி, இங்கே வாடி" ஆபீஸிலிருந்து வந்த என்னவர் எங்கள் கடைக்குட்டியை வாஞ்சையுடன் அழைத்தார்.

"அப்பா சுந்தரா, என்னடா?" என்ற பதிலைக் கேட்டு மாமியார் உட்பட அனைவருமே அரண்டுவிட்டோம்.

"ஏய், அப்பாவை வாடா சொல்லலாமா?" என்று கேட்டார் அவர்.

"நீ மட்டும் என்னை டீ சொன்னேல்ல?" —அந்த இரண்டரை வயதின் ஈகோ எங்களை அசர வைத்தது.

விளித்தலில் டா, டி மட்டுமின்றி, சாதாரணத் திட்டுக்களையும் அவள் எதிரொலிப்பது எங்களை அப்படியே பொட்டில் அறையும். விடுமுறை நாட்களில் ஐந்தரைக்கெல்லாம் எழுந்து விடுமுறை சுகத்தை அனுபவிக்க விடாமல் எங்களை சொல்லாலேயே உலுக்கிவிடும் அவளை, பள்ளிக்கூட நாட்களில், (இத்தனைக்கும் வெறும் எல். கே. ஜி. தான்) காலையில் சுப்ரபாதம் பாடிப் பாடி எழுப்புவதற்குள் வாய் வலித்துப் போகும். கூடவே 'சோம்பேறி; ஸ்கூல் போகணும், எழுந்திரு' என்று நாங்கள் பாடும் வசை, விடுமுறை நாட்களில் அதிகாலைத் தூக்கத்தில் இருக்கும் இவரை, கீச்சுக்குரலால், 'சோம்பேறி, எழுந்திரு' என்று எதிரொலிக்கப் படும் போது பகீரென்று உண்மை சுடும் — 'குழந்தைகள் தோற்றத்தில்தான் குழந்தைகள்; மன வளர்ச்சியிலும், மூளை வளர்ச்சியிலும் அல்ல.'

—தனலட்சுமி முத்துஸ்வாமி

கோடை ஸ்பெஷல்

கோடையில் விருந்தினரை உபசரிக்க மட்டுமன்றி, நமக்கும் ஏதேனும் குளிர்ந்த பானம் தேவைப் படுகிறதே... ஸ்க்வாஷ் தயாரித்து விட்டால், தேவைப் படும் போது ஜூஸ் ரெடி...

எலுமிச்சம் பழ ஸ்க்வாஷ்...

எலுமிச்சம்பழம் 50. பிழிந்து விதையில்லாமல் சாறு பிழியவும். 3/4 பங்கு நீர் விட்டு, ஒற்றைக் கம்பிப் பாகு வைக்கவும். பாகை வடிகட்டிக் குளிர வைக்க வேண்டும். பொட்டாசியம் மெடா பை சல்பைட் 1/4 டீஸ்பூன், சிறிது தண்ணீரில் கரைத்துப் பாகில் கரைக்கவும். எலுமிச்ச நிறக் கலர் 1/4 டீஸ்பூன், எலுமிச்சை எசென்ஸ் 2 ஸ்பூன், உப்பு அரை ஸ்பூன் பாகில் சேர்த்து, எலுமிச்சைச் சாற்றைப் பாகில் கொட்டி கலக்கவும். ஸ்க்வாஷ் வைக்கும் பாட்டிலை கொதிக்கும் தண்ணீரை விட்டுக் கழுவி வெய்யிலில் கவிழ்த்து வைத்து, பிறகு ஸ்க்வாஷை விட்டு இறுக்கி மூடவும். தேவையான போது கால் ஸ்பூன் ஸ்க்வாஷை, ஒரு டம்ளர் நீரில் கரைத்து, ஐஸ் துண்டுகள் வாங்கி மிதக்க விட்டால் ஜூஸ் தயார்... எலுமிச்சை தோலியை உலர்த்திப் பொடி செய்து, குக்கரின் உள்ளே போட உபயோகிக்கலாம். சீயக்காய் பவுடரில் உபயோகிக்கலாம்.



ஆரஞ்சு ஸ்க்வாஷ்

ஐம்பது புளிப்பில்லாத ஆரஞ்சு பழத்தை பிழிந்து வடிகட்டி சாறு எடுக்கவும். ஒரு பங்கு சாற்றுக்கு ஒன்றரை பங்கு சர்க்கரை போதும். (பழம் இனிப்பு என்பதால்). 3/4 பங்கு தண்ணீர் விட்டு ஒற்றைக் கம்பி பாகு வைத்து, பாகை வடிகட்டிக் குளிர வைக்கவும். இரண்டு ஸ்பூன் சிட்ரிக் ஆசிட், 1/4 ஸ்பூன் பொட்டாசியம் மெடா சல்பைட், லெமன் யெல்லோ, ஆரஞ்சு ரெட் கலர். இரண்டுமாய் 1/4 ஸ்பூன். ஆரஞ்சு எசென்ஸ் ஸ்பூன் கலந்து, உப்பு 1/2 ஸ்பூன் கலந்து பாகில் கொட்டவும். நன்றாகக் கலந்து, சுத்தமான பாட்டிலில் வைக்கவும். கமலா ஆரஞ்சு தோலியை உலர்த்தி இடித்து வைத்துக் கொண்டால் சீயக்காய் பொடியிலும், பாத்திரம் தேய்க்கும் பொடியிலும் கலக்கலாம். சாதம் வடித்த கஞ்சியில் கலக்கித் தலைக்குக் குளித்தால், தலை மணமாய், ஷாம்பூ தேய்த்தது போல் இருக்கும். இதே முறையில் சாத்துக்குடி ஜூஸ் செய்யலாம்.



மாம்பழ ஸ்க்வாஷ்

ஆறு மாம்பழம் (கனியாமல் இருக்க வேண்டும்) தண்ணீரில் வேகவிடவும். தண்ணீரை வடித்து தோலியை உரிக்கவும். சத்தை எடுக்கவும். வடிகட்டின நீரும், தோலியில் இருக்கும் சத்தும் கசக்கும். ஆதலால் அவற்றை உபயோகிக்க கூடாது. கொட்டையில் இருக்கும் சத்தை, நன்கு கசக்கி எடுக்கவும். சாற்றைத் துணியால் வடிகட்டவும். ஒரு பங்கு சாற்றுக்கு இரண்டு பங்கு சர்க்கரை, 3/4 பங்கு நீரில் ஒற்றைக் கம்பி பாகு வைத்து, வடிகட்டிக் குளிர்ந்ததும் சாறுடன் கலக்கவும். மேங்கோ எசென்ஸ், சிட்ரிக் ஆசிட், 1 1/2 ஸ்பூன், உப்பு, பொட்டாசியம் மெடா ஸல்பைட் கால் ஸ்பூன் கலந்து பாட்டிலில் ஊற்றி மூடி வைக்கவும்.



ஆப்பிள் ஜெல்லி

ஆப்பிள்களை தோல் சீவி, வேக வைக்கவும். வெந்ததும் மசிக்கவும். இதில் பாதி அளவு சர்க்கரையைப் போட்டு கொதிக்க விடவும். அடுப்பை நன்றாய் எரிய விட்டால் சீக்கிரம் பாகு வரும். பாகு ஆறியதும், சிட்ரிக் ஆசிட், பைன் ஆப்பிள் எசென்ஸ், ரோஸ் எசென்ஸ் விட்டு மசித்த ஆப்பிளைக் கலந்து எடுத்து வைக்கவும். ப்ரிஜ்ஜில் வைக்கவும்.



கொய்யாப்பழம் ஜல்லி

கொய்யாப்பழத்தைச் சிறு துண்டுகளாய் நறுக்கி, வேகவிட்டு வெந்ததும், நன்கு மசித்துவிட்டு வடி கட்டவும். (வடிகட்டியில்). வடித்த நீரில், சரிபாதி சர்க்கரை போட்டு, ஒரு மணி நேரம் கொதிக்க விடவும். இறக்கி ஆற வைக்கவும். சிட்ரிக் ஆசிட், பைன் ஆப்பிள் எஸென்ஸ் சேர்த்து, பாட்டிலில் கொட்டி வைக்கவும். மறுநாள் கெட்டியாகவில்லை என்றால், மறுபடி 10, 15 நிமிடம் கொதிக்க வைக்கவும்.




மில்க் ஷேக்

வாழைப்பழம், ஆப்பிள், சீத்தாப்பழம், மாம்பழம், தர்பூசணி, கிருணி அல்லது முலாம் போன்ற எல்லா சதைப் பற்றுள்ள பழங்களிலும் மில்க்ஷேக் தயாரிக்கலாம். பழங்களைத் தோலுரித்து, சர்க்கரை, தேவையான அளவு, பால் 1/4 லிட்டர், ஏலப்பொடி சிட்டிகை சேர்த்து, மிக்ஸியில் ஓடவிட்டுக் கடைந்து, ஐஸ் துண்டம் சேர்த்து பரிமாறவும். பப்பாளி பழத்திலும் மில்க்ஷேக் செய்யலாம்.



ரோஸ் மில்க்

சர்க்கரை 200 கிராம், ரோஸ் எஸென்ஸ் 2 ஸ்பூன், ரோஸ் கலர், 1 சிட்டிகை சிட்ரிக் ஆசிட் 1/2 ஸ்பூன். சர்க்கரையை 2 பங்கு தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். வடி கட்டி, ஆறியதும், ரோஸ் எஸென்ஸ், சிட்ரிக் ஆசிட், ரோஸ் கலர் கலந்து பாட்டிலில் எடுத்து வைக்கவும். தேவைப்படும் போது, 1/4 டம்ளர் சிரப்பில் 3/4 டம்ளர் பால் கலந்து ஐஸ் துண்டு போட்டு பருகவும்.



நாரத்தங்காய் ஸ்க்வாஷ்

எலுமிச்சையைவிட நாரத்தங்காய் விலை மலிவு. இதிலும் ஸ்க்வாஷ் செய்யலாம். பாதி சாற்றைப் பிழிந்து மீதியில் உப்பு, மிளகாய்த்தூள் கலந்து பிசிறி உலர்த்தி ஊறுகாயாக உபயோகிக்கலாம். எலுமிச்சை ஜூஸ் செய்யும் முறையிலேயே நாரத்தங்காய் ஸ்க்வாஷும் செய்யலாம். தஞ்சை ஜில்லாவில் ஜாதி நாரத்தங்காய் கிடைக்கும். இது பித்தத்திற்கு நல்லது. இதிலும் மேற்கூறிய முறையில் ஸ்க்வாஷ் செய்யலாம்.

கோடையில் எளிய, சிக்கனமான, பானம், பானகம். சுக்கு 100 கிராம், ஏலக்காய் 4, வெல்லம் அரை கிலோ. சுக்கை வெய்யிலில் உலர்த்தி நைஸாய் பொடி செய்யுங்கள். வெல்லம், சுக்குப்பொடி, ஏலப்பொடியை இடித்து அள்ளி வைக்கவும். பானைத் தண்ணீரை ஜில்லென்று எடுத்து, வெல்லப் பொடி கலக்கி குடிக்க ஜில்லென்று, எளியவர்க்கும் இனிய ஜூஸ் தயார். கோடையில் நீர்ச்சுருக்கு ஏற்படாத வண்ணம் காக்கும் இந்த ஏழைகளின் பானகம். (இதனாலேயே, கோடையில், ராமநவமி, நரசிம்ம ஜயந்தி, காலங்களில் பானகம் வழங்குகிறார்கள்).

— கனகவல்லி

இட்லிக்கு அரைக்கிறீர்களா

கல்லுரலில் அரைத்தாலும் கிரைண்டரில் அரைத்தாலும் — உளுந்துக்கு — முதலில் நிறைய ஜலம் விடக்கூடாது — வடை — போண்டா — இட்லி போடுவான் — பதம் — என்று கொஞ்சம் கொஞ்சமாக ஜலம் சேர்த்து அரைக்க உளுந்து 'வேல்' காணும். அரைக்க அரைக்க மாவு பூரித்துச் சேரும்.

உளுந்து நன்கு அரைபட்டு விட்டதா என்று அறிய, அரைக்கும் போது கை நனைக்க ஜலம் வைத்திருப்போம் அல்லவா -- அதில் சிறிது உளுந்து மாவைப் போட்டால் கரையாமல் மிதந்தால் அரைத்தது போதும் என்று கொள்ளலாம்.

அரிசி அரைக்கும்போது தேவையான தண்ணீரில் பாதியை முதலில் அரைக்கும்போதே அரிசியில் சேர்த்து அரைத்தால் அரைக்க எளிது. சீக்கிரம் மசியும். அரிசியில்தான் மாவுக்குத் தேவையான உப்பைப் போட வேண்டும். உளுந்தில் போட்டு அரைத்தால் மாவு பிரிந்துவிடும். மாவு அரைத்துக் கையோடு திட்டமான பக்குவத்தில் கரைத்து வைத்தால் இட்லி, தோசை மிகவும் நன்றாக இருக்கும். கெட்டியாக அரைத்து வைத்து மறுநாள் கரைத்தால், சமனமாக பரவுவதில்லை அதனால் மென்மையாக இட்லி தோசை இருக்காது.

—கனகவல்லி



இசை, நாட்டியம், நாடகம், கிராமியக் கலைகள் ஆய இந்திய நிகழ் கலைகளில் சிறப்புற்று விளங்கும் கலைஞர்களை ஆண்டு தோறும் விருதுகள் வழங்கி கௌரவித்து வருகிறது, மத்திய சங்கீத நாடக அகாடமி.

கடந்த 25 ஆண்டுகளாக இவ்விருது வழங்கும் விழா டெல்லியில் ஜனாதிபதி அல்லது துணை ஜனாதிபதி தலைமையில் நடந்து வந்துள்ளது. இவ்விழாவினை ஆண்டுதோறும் பிற மாநிலங்களின் தலைநகர்களில் நடத்த வேண்டும் என இச் சபை முடிவுக்கேற்ப, இவ்விழாவினை இவ்வாண்டு சென்னையில் நடத்தத் தீர்மானித்தது.

அந்த வகையில் இந்த ஆண்டின் விழா சென்னை மியூசிக் அகாடமியில் சமீபத்தில் மிகச் சிறப்பாக நடந்தது. இவ்விழாவினை மத்திய சங்கீத நாடக அகாடமி, சென்னை மியூசிக் அகாடமி மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றின் உறுதுணையுடன் நடத்தியது.

மூன்று முதுபெரும் கலைஞர்களான திரு. சி. மெக்தா, திருமுருக கிருபானந்த வாரியார், திரு. சியாராம் திவாரி, அகாடமியின் சிறப்பு விருதுகளான "ஃபெல்லோஷிப்" பைப் பெற்றனர்.

விருதுகள் பெற்ற பதினெட்டுக் கலைஞர்களில் இவர் பெண்கள். அவர்களில் இருவர் திருமதி சாரதா, திருமதி சுதா ராணி ரகுபதி ஆகியோர் சென்னையைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவின் வெற்றிக்கு சென்னை மியூசிக் அகாடமியின் தலைவர் திரு. டி.டி. வாசுவும் ஒரு காரணம். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பணியும் குறிப்பிடத்தக்கது.

—கே. எல். ராமன்

விடுதி கட்டிய பெண்மணிகள்

குரோம்பேட்டையிலுள்ள நேரு நகர் மாதர் சங்கம் வெற்றிகரமாக இருபத்து நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

குறைந்த வருவாய் உள்ள பெண்கள் வேலைக்குப் போகும்போது தங்கள் குழந்தைகளை விட்டுச் செல்வதற்காக மூன்று காப்பகங்கள் நடத்தப்படுகின்றன. மதியம் நல்ல சத்துணவும், கஞ்சியும் தினந்தோறும் கொடுக்கப்படுகிறது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக ஒரு விடுதி கட்ட வேண்டும் என்பது இவர்களின் அவா. அந்த வகையில் அரசாங்கத்தின் மானியம் பெற்று 'வேலை செய்யும் பெண்களுக்கான விடுதி' கட்டி முடிக்கப்பட்டு பிப்ரவரி 23-ம்தேதி, மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த விடுதி சென்னையை அடுத்துள்ள குரோம்பேட்டை நேரு நகரில், ஐயாசாமி தெருவில், அமைந்துள்ளது. மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பெயரால், "அன்னை இந்திராகாந்தி விடுதி" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இம்மாதர் சங்கத்தின் தலைவி திருமதி சாரதா வெங்கட்ராமனும் செயலர் திருமதி சந்திரா கிருஷ்ணமூர்த்தியும் இன்னும் பல வெற்றிகளைக் குவிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



திருமண மலர்

தஞ்சை ஜில்லா சோழிய வெள் ளாளர் அசைவம் 25 வயது. படித்த 5-3/4 அடி உயரம் அழகிய தோற்றம் ஆயில்ய நட்சத்திரம் 3-ம் பாதம், போதிய வருமானம் சொந்த வியாபாரம் செய்கின்ற மணமகனுக்கு இதே வகுப்பில் படித்த குடும்பப் பாங்கான அழகிய மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2067.

ஆத்ரேய கோத்திரம், பிரஹசரணம், ரோகிணி எஸ். எஸ். எல். சி. படித்த 24 வயது 5'.6'' அழகான குடும்பப்பாங்குள்ள காது கேளாத பெண்ணுக்கு நல்ல குணம், கருணை உள்ளம் கொண்ட, பரந்த மனப்பான்மை உள்ள மணமகன் தேவை. இதே மாதிரி குறை அல்லது மற்ற உடல் ஊனம் உள்ள பிராமண வகுப்பினர் மட்டுமே குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். கடைசிவரை வைத்துக் காப்பாற்ற வேண்டும். பெட்டி எண்: 2068.

தெலுங்கு பிராமண, ஹரிதஸ மூலம் 5'.7'' வயது 26, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் வேலை சம்பளம் ரூ. 1200/- சிவப்பு நல்ல வசதி லட்சணம் குணம் உள்ள பட்டதாரி வாலிபருக்கு அழகும், நற்பண்புகளும் பட்டதாரியும், தமிழ்நாட்டிற்கு மாற்றலாகக் கூடிய வேலையிலுள்ள தெலுங்கு பிராமணப் பெண் தேவை. பெட்டி எண்: 2069.

ஸ்மார்த்த தேசித (மராத்தி) — 29 வயது — மௌன பார்கவ கோத்திரம் — கேட்டை — பி. ஏ., பிராமணப் பெண்ணுக்கு வரன் தேவை. உட்பிரிவு சம்மதம். தட்டெழுத்து — டெலிபோன் பயிற்சி உண்டு — உத்தியோகம் பார்க்கத் தடையில்லை. குழந்தைகள் இல்லாத இரண்டாம் கல்யாணமானாலும் சம்மதம். குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2070.

வாணிய செட்டியார், வயது 24, படிப்பு பி. காம்., டைப்பிங் பாஸ், உயரம் 150 செ.மீ. அழகு, அடக்கம், வீட்டு வேலைகளில் தேர்ச்சி பெற்று நல்லதொரு வேலைக்கு முயற்சி செய்து கொண்டு இருக்கும் செவ்வாய் தோஷமுள்ள நடுத்தர குடும்பப் பெண்ணுக்கு நல்லதொரு உத்தியோகத்தில் உள்ள, பரந்த மனப்பான்மை கொண்ட இதே இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 2071.

சைவ வெள்ளாளப் பிள்ளை நடுத்தர வகுப்புக் குடும்பத்தைச் சேர்ந்த 23 வயது 5 அடி உயரம், மாநிறம், அழகு, குடும்பப் பாங்கு, பண்புள்ள எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த பெண்ணுக்கு, இதே இனம் வகுப்பைச் சேர்ந்த 30 வயதுக்குள் சம உயரமும் படிப்பும் நிரந்தர வேலையுமுள்ள மணமகன் தேவை. வரதட்சிணை இல்லை. நகையோ, பணமோ எதிர்பார்க்கக் கூடாது. ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். பெட்டி எண்: 2072.

பிராமின் வடமாள் கௌண்டின்ய கோத்திரம், பூரட்டாதி நட்சத்திரம், ரூபாய் 650/- சம்பாதிக்கும் சென்னை தொலைபேசி நிலைய கோர்டேக்கர் ஆகப் பணிபுரியும் வயது 31 பையனுக்கு வேலைக்குப் போகும் பெண் மட்டும் தேவை. உட்பிரிவு பாதகமில்லை. பெட்டி எண்: 2073.

சௌராஷ்டிரா குலம், வசதியுள்ள, பி. எஸ்ஸி., 24/170/1200, மத்திய அரசு உத்தியோகம் செய்யும் மணமகனுக்கு (ஒரே பையன்), அதே குலத்தைச் சேர்ந்த வசதியுள்ள, அழகும், குணமும் உள்ள + 2 அல்லது டிகிரி மணமகள் தேவை. ஜாதகம் விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 2074.

குடும்பப் பாங்கான எஸ். எஸ். எல். சி. வரை படித்த ஆரிய வைசிய நடுத்தர வகுப்புப் பெண்ணிற்கு (வயது 25, மகம் நட்சத்திரம், ல 12-ல் செவ்வாய், பலிசெட்ல கோத்திரம்) நிரந்தர நல்ல வேலையிலோ, நிலையான வருமானமுள்ள வியாபாரத்திலோ இருக்கும், நல்ல குணங்கள் பொருந்திய ஆரிய வைசிய மணமகன் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2075.

பெயர் ராஜேந்திரன், உயரம் 5' 7'' வயது 25, தெலுங்கு யாதவ குலம், செவ்வாய் தோஷம் உள்ள பெண் தேவை. மற்ற மதத்தினரும் விண்ணப்பிக்கலாம். படித்த பெண் தேவை. பெட்டி எண்: 2076.

கௌண்டின்ய கோத்திரம், ஆயில்யம் நட்சத்திரம், 29 வயது 5' 11'' உயரமுள்ள வடமாள் ஐயர் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் அதிகாரியாகப் பணிபுரியும் பையனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த படித்து அரசு உத்தியோகத்தில் இருக்கும் பெண் தேவை. பையனுக்கு லூகோடெர்மா உள்ளது. ஆனால் பாதகமில்லை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2077.

பாரத்வாஜம் வடமாள், கேட்டை, செவ்வாய் தோஷமுள்ள 27 வயது, அழகும், குணமுமுள்ள, குடும்பப்பாங்கான, காது சிறிதே மந்தமாயுள்ள பெண்ணிற்கு, 35 வயதிற்குள், சிறிதே ஊனமுற்றோர் அல்லது எந்த வில்லங்கமும் இல்லாத தாரமிழந்த நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. எளிய திருமணம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2078.

ஐயர், தெலுங்கு, முலகநாடு, கௌதம கோத்திரம், திருவாதிரை நட்சத்திரம், 32 வயதுள்ள 5½ அடி உயரம் ரூ. 1000/-க்குமேல் சென்னையில் தனியார் துறையில் மாத வருமானமுள்ள, வாலிபருக்கு, 27 வயதுக்குட்பட்ட வேலையிலுள்ள முலகநாடு வகுப்புப் பெண் தேவை. ஜாதகத்துடன் விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2079.

சோழிய வெள்ளாளர் வகுப்பைச் சேர்ந்த எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ள, அழகுள்ள, வேலைக்குச் செல்லாத, 26 வயது நிரம்பிய குடும்பப் பெண்ணுக்கு, அதே பிரிவைச் சார்ந்த, நல்லவேலையிலுள்ள வரன் தேவை. ஜாதகப் பொருத்தம் அ வ சி ய ம். தொடர்பு கொள்க. பெட்டி எண்: 2080.

கம்மவார் (கம்மா) நாயுடு வகுப்பைச் சேர்ந்த, 25 வயது நிரம்பிய, படித்த, மாநில அரசில் பணிபுரியும் அழகுள்ள, பண்புள்ள, குடும்பப் பெண்ணுக்கு, படித்த, நல்ல வேலையில் உள்ள, அதே வகுப்பைச் சார்ந்த, மணமகன் தேவை. பெட்டி எண்: 2081.

தெலுங்கு பிராமணன்—தெலகாணியம் (உட்பிரிவு பாதகமில்லை) ஆத்திரேய கோத்திரம், கேட்டை நட்சத்திரம், வயது 32, எஸ். எஸ். எல். சி. சிவப்பு நிறம், தையல், குடும்ப நிர்வாகம் இவற்றில் திறமை, அடக்கம் மிகுந்த பெண்ணுக்குத் தகுந்த படிப்பும் வேலையும் உள்ள அதே தெலுங்கு பிராமண 'வரன்' தேவை. உடனே நேரிலோ தபால்மூலமோ தொடர்பு கொள்க. பெட்டி எண்: 2082.

தெலுங்கு நியோகி கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த சென்னையில் தனியார் நிறுவனத்தில் ரூ. 700/– ஊதியம் பெறும் பி.யு.சி. படித்துள்ள 27 வயதுடைய திருவாதிரை நட்சத்திரப் பையனுக்கு மணமகளும், 22 வயதுடைய பி. ஏ. மூன்றும் ஆண்டு (அஞ்சல் வழியில்) பயிலும் கேட்டை நட்சத்திரமுடைய (மேலே குறிப்பிட்டுள்ள) பையனின் தங்கைக்கு மணமகனும் தேவை. பிற பிரிவுகளும் சம்மதம். பெட்டி எண்: 2083.

சொந்தமாகத் தொழில் செய்து மாதம் ரூ. 2500 சம்பாதிக்கும் வயது 31, உயரம் 5' 6" இந்தியன் நாடார் பையனுக்கு அதே பிரிவைச் சேர்ந்த வயது 23–க்கு உட்பட்ட எஸ். எஸ். எல். சி. வரையாவது படித்த மணமகள் தேவை. குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2084.

சுத்த சைவப் பிரிவைச் சேர்ந்தவரும் (வயது 40) உத்தியோகத்திலுள்ளவருக்கு 30 வயது உள்ள மறுமணம் புரிந்து கொள்ள விரும்பும் பெண் தேவை. பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் பரவாயில்லை. பெட்டி எண்: 2085.

தமிழ் தெரிந்த சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் 22 வயதான பி. காம். படிக்கும் கன்னட ஐயர் பெண்ணுக்கு அரசு/தனியார் துறையில் நல்ல நிரந்தரமான வேலையிலுள்ள வரன் தேவை. தமிழ் மற்றும் தெலுங்கு ஐயர் வகுப்பினரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2086.

வடமாள் பரத்வாஜம் விசாகம் 30 வயது எஸ். எஸ். எல்.சி. கோவையில் சிறு வியாபாரம் மாத வருமானம் ரூ. 600/– உள்ள ஐயர் பையனுக்கு பெண் தேவை. வேலை பார்க்கும் பெண்களுக்கு முதல் சலுகை. பெட்டி எண்: 2087.

வடமாள், காஸ்யபம், தமிழ் ஸ்மார்த்த பிராமணன், வடார்காடு 5.2" தனியார் துறை சம்பளம் 400/– மணமகளுக்கு அரசாங்க தனியார் துறை கம்பெனி, பேக்டரியில் நிரந்திர வேலையிலுள்ள, 33/44 வயது பிராமண மணமகன் தேவை. பிரஹசரணம் பாலக்காடு குழந்தைகள் இல்லாத இரண்டாம் கல்யாணமானாலும் சம்மதம். குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2088.

இந்து நாடார் வகுப்பைச் சேர்ந்த 27 வயதுள்ள பி. காம், 2 வருடம் படித்த தொழிலதிபருக்கு மேற்படி வகுப்பைச் சார்ந்த குடும்பப் பாங்கான மணமகள். ஜாதகத்துடன் முழு விவரங்களோடு உடனே எழுதவும். பெட்டி எண்: 2089.

வடமாள், ஷடமர்ஷண கோத்திரம், வயது 21, அஸ்வினி + 2 பாஸ், உயரம் 5.3" டைப்பிங் ஆங்கிலம் ஹையர், வேலையில்லாத, ஒல்லியான, நல்ல அழகுள்ள பெண்ணிற்கு, அரசாங்க, ரயில்வே, நல்ல கம்பெனி வேலையிலுள்ள மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகமும் விபரங்களும் அனுப்பவும். பெட்டி எண்: 2090.

அனுஷ நட்சத்திரம், கௌண்டின்ய கோத்திரம், பிரஹசரணம், 26 வயது பி. ஏ. பட்டதாரி, மத்திய அரசில் வேலையிலுள்ள பெண்ணிற்கு ஊக்கமும், நல்ல திறமையும் உள்ள வேலை பார்க்கும் பையன் தேவை. பெட்டி எண்: 2091.

ஸ்ரீவத்ஸ கோத்திரம், கிருத்திகை நட்சத்திரம், 23 வயதான, நல்ல தோற்றம் உள்ள, குடும்பப் பாங்குடைய பட்டதாரி ஐயர் பெண்ணுக்கு 26 முதல் 30 வயதுக்குட்பட்ட நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. ஐயர் பிரிவில் எந்த உட்பிரிவும் ஆட்சேபணை இல்லை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2092.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டு தற்போது சென்னைக்கு அருகே கிராமத்தில் சொந்தமாக வியாபாரம் செய்யும் மாநிறம் 162 செ.மீ. உயரம் எஸ். எஸ். எல். சி. வரை படித்த 26 வயதுள்ள இந்து நாடார் இனத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே இனத்தில் மணமகள் தேவை. பெண்ணின் படிப்பைப் பற்றி அவ்வளவாக அக்கறை இல்லை. பெட்டி எண்: 2093.

செங்குந்த முதலியார் வயது 33, பி.எஸ்ஸி., ஒரு ஆங்கிலப் பள்ளி கரெஸ்பாண்டெண்ட் மேலும் ஒரு சீட்டுரேடிங் கம்பெனி சூபர்வைசர் (பயிற்சி) – பொலிவுள்ள வரனுக்கு. நிரந்தரமாக, செகண்டரி கிரேடு ஆசிரியை அல்லது கிளர்க் வேலை பார்க்கும் பெண் தேவை. மற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2094.

வாணிய செட்டியார், வயது 31, உயரம் 153 செ.மீ. மாநிறம், படிப்பு பி.எஸ்ஸி. (எம். ஏ.) சதர்ன் ரெயில்வேயில் ரூ. 950/– சம்பளம் பெறும் மணமகனுக்கு அதே பிரிவைச் சேர்ந்த மாநில / மத்திய அரசில் பணிபுரியும், சைவத்தை விரும்பும் மணமகள் **தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.** தொடர்பு கொள்ள வேண்டிய பெட்டி எண்: 2095.

தென் ஆற்காடு மாவட்டத்தில் அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரியும் 30 வயதான அழகான நல்ல குடும்ப பிராமணப் பெண்ணுக்கு 40 வயதிற்குள் உத்தியோகம் அல்லது தொழில் செய்யும் நல்ல மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். மனப் பொருத்தம் ஏற்றுக் கொள்ளப்படும். எளிமையான திருமணம். பெட்டி எண்: 2096.

காஸ்யப கோத்திரம் தெலுங்கு பிராமண பிரிவைச் சேர்ந்த பெண்ணிற்கு 38–45 வயதிற்குள் பிராமண பிரிவைச் சேர்ந்த வரன் தேவை. பெட்டி எண்: 2097.

திருமணமலர்ப் பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 30/– தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பவேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் "விளம்பரதாரர், பெட்டி எண்.... c/o மங்கையர் மலர், கிண்டி, சென்னை-600032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

வன்னியர் குல க்ஷத்திரியர் கவுண்டர் உத்திராட நக்ஷத்திரம். மகர ராசி. கடக லக்னம். பெண்ணுக்கு மணமகன் தேவை. வயது 27. படிப்பு. பி. காம். வேலை ஆங்கில ஆசிரியை. சம்பளம் ரூ 1300/– உயரம் 5 அடி. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2098

காச்யபகோத்ரம். 29 வயது. மாத்வதேசஸ்தா. எம். ஏ. படித்து ஸிவில் ஸர்வீஸ் தேறி சென்ட்ரல் கவர்மெண்ட்டில் கிளாஸ் I கெஜட்டட் ஆபீஸர் ஆக இருக்கும் குடும்ப பாங்கான பெண்ணிற்கு வரன் தேவை. பெட்டி எண்: 2099

கௌண்டின்ய கோத்ரம் வடமாள் திருவோணம் **நக்ஷத்திரம்** 5' 4" உயரமுள்ள 36 வயதான தனியார் நிறுவனத்தில் நிரந்தரமான வேலையிலுள்ள பெண்ணிற்கு 42 வயதுக்குள் நிரந்தரமான வேலையில் (வருமானம்) உள்ள மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகம் மற்றும் விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2100

ஹரித கோத்திரம். பூசம் நட்சத்திரம். ப்ரஹசரணம். வயது 28. 5 அடி 2 அங். உயரம். டாட்டா கம்பெனியில் ரூ 1,500/–. பி. காம் போஸ்டலில் படிக்கும் பையனுக்கு சிவப்பும், படித்த, அழகான, குடும்பப்பாங்கான மணமகள் தேவை. வடமாள் ஏற்றுக் கொள்ளப்படும். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2101

வடகலை ஸ்ரீவத்ஸ கோத்ரம். பி. எஸ். ஸி. ஹிந்தி விஷாரத் படித்துள்ள குடும்பப் பாங்கான பெண்ணுக்கு வரன் தேவை. கேட்டை நக்ஷத்திரம்.

ஒரு முகப்பரு எப்போதுமே மற்றுமொரு முகப்பருவிற்கு வழி வகுக்கிறது. அதனால்தான் சிறந்த செயல்திறன் கொண்ட புதிய தரம் மிகுந்த கிளியரிசில் உங்களுக்குத் தேவை.

புதிய தரம்மிகுந்த கிளியரிசில்

பருக்களை நீக்க உதவுவதோடு அவை பரவாமலும் தடுக்கிறது.



முகப்பருக்கள் இயற்கையாகவே தோன்றி வளர்வது. அவை பருவ வயதில் தோன்றியும், மறைந்தும் காணப்படும். அதைப்பற்றிய கவலையோ அல்லது சட்டை செய்வதோ, அது போக வழி செய்யாது. நகத்தினால் பிடுங்குவதும் ஆபத்தானது. அதனால் நீங்கள் பருக்களைப் பரவச் செய்வதோடு, அதிக பருக்கள் தோன்றுதலுக்கும் காரணமாகிறீர்கள்.

டிரைக்ளோசினுடன் சேர்ந்த புதிய தரமான கிளியரிசில் எதனால் பருக்களின் தொல்லைக்குப் பலன் மிகுந்த பதிலைத் தருகிறது.

புதிய தரம் மிகுந்த கிளியரிசில் பருக்களை மட்டும் நீக்குவதில்லை. அவை பரவாமலும் தடுக்கிறது. ஏனென்றால் அது சிறப்பான ஆண்ட்டி-பாக்டீரியல் மருந்துக் கலவையைக் கொண்ட டிரைக்ளோசினைப் பெற்றது. டிரைக்ளோசினைக் கொண்ட புதிய தரமான கிளியரிசில், பருக்களை உண்டாக்கும் பாக்டீரியாக்களைத் தடுத்து, சருமத்தைப் புண்ணுறாது பாதுகாக்கிறது. அதனால் பருக்கள் பரவாது.

மிகச்சிறந்த பலனை புதிய தரமான கிளியரிசிலின் மூலம் எப்படிப் பெறுவது?


முதலில் முகத்தைக் கழுவுங்கள். பின்பு புதிய தரமான கிளியரிசிலை முகம் முழுவதும் தடவுங்கள். பருக்கள் உள்ள இடத்தில் கூடுதலாகத் தடவுங்கள்.

மிகச்சிறந்த பலனைப்பெற, புதிய தரமான கிளியரிசிலை தினமும் இரண்டு வேளைக்கு, காலையிலும், மாலையிலுமாக, குறிப்பிட்ட காலம் வரை உபயோகியுங்கள்.


டிரைக்ளோசினுடன் இணைந்த புதிய தரமான கிளியரிசில் ஒப்பற்ற மூன்று வழிகளைக் கொண்டது.



பருக்களைத் திறக்கிறது:



பாக்டீரியாக்களை எதிர்க்கிறது:



பருக்களை உலரச் செய்கிறது:

புதிய தரமான கிளியரிசில் மிருதுவாக்குவதோடு, பருக்கள் காய்வதாலான கறுப்புத் தோலினையும் தளர்த்துகிறது.



மேலும் வேனிஷிங் மெடிகேஷனும் கிடைக்கும்.

OBM/2856 TAM

27 வயது. செவ்வாய் தோஷம். தற்சமயம் வேலை இல்லை. தென்கலையும் சம்மதம். வரன் நிரந்தர வேலையில் உள்ளவராக இருக்க வேண்டும். பெட்டி எண்: 2102

30 வயது நிறைந்த பிராமின், பட்டதாரி, மத்திய அரசில் நல்ல வேலையில் உள்ள அழகான பெண் ணிற்கு வேலையில் உள்ள பரந்த மனப்பான்மையுள்ள மணமகன் தேவை. வரதட்சிணை இல்லை. எளிமை யான திருமணம், பட்டதாரி வேண்டும் என்ற அவ சியமில்லை. எம்மதமும் சம்மதம். வெளிநாட்டிலிருந் திருந்தால் நலம். மனைவி இல்லாதவரும் விண்ணப்பிக் கலாம். பெட்டி எண்: 2103.

தென்கலை, ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஸ்டேட் பாங்க் வேலையிலிருக்கும் 24, 5', விசாகம் மற்றும் 22, 5' உத்திராடம் நட்சத்திரமுள்ள பட்டதாரி சகோதரி களுக்கு பாங்க் வேலை அல்லது நல்ல வேலையிலுள்ள வரன்கள் தேவை. விருப்பமுள்ளவர்கள் விண்ணப் பிக்கவும். பெட்டி எண்: 2104

கலப்பு மண தம்பதியின் (தந்தை — பிராமணர், தாயார் — நாயர்) 32 வயதுள்ள வேலையிலுள்ள பெண்ணுக்கு தகுந்த வாழ்க்கைத்துணை தேவை. மலை யாள நாயர் பிரிவு விரும்பத்தக்கது. பெட்டி எண்: 2105

மணமகள் தேவை: பம்பாயில், மத்திய அரசில் 1500 ரூ சம்பாதிக்கும், பாரத்வாஜ கோத்ரம், திரு வாதிரை நக்ஷத்ரம், 39 வயதான, சங்கீதத்தில் விருப்ப முள்ள பெண்ணுக்கு ஏற்ற வரன் தேவை. விவாகம் நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: **Sri P.S.[illegible], "PARAG" Building, [illegible] Road, (Near Indian Gymkana) Matunga, Bombay-400019.**

செங்குந்தர் முதலியார் 21 வயது; 5' 3'' உயரம். பி. காம் தேறியுள்ள குடும்பப்பாங்கான அழகான, செவ்வாய் தோஷமுள்ள பெண்ணுக்குத் தகுந்த படித்து வேலையிலுள்ள அல்லது சொந்தத் தொழில்/ வியாபாரம் உள்ள மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஆர். சாமிநாதன், விநாயகர் கோவில் தெரு, மூளப்பாளை யம் (P.O) வழி ஈரோடு — 638002.

Proposals invited for Kasyapa Gothra Brahacharanam girl Thirtyone (Divorcee), passed S.S.L.C., Typewriting Higher, Shorthand Lower also an LIC Agent Seven years. Box No. 2106

Alliance invited from employed/educated girls from decent family for goodnatured, graduate boy (Vadamal) 33/160, earning Rs.1,300/- in a Mysore based Private Company. Sub-sect no bar. Apply with horoscope. Box No. 2107

Wanted Brahmin Doctor bridegroom of any subsects for Doctor Bride, 24 years, 153 cms. Poosam, Kowsika Gothram, Astasasthram. Reply to Box No. 2108

Seeking Alliance for slim good looking Vaama Girl of 22, 5' 1" Vathula Gothram. Star Moolam. Passed Nineth. Good in domestic work. cannot afford Dowry. Simple Marriage. Benevolent brahmins kindly respond. Box No. 2109

Alliance from Non-Koundinya Iyengar girls employed or unemployed Thengalai Iyengar Graduate, Pooradam, 40 years, Central Government Officer, Madras drawing 2000 p.m. Horoscope and details to Box No. 2110.

Suitable decent highly qualified well settled alliance for Srivatsa, Brahacharanam smart, Medico girl 31, (Postgraduate) government service. Doctors, C.A.'s preferable. Subsects acceptable. Early decent marriage. Box No. 2111

Alliance for fair Post Graduate Engineer 31, employed in U.S.A. (Previous marriage arranged in short notice dissolved innocent) from Graduate Non Baradhwaja Iyengar Girls. Please apply with Horoscope and family details Box No. 2112.

Alliance invited for Thenkalai Iyengar Girl Age 26. Stenographer in Central Government. Star: Kettai Gothram. Kashyab from parents of well settled boys. No dowry. Early simple marriage. Box No. 2113.

Alliance invited for Ashtasahasram, Kousika Gothram Girl of 25 years. Graduate. Goodlooking with Chewai Dosham from decently employed bridegrooms. Box No. 2114.

Wanted beautiful Graduate Bride around 25 for Cholia Velala Groom Handsome 32 Postgraduate employed in a very reputed company's Coimbatore branch drawing Rs.2,100/-. Bride from Coimbatore District preferred. Immediate marriage. Please contact Box No. 2115.

SOURASHTRA gentleman with D.M.E. and now at final year Engineering Graduation. Employed in Government organisation near Madras with Rs.1700/- Salary (Age: 28 years). Expert in a modern technology. Hails from a decent family of Madurai. Advt. is exclusively for a wider choice. Reply with full details All applications will be kept in strict confidence. Box No. 2116.

Alliance invited for fair slim Kasyapa Brahacharnam girl star Revathi employed in public sector undertaking at Hyderabad 30/152/1200. Subsect no bar. Contact with Horoscope to Box No. 2117.

Alliance invited preferably from employed Brides for Kaushika Brahacharnam groom star Revathi State Government employed 31/162/1000. Horoscope Government employed 31/162/1000. Contact with Horoscope to Box No. 2118.

Wanted fair beautiful goodlooking Bride from Pillai/ Mudaliar for Groom employed in Indian Foreign Service 28/165/1400 and to reside with him in Foreign Countries and New-Delhi entire service. Box No. 2119.

Wanted employed graduate alliance transferable to Trichy for Iyer Graduate Boy employed in Cement industry age 29/165/1100. Unemployed also considered. Subsects acceptable. Box No. 2120

Alliance for Velnadu Athreya Brahmin Boy Central Government employee 32 - 1400 - 158 Sewai Dosham from Bank or Central Government educated employed Girl. Subsect no bar. Send Horoscope. Box No. 2121

Alliance invited from Qualified decently employed Bridegroom for Salem based (Vegetarian) Vellala Pillai Graduate Girl. Star: Anusham. Age: 31 Years. Goodlooking, highly well up in Veena Recitals and Domestic Management. Box No. 2122

Wanted educated beautiful bride 21-24 years for Vadama Kousika smart Groom 29 years 5'-6" employed in Limited Company drawing Rs. 1,400/- Apply with full details to Box No 2123.

Alliance invited for Ashtasastram Girl aged 30, S.S.L.C. Passed, domestically trained, Bhatharayana Gothram, Star Punarpoosam. Subsects no bar. Write to Box No. 2124

Alliance invited with horoscope from Brahmin Vadagalai Iyengar very fair/fair, educated, unemployed Girl for a Boy of 29 years 5' 5" B. Com., Rohini, Baradwaja Gothram earning Rs.1,450/- in a reputed Company at Madras. Box No. 2125.

Alliance invited for Vadama Bharadhwaja poorattathi. Employed Iyer Girl 23/180 cm having no vision in right eye but unidentiable. Subsects no bar. Reply with Horoscope. Box No. 2126

Correspondence invited from fair goodlooking Iyer Girls for businessman S.S.L.C. own business at Madras 1000 Bachelor 31, 5.3/4' fair good personality. Widow/ Divorcee no bar. Box No. 2127

Alliance invited from well placed Grooms upto 36 for Palghat Iyer Girl 30, Fair, 5' 4" height, Bombay employed. First marriage annuled under unavoidable circumstances[.] Legally separated — No Encumbrance[.] Widowers/Divorcees also considered. Box No. 2128.

Alliance for Brahacharanam Palghat Aiyer Kaundinya Gothram Girl 29, Poosam. M.Sc., B.Ed. from decently employed Brahmin Iyer Boys. Subsect no bar. Reply Box No. 2129

Alliance for Brahacharanam Palghat Aiyer Kaundinya Gothram Girl 28, Vishakam. S.S.L.C. from decently employed Brahmin Aiyer Boys. Subsect no bar. Reply Box No. 2130

Alliance for Brahacharanam Palghat Aiyer Kaundinya Gothram Girl 27, Mrigasheersham. B.Com., from decently employed Brahmin Aiyer Boys. Subsect no bar. Reply Box No. 2131.

Alliances invited from Doctors, Ph.D's, Engineers, preferably settled in States 30-33 for a Convent educated fluent in English, M.Sc., Clinical Bio-Chemistry Passed Higher in French Language. Kaundinya Vadama only daughter, Pooram 28. Horoscope optional. Sub-sect okay. Box No. 2132.

Alliance invited from Bombay Grooms for Two Vathpola Kothram Vada Kalai Iyengar Girls — Thirty Years, SSC, Visagam Star, Five feet height, earning Rs.1,400/- and Twentynine years, Graduate, Sathayam Star, Five feet height, earning Rs.1,500/-. Apply to Mr. V.S. Rajagopal, 2/386, Asha, Telung Cross Road, No. 3, Matunga, Bombay-400 019.

Wanted Non-Bharadwaja Bridegroom for a 25 Years young non working Post Graduate Girl of fair complexion, Height 5' 2" Rohini Star. Bank employees, professionals preferred. Graduates no bar. Reply Box No.2133.

A young S. Indian Tamil Brahmin Girl (28) recently widowed, desires remarriage with a respectable widower within (45) with moderate means and of same Caste. Apply Box No. 2134.

திருநெல்வேலி சைவ வெள்ளாளர் (பிள்ளை) டாக்டர் 36 வயது. சொந்த கிளினிக் நடத்தும் பெண்ணுக்கு டாக்டர், இஞ்சினியர், பேங்க் ஆபீஸர், உதவிப் பேராசிரியர் போன்ற வேலையிலிருக்கும் மணமகன் தேவை. மணமகன் சென்னையில் வேலை பார்ப்பவராகவோ, சென்னையில் செட்டில் ஆக விரும்புவர்களாகவோ இருந்தால் நலம். பெட்டி எண்: 2135.

கௌண்டின்ய கோத்திரம். பிரஹசரணம் வயது 27. கேட்டை நக்ஷத்திரம் எம். எஸ். ஸி. பி. எட். பயின்று சென்னை பள்ளியில் ஆசிரியையாக பணிபுரியும் பெண்ணுக்கு, நன்கு படித்த நல்ல வேலையில் இருக்கின்ற அதே வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2136.

மத்திய வர்க்க வெள்ளாளப் பிள்ளை பெண் 27/160 மாநிறம் லக்ஷணம் தட்டெழுத்து சுருக்கெழுத்து தேர்ச்சியுள்ள பட்டதாரி தற்காலிக ஆசிரியை அவளது தமயன்மார் 32/165 பட்டதாரி சுயதொழில் 1200, 29/170 நுணுக்கத் தொழில் 1000, நல்ல தோற்றம் உள்ளோர்க்குத் தக்க வரன்கள் தேவை. பெட்டி எண்: 2137.

கேரள ஐயர், வடமாள், பாரத்வாஜ கோத்திரம், சதய நட்சத்திரம், தமிழ் நாடு அரசில் சுருக்கெழுத்தாளராகப் பணிபுரியும் 33 வயது குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, 35 வயது முதல் 40 வயதிற்குள், மத்திய/மாநில அரசிலோ அல்லது தனியார் துறையிலோ சென்னையில் நிரந்தரமான நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. உட்பிரிவுகள் பாதகமில்லை. எளிய திருமணம். ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2138.

இந்து வகுப்பைச் சார்ந்த 32 வயதுக்குட்பட்ட நிரந்தர அரசு நல்ல கம்பெனி உத்தியோகத்திலுள்ள, சென்னை சுற்று வட்டாரத்திலுள்ள மணமகன் தேவை. பெண் முதலியார் வகுப்பு — 25 வயது 5' 3'' பி.யூ.ஸி. டைப்ரைட்டிங் தமிழ், இங்கிலீஷ் ஹையர் தேர்வு பெற்றுள்ளாள். இந்து முற்பட்ட / பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மணமகன் இருக்கலாம். பெட்டி எண்: 2139.

Wanted suitable groom for convent educated M.B.B.S. well settled Doctor fair complexion. Palghat Iyer Girl 31, 163 cm. employed at Kerala — Preferably Doctor Ashtasdhasram — Shadamashrama Gothram — Thiruvadirai. Sub-cast no bar. Box No. 2140

Alliance invited from Non-Haritha employed Girls for Iyer groom., 33, DCE, working as Junior Engineer, State Govt undertaking, earning 1,500/-p.m. Star Uthiram. Uses hearing aid. Box No. 2141.

இந்து நாடார் 33 வயது பி. எஸ்.ஸி., சொந்த மாகத்தொழில்செய்யும்(என்.ஏ.எஸ்.எஸ்.ஏ.)மாதம் ரூ. 2000/— மேல் வரும்படியுள்ள வசதியான பையனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த எஸ். எஸ். எல். ஸி. படித்த 21/24 வயதிற்குட்பட்ட குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2142.

நல்ல இடத்துப் பெண், வயது 30, அழகும் வசதியும் உண்டு. கணவனை இழந்தவள். கையில் மூன்று வயதுப் பெண் குழந்தை உண்டு. குழந்தையின் முழுப்பொறுப்பும் பாட்டனாரைச் சார்ந்தது. சாதி, மதம் பிரச்னை இல்லை. கருணையும் முற்போக்கு மனமும் கொண்ட 40 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. பெட்டி எண்: 2143.

கௌசிக கோத்திரம் வடமாள் கும்பகோணம், புரம், வயது 32, எஸ். எஸ். எல். ஸி./டைப் ரைட்டிங் லோயர் பாஸ், 5 அடி 3 அங்குலம் பெண் நல்ல சிகப்பு, ஒல்லியான, குடும்ப வேலைகள் அனைத்தும்

தெரியும். நல்ல முறையில் கல்யாணம் செய்துகொடுக்கப்படும். ஜாதகம், விபரங்களுடன் தெரிவிக்கவும். பெட்டி எண்: 2144.

தெலுங்கு நியோகி வகுப்பைச் சேர்ந்த தனியார் துறையில் மாதம் ரூ. 600/– வருமானம் உள்ள —கௌண்டின்ய கோத்திரம், புனர்பூசம் நட்சத்திரம் 34 வயது, 5'.4" உயரம், பி. காம் வரை படித்துள்ள பையனுக்கு, பரந்த மனப்பான்மையுள்ள நல்ல வேலையிலுள்ள 25 –லிருந்து 26 வயது வரை உள்ள அதே வகுப்பைச் சேர்ந்த மணமகள் தேவை. ஒரே சகோதரி கலப்பு மணம் புரிந்தவர். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2145.

நாடார் பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவ வகுப்பைச் சேர்ந்த 36 வயதான வங்கியில் அதிகாரியாக இருக்கும் 5' 1" உயரமுள்ள பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த 38 வயதிலிருந்து 40 வயதிற்குள் நல்ல வேலையிலுள்ள பரந்த மனப்பான்மையுள்ள மணமகன் தேவை. பெண்ணின் பெற்றோர் பெண்ணின் பொறுப்பில் உள்ளனர். பெட்டி எண்: 2146.

பிரகசரணம், சங்க்ருதி கோத்திரம், வயது 26 மாநிறம், உயரம் 5' நட்சத்திரம் மூலம், எம். எஸ்.ஸி. (.அக்) படித்து (மத்திய அரசு) வேலைக்குச் செல்லும் பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2147.

திருநெல்வேலி சைவவேளாளர்பிள்ளைவகுப்பைச் சேர்ந்த, 25 வயது, நட்சத்திரம் பரணி, நல்ல நிறம், உயரம் 157 செ. மீ., படிப்பு எஸ். எஸ். எல். ஸி. வீட்டு வேலைகள் தையல் முதலியவற்றில் நல்ல தேர்ச்சி பெற்ற பெண்ணுக்கு நல்ல வேலையிலுள்ள தக்க வரன் தேவை. பெட்டி எண்: 2148.

Wanted bridegroom for Hindu Pallar Girl 25, IX Std. 5' 2". Tailoring couse passed. Only daughter. Three brothers employed in Govt/Bank Services. Working in Govt/Banks prefesuble. Box No. 2149

பாலக்காடு அய்யர், வடமாள், கௌண்டின்ய கோத்திரம், ரேவதி நட்சத்திரம், 39 வயது, நல்ல நிறமும், தோற்றமும் உடைய வில்லங்கமேதுமில்லாத விவாகரத்துப் பெற்றவருக்கு அதே இனத்தைச் சேர்ந்த குடும்பப்பாங்கான அழகிய மணமகள் தேவை. மணமகனுக்குச் சொந்தமாக வியாபாரம் மாத வருமானம் 2000/–க்குமேல். வரதட்சிணை, சீர் தேவையில்லை. கல்யாணம் எளிய முறையில் செய்தால் போதும். ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2150.

பாலக்காடு அய்யர், வடமாள், கௌண்டின்ய கோத்திரம் அனுஷ நட்சத்திரம், எஸ். எஸ். எல். ஸி., தட்டெழுத்து (ஹையர்) பாஸ். குடும்பப்பாங்கான 30 வயதுள்ள நல்ல நிறமுள்ள அழகான பெண்ணிற்கு பிராமண இனத்தை மட்டுமே சேர்ந்த உத்தியோகம் பார்க்கும் அல்லது சொந்தமாக வியாபாரம் செய்யும் வரன் தேவை. திருமணம் ஓரளவு நன்றாகச் செய்து கொடுக்கப்படும். பெட்டி எண்: 2151.

Wanted decently employed Iyengar Bride for Thirty two year Kousika Vadagalai Iyengar Boy Matriculate. Working in leading english daily in Madras city. Salary rupees 1,100/-. Star Anusham. Reply with Horoscope. Box No. 2152.

வடமாள், வாதூல கோத்திரம், அனுஷ நட்சத்திரம் வயது (40), வெளிநாட்டில் வேலை (ரூ. 15,000)–கு மேல் சம்பளம் வாங்கும் (5' 10") உள்ள பையனுக்கு (28–30) வயதுக்குள் உள்ள நல்ல அழகும், குணமும், பண்பும் உள்ள வேலைக்குப் போகாத பெண் தேவை. ஜாதகம் கிடையாது. நல்ல தகுதி உள்ளவர் முயற்சி பண்ணவும். பெண்ணின் விவரம் அனுப்பவும். நேரில் பார்த்துப் பிடித்தால் பாக்கி விவரம் தெரிவிப்போம். பையன் இன்னமயாயிருப்பான். பெட்டி எண்: 2153.

சோழிய வேளாள எக்ஸிகியூடிவ் இன்ஜினியரது, நல்ல சிவந்த நிறம், நல்ல தோற்றம் 31/145 செ.மீ., எம். காம். படிக்கும் பெண்ணிற்கு 29 வயதிற்குள், முதுகலைப் பட்டம் பெற்ற, செஜட் பதிவு பெற்ற அதிகாரியோ, இன்ஜினியரோ தேவை. உட்பிரிவுகள் சம்மதம், ஜாதகம், குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பரம் நல்ல தேர்வுக்கே. பெட்டி எண்: 2154.

ஸ்ரீ வத்ஸ கோத்திரம் வடமாள் ஐயர் வகுப்பைச் சேர்ந்த பி. எஸ். ஸி. சென்ட்ரல் கவர்ன்மெண்டில் (மினிஸ்ட்ரி ஆஃப் ஓர்க்ஸ்)ல் வேலை பார்க்கும் சம்பளம் 1000, வயது 29, சொந்த வீடு, நிலபுலன்கள் உள்ள மணமகனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த படித்த நல்ல குடும்பப்பாங்கான நல்லநிலையில் உள்ள மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2155.

சென்னையில், ஷெட்யூல் வங்கியில் வேலை செய்யும் பலிஜ நாயுடு, சம்பளம் சுமார் 1200/– சிவப்பு நிறம், உயரம் 5' 5" வயது 26, பி. ஏ. படித்த பெண்ணிற்கு சென்னையில் சுற்றுப்புறத்தில் வசிக்கும் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. ஜாதகம் குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2156.

கௌசிக கோத்திரம், சுவாதி நட்சத்திரம், 27 வயது, அய்யர் வடமாள், காது கேட்பது, பேசுவது இவைகளில் குறை. பேச்சு ஊனமுற்றோருக்கான விசேஷ பள்ளியில் பத்தாவது வரை படிப்பு, மத்திய அரசு தந்தி இலாகாவில் நிரந்தரமான உத்தியோகம், சமையல் செய்யத் தெரிந்த குடும்பப்பாங்கான பெண். வேலையில் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. மற்ற உட்பிரிவைச் சேர்ந்தவராயினும், காது கேட்பது, பேசுவது இவைகளில் குறை உள்ளவராயினும் சம்மதம். முழு விபரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2157.

ஹரித கோத்திர, வடமாள் ஐயர், விசாகம் 2–ம் பாதம் வயது 25, உயரம் 4' 9" எஸ். எஸ். எல். ஸி. வரை படித்துள்ள தையல் மற்றும் வீட்டு வேலைகள் நன்கு தெரிந்த செவ்வாய் தோஷமுள்ள (7–ல்) பெண்ணிற்கு அதே 7 (அ) 8–ல் தோஷமுள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2158.

வெளிநாட்டில் வேலை வாய்ப்புப் பெற இருக்கும் மதுரையில் உள்ள, பிராமண வகுப்பைச் சேர்ந்த (டி. எம். இ.) படித்த (என்ஜினியரிங்) தெய்வநம்பிக்கையும், இரக்க சிந்தனையும், பரந்த மனப்பான்மையும் கொண்ட இவருக்கு இரண்டு கண்களிலும் பார்வையிழந்த இரண்டு கால்களும் ஊனமுற்ற மணமகள் தேவை.

பெண் வீட்டார் விரும்பினால் உள்ளூரில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தாலும் சம்மதமே. ஜாதி பேதமில்லை.

குறிப்பு: இரண்டு கண்களிலும் பார்வையிழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பெட்டி எண்: 2159.

Wanted suitable groom for good-looking, medium complexioned, graduate Hindu girl of exemplary character, 23/147 cm/born to Sengunthar father and Adi-dravida mother – simple marriage. Box No. 2160.

Wanted suitable qualified decently employed Bridegroom between 30 to 34 for Vadama Iyer Girl, Naithrupakashyapa Star Puradam, 29 years beautiful goodlooking 5' 4" Graduate, Primary School Teacher. Well up in Music & Domestic duties. Decent marriage. Reply with Horoscope to Box No. 2161

மத்தியதரக் குடும்பம், கௌசிக கோத்திரம், வடமாள், அனுஷ நட்சத்திரம், முதல் பாதம், 10–வது படித்த, வேலை பார்க்காத, குடும்பப்பாங்கான 23 வயது பெண்ணுக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, குணவானான உத்தியோகம் அல்லது பிஸினஸில் உள்ள வரன் தேவை. பெட்டி எண்: 2162.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.



அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி
Pears
The original glycerine soap.
எடுப்பான தோற்றம் எழிலா
பியர்ஸுக்கு. அசல் கிளிஸரி
சோப் பியர்ஸ்.
பியர்ஸ் சருமக் கலை: கன்னிப் பருவக் க
LINTAS PS 63 2416 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரி

மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ப்ளிமெண்ட்ஸ் உங்கள் எடையைச் சற்றே குறைத்துக் காட்டுகிறது.




தேகப்பயிற்சி அல்லது உணவுக் கட்டுப்பாட்டால் எடையைக் குறைக்க நீங்கள் முயற்சி செய்யலாம். ஆனால் சாதுர்யமான இன்னொரு வழி இருக்கிறதே! இதற்குத் தேவையெல்லாம் சிறிது புத்திசாலித்தனம்தான்.

முதலில் நீங்கள் அணியும் ப்ளவ்ஸைப் பாருங்கள். சற்றே நீளமான ப்ளவ்ஸை அணிந்திருக்கிறீர்களா, அது மிகவும் இறுக்கமாக இல்லாது வயிற்றுப் பக்கத்தில் கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவும்.

கைகள் உள்ள ப்ளவ்ஸ் அணியுங்கள்—அதுவும் Cap அல்லது Raglan பாணியில் முழங்கை வரை. இறுக்கமாக இல்லாமலிருப்பது நல்லது. பஃப், ஃப்ரில் வேண்டாம். தொளதொளவென்று இல்லாமலிருக்க வேண்டும்.

ப்ளவ்ஸின் கழுத்துபற்றி...ஆழமான 'V' கழுத்து, 'U' கழுத்து, 3-பாயிண்ட் அல்லது ஸ்வீட் ஹார்ட் கழுத்து, சதுரக் கழுத்து போன்ற பாணிகளில் ப்ளவ்ஸ் அணியுங்கள். மூடிய கழுத்து உள்ள ப்ளவ்ஸ் வேண்டாம். அது உங்கள் எடையை அதிகப்படுத்திக் காட்டக்கூடும்.

லைட் கலர்களில் புடவைகளும் அதற்கேற்ற வண்ணங்களில் ப்ளவ்ஸ்களும் இருக்க வேண்டும். டார்க் கலர்கள் உங்களை ஒல்லியாக எடுத்துக்காட்டாது. பிரிண்ட்டெட் புடவைகள் அணியும்போது சிறிய பிரிண்ட்டாக இருப்பதே மேல். உங்கள் புடவையின் பிரிண்ட்டின் வண்ணத்திற்கேற்ப ப்ளவ்ஸ் நிறம் இருக்க வேண்டும்.



ஆம், நீங்கள் அடுத்து வாங்கும் ப்ளவ்ஸ் துணி மதுரை கோட்ஸ் வழங்கும் காம்ப்ளிமெண்ட்ஸாகவே இருக்கட்டும். அது அழகான நிறங்களில், நல்ல தரத்துடன் திகழ்வதை உணர்வீர்கள். 70-80 செ.மீ. காம்ப்ளிமெண்ட்ஸ் உங்கள் தோற்றத்தை மேலும் அழகாய் காட்டும். டீ-கை-டீ ரூபியா காட்டன், பாலியஸ்டர் மற்றும் பாலியஸ்டர் இழை கலந்த வகைகளில் இதுவே கச்சிதமான ப்ளவ்ஸ் துணி.

எல்லா முக்கிய துணிக் கடைகளிலும், மேட்சிங் செண்டர்களிலும் காம்ப்ளிமெண்ட்ஸ் என்று கேட்டு வாங்குங்கள்.

Complements

Madura Fabrics
மதுரை கோட்ஸின் ஒரு தரமான தயாரிப்பு.

மதுரை கோட்ஸ் வழங்கும் ப்ளவ்ஸ் துணி,
ஒவ்வொரு புடவைக்கும் ஒரு இணையான துணை.

Rediffusion/MF/2542 i TM

Registered as a Newspaper in Sri Lanka

